பக்கங்கள்

விலை ரூபா.25.00

www.onlineuthayan.com

# உதயன்

சுடர் 28 கதிர் 054 வள்ளுவர் ஆண்டு 2044 தை 06 சனிக்கிழமை (19/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily



புயலாகினர் குலசேகர மலிங்க 19

குற்றவியல் சட்டவரைவு மீண்டும் 22இல் சமர்ப்பிப்பு 17

அல்ஜீரிய படைகள் அதிரடித் தாக்குதல் 09

# அவசரமாக வருகிறது அமெ. உயர்மட்ட குழு

## நீதியரசர் பதவிநீக்கம், தீர்வு குறித்து முக்கிய பேச்சு

கொழும்பு, ஜனவரி 19

கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவை குற்றப் பிரேரணை மூலம் பதவியில் இருந்து அகற்றிய விடயம் தொடர்பில் சர்வதேச சமூகம் கடும் அதிருப்திகளை வெளியிட்டு வரும் நிலையில், அமெரிக்க அரசின் உயர் மட்ட இராஜதந்திரிகள் குழுவொன்று அவசர பயணமொன்றை மேற்கொண்டு இம்மாத இறுதியில் இலங்கை வரவுள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்திய பாதுகாப்பு அலுவலகத்தின் தெற்கு மற்றும் தெற்காசியப் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் விக்ரம் ஜே சிங் தலைமையிலான இந்தக் குழுவில்,

பார்க்க பக்கம் 04

இவர்களின் வருகை பிரதம நீதியரசர் ஷிராணி பதவிநீக்கப்பட்ட விவகாரத்தை மையப்படுத்தி அமைந்திருந்தாலும், எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மாநாடு குறித்தும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பிலும் இலங்கைத் தலைவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளனர் .



## அடுத்த வாரம் தென்னாபிரிக்கா செல்கிறது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு, ஜன.19

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் தென்னாபிரிக்காவுடன் அரசு பேச்சுகளை நடத்தியுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தென்னாபிரிக்காவுக்கான பயணமொன்றை மேற்கொள்ளவிருக்கின்றது.

இந்தத் தகவலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தியாவில் சிகிச்சை பெற்று நாடு திரும்பியுள்ள சம்பந்தன், நாளை ஞாயிற்றுக்கிழமை மட்டக் களப்புக்குச் சென்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் இராசமாணிக்கத்தின் 100 ஆவது ஜனன தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார். இதன் பின்னர் கொழும்பு திரும்பியதும் வெளிநாட்டுப் பயணங்கள் பற்றித் தீர்மானிக்கப்படும் என்றும், இதில் முதலாவதாகத் தென்னாபிரிக்கப் பயணம் அமையும்

பார்க்க பக்கம் 04

## மார்ச் மாதம் முடிவதற்கு முன் வடக்கில் 11 ஆயிரம் வீடுகள்

### இந்தியத் துணைத் தூதர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன.19

வடக்கில் எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் 11 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்று இந்திய துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய அரசின் நிதியுதவியுடன் வடக்கில் 43 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதில் முதற்கட்டமாக ஆயிரம் வீடுகள் 'பைலட்' திட்டத்தில் கட்டி முடிக்கப்

பார்க்க பக்கம் 04

## வெடிபொருள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.19

மந்திகை ஆனை விழுந்தான் வீதியிலுள்ள மதகுக்குள்ளிருந்து வெடிபொருளொன்று நேற்று மீட்கப்பட்டது.

மந்திகை பகுதி மக்களுக்கான குடிநீர் விநியோகக் குழாய்களைப் பொருத்தும் பணிகளில் ஈடுபட்ட பணியாளர்களே மதகுக்குள் வெடிபொருள் இருப்பதை கண்டுள்ளனர்.

இது தொடர்பில் இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாக அங்கு விரைந்த இராணுவத்தினர் வெடி பொருளை செயலிழக்

பார்க்க பக்கம் 04

## தமிழ்நாட்டு வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தில் முதலீடு

யாழ்ப்பாணம், ஜன.19

தமிழ்நாட்டு வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தில் தமது உற்பத்தி நிலையங்களை நிறுவவுள்ளனர். இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று அடுத்தவாரம் கைச்சாத்திடப்படவுள்ளது. இத்தகவலைத் தெரிவித்தார் யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் தலைவர் கே.பூரணசந்திரன்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

தமிழ்நாடு, மதுரை, தொழில் வர்த்தக சங்கத்தி

பார்க்க பக்கம் 04

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்று கோலாகலமாக ஆரம்பம்



யாழ்ப்பாணம்.ஜன.19

யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று வெள்ளிக்கிழமை கோலாகலமாக ஆரம்பமாகியது. நூற்றுக்கணக்கானோர் அதனைப் பார்வையிட்டு வருகின்றனர்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சிகள் அமைச்சு, இலங்கை வர்த்தக கைத்தொழில் சங்கங்களின் அமைப்பு, இலங்கை மாநாடுகள் பணியகம், யாழ். மாநகரசபை என்பன இந்திய

பார்க்க பக்கம் 04

## பஸ் குடைசாய்ந்து விபத்து: மன்னாரில் 12 பேர் காயம்

மன்னார், ஜன.19

இ.போ.ச. பஸ் கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்ததில் அதில் பயணித்த 12 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக் கிழமை முற்பகல் 9.30 மணியளவில் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியின்

பார்க்க பக்கம் 04

## அரசமைப்புத் திருத்தத்துக்கான விசேட தெரிவுக்குழு நியமனம்

கொழும்பு, ஜன.19

அரசமைப்பில் திருத்தங்களை உடனடியாகச் செய்யத் தீர்மானித்துள்ள அரசு இதற்காக விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்க முடிவு செய்துள்ளது.

இன்னும் இரண்டு வாரங்களுக்குள் இந்த தெரிவுக் குழு நியமனம் தொடர்பான

பார்க்க பக்கம் 04

## அரசமைப்புத் திருத்தம்; அரசை நம்ப மாட்டோம்

### ஐ.தே.க. கூறுகிறது

கொழும்பு, ஜன.19

அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் அமைச்சர்களிடையே முரண்பாடான கருத்துகள் நிலவுகின்றன எனத் தெரிவிக்கின்ற நிலையில், அரசின் இந்த யோசனை தொடர்பில் அதன்மீது தமக்கு

பார்க்க பக்கம் 04




அச்சு ஊடக அனுசரணை : உதயன்

பதிலைச் சொல்லுங்கள் - பரிசை வெல்லுங்கள்

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் 4 ஆவது சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ் உதயனின் காட்சியறையில் கேட்கப்படும் பொது அறிவுப் புதிருக்குச் சரியான விடையைச் சொல்லிவிட்டு அதிஷ்டச் சக்கரத்தைச் சுழற்றி உங்கள் பரிசை நீங்களே தெரிவு செய்யலாம்

காட்சியறை இல 10க்கு வாருங்கள் பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்று இரண்டாம் நாள்

Gold Sponsor

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸுக்கும், நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையிலான முதலாவது சந்திப்பு நேற்று நீதியமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது. (த)

## சட்டவிரோத மணல் அகழ்வு அரியாலை கிழக்கில் மும்முரம்

### தடுத்து நிறுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 19

அரியாலை கிழக்கு பிரதேசத்தில் அதிகரித்துள்ள சட்ட விரோத மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜே-90 கிராம சேவகர் பிரிவில் உள்ள கட்டடி என்னும் இடத்தில் உள்ள தனியார் காணியில் இருந்து இந்தச் சட்ட விரோத மணல் அகழ்வு தினமும் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சட்டவிரோதமான மணல் அகழ்வினால் இந்தப் பிரதேசம் தாழ்ந்த பகுதியாக மாறி கடல் நீர் மக்களின் குடியிருப்புக்குள் உட்புகும் அபாய நிலை தோன்றியுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனவே இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வை சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அ.இரவீந்திரதாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தினமும் இரவு 7 மணி தொடக்கம் அதிகாலை வரை 30 இற்கும் அதிகமான உழவு இயந்திரங்கள் மற்றும் கனரக வாகனங்கள் மூலம் இந்தப் பகுதியிலிருந்து எடுத்துச் செல்லப்படுகின்றது. இந்தச் சம்பவம் குறித்துப் பல தடவைகள் அப்பகுதி இராணுவப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்தும் அவர்கள் இதனைத் தடுக்கவில்லை என்றும் பிரதேசசபை உறுப்பினர் தெரிவித்தார். (த-17)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

யாழ்ப்பாணம்,ஜனா.19

வெள்ளப் பாதிப்புக்குள்ளான மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை அகில இலங்கை இந்துமாமன்றம் வழங்கிவருகிறது.

எனவே யாழ். மாவட்ட மாணவர்கள் இந்துமாமன்ற யாழ்.பணிமனையுடன்தொடர்பு கொண்டு தமக்கான உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அகில இலங்கை இந்துமா மன்ற பொதுச்செயலாளர் மு.கதிர்காமநாதன் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த இந்து அமைப்புக்கள் இந்த உதவிப் பொருள்களை வழங்கி வருகிறது. (16)

# ஜனநாயகம், நீதித்துறை குழிதோண்டிப் புதைப்பு

### மங்கள எம்.பி.குற்றச்சாட்டு

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிக்காமல் புதிய பிரதம நீதியரசரை ஜனாதிபதி நியமித்ததன் ஊடாக நாட்டின் சரித்திரத்தில் ஒருபோதும் இடம்பெறாத வகையில் ஜனநாயகமும், நீதித்துறையும் நாட்டின் தலைவரால் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. அத்துடன், பொதுநலவாய நாடுகளின் அடிப்படை நீதித்துறை சித்தாந்தத்தையும் ஜனாதிபதி கருத்திற்கொள்ளாது செயற்பட்டுள்ளார் என்று ஐக்கிய தேசியக் கட்சி கண்டித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்ட மொஹான் பீரிஸின் நியமனத்தை இலங்கையிலுள்ள புத்திஜீவிகள் அனைவரும் கண்டிக்கிறார்கள் என்று ஐ.தே.கட்சியின் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மங்கள சமரவீர விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஜனநாயகத்தையும், நீதித்துறையையும் மதிக்கும் இலங்கையிலுள்ள சகல மக்களும் இலங்கையின் சட்டபூர்வமான பிரதம நீதியரசராக கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவையே ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் இதனையும் மீறி புதிய பிரதம நீதியரசரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

இது நமது நாட்டின் சரித்திரத்தில் ஒருபோதும் நடைபெறாத வகையில், நாட்டின் தலைவரால் ஜனநாயகமும், நீதித்துறையும் குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளது.

பதவிக்குப் பொருத்தமற்ற ஒருவரை பிரதம நீதியரசராக நியமித்தது சர்வதேச ரீதியில் எமது நாட்டுக்கு தலைகுனிவையே ஏற்படுத்தும். நாட்டின் நீதித்துறைக்கு நெருக்கடியைக் கொடுத்து, தமக்கும் தமது பரிவாரங்களுக்கும் சாதகமான தீர்ப்புகளைப் பெறுவதற்காகவே, ஜனாதிபதி தமக்கேற்ற ஒருவரை பிரதம நீதியரசராக நியமித்துள்ளார். இந்நியமனமானது இலங்கையின் நீதித்துறைக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என சர்வதேச நீதிபதிகள் சங்கமும் சுட்டிக் காட்டியுள்ளது.

நாட்டின் அரசமைப்பு, ஜனநாயகம், நீதித்துறை, மக்களின் அடிப்படை உரிமைகள் ஆகியவற்றுக்கு சவாலான ஒரு காலத்தில் தான் நாம் வாழ்ந்து வருகின்றோம். நாட்டின் நீதித்துறைச் சுயாதீனத்தைப் பாதுகாக்கும் பிரதம நீதியரசரை பழி வாங்கும் நடவடிக்கை வரலாற்றில் முதல் தடவையாக இடம்பெற்றுள்ளது.

சாதாரண குற்றவாளிகளைவிடவும், மிகவும் கீழ்த்தரமான முறையில் நாட்டின் பிரதம நீதியரசர் நிந்திக்கப்பட்டுள்ளார். சட்டவிரோதமாக மற்றும் அரசமைப்புக்கு எதிராக நீதித்துறையின் உயரிய இடத்துக்கு ஒருவரை நியமிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்தமை பெரும் காட்டிக்கொடுப்பாகும்.



எனவே, நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கியமான தருணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாம், நாட்டின் அரசமைப்பு, நீதித்துறை சுயாதீனம், அதன் உண்மைத் தன்மை, அடிப்படை மனித உரிமைகள், சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் - எனத் தெரிவித்துள்ளார்.

## ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவை கரைச்சியில்


கிளிநொச்சி, ஜன. 19

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச மக்களுக்கு ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவைகள் இன்று சனிக்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் நடத்தப்படவுள்ளது.

இன்று சனிக்கிழமை அக்கராயன் மகா வித்தியாலயத்திலும், நாளை ஞாயிற்றுக்கிழமை இராமநாதபுரம் மகா வித்தியாலயத்திலும், நாளை மறுதினம் திங்கட்கிழமை கரைச்சிப் பிரதேச செயலக வளாகத்திலும் நடத்தப்படவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் நிலையத்தின் வேண்டுகோளின் பேரில் நடைபெறும் இந்த நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை புதுப்பித்தல், புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல் போன்ற சேவைகளுடன் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ் பிரதிகளுக்கும் பொதுமக்கள் விண்ணப்பிக்கலாமெனவும் நடமாடும் சேவை காலை 9.00 மணி தொடக்கம் பி.ப.4.00 மணி வரை இடம்பெறுமெனவும் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (த-9)

## கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய இராஜகோபுரத்துக்கு அடிக்கல்



கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் புதிய இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் மிகவும் சிறப்பாக நேற்று வெள்ளிக்கிழமை பூசைகளுடன் நடைபெற்றது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்ற அடிக்கல் நாட்டும் வைபவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கரைச்சிப் பிரதேச சபையின் உபதவிசாளர் வ.நகுலேஸ்வரன், பிரதேச சபை உறுப்பினர்கள், ஆலயத்தின் நிர்வாகத்தினர், பொலிஸ் அதிகாரிகள், பெருமளவான பக்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (த-426)

## 3 சிறுமிகள் துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் கடந்த வாரத்தில் மட்டும் மூன்று சிறுமிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பதாக யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவில் 14 வயதுடைய சிறுமியை காதலிப்பதாகக் கூறி நான்கு பேர் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் தொடர்ச்சியாகப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுமியரை துஷ்பிரயோகம் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளைஞர் ஒருவரும், செட்டிக்குளம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இன்னொரு இளைஞரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த-14)

## யாழ்.தகவல் திணைக்களத்துக்கு பொறுப்பாக பெரும்பான்மையினத்தவர்

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ்.மாவட்ட செயலகத்தின் தகவல் திணைக்களத்துக்கு பொறுப்பதிகாரியாகப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த 2004ஆம் ஆண்டு ஊடகத்துறை அமைச்சினால் தகவல் திணைக்கள அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. இருப்பினும் அந்த அலுவலகத்துக்குப் பொறுப்பாக யாரும் நியமிக்கப்படவில்லை.

கடந்த 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபை தேர்தலுக்காகத் தகவல் திணைக்களத்துக்கு தற்காலிகமாக இரண்டு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். முஸ்லிம், சிங்கள அதிகாரிகளே இவ்வாறு நியமிக்கப்பட்டனர். அவர்கள் தேர்தல் முடிந்ததும் கொழும்பு திரும்பிவிட்டனர்.

இதன் பின்னர் அதிகாரிகள் எவரும் நியமிக்கப்படாத நிலையில், தகவல் திணைக்கள செயற்பாடுகளும் முடங்கியிருந்தன.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை சிங்கள உத்தியோகத்தர் ஒருவர் தகவல் திணைக்களத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் பேசும் மக்களைக் கொண்டுள்ள யாழ்ப்பாணத்தில் சிங்கள அதிகாரிகள் தொடர்ச்சியாக நியமிக்கப்பட்டு வருகின்றனர். இந்த வருட ஆரம்பத்தில் யாழ்.மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு இரண்டு சிங்கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது தகவல் திணைக்களத்துக்கும் சிங்கள உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். (த-5)

## 32 தனியார் பஸ்களுக்கு ரூ.1500 தாமதக் கட்டணம்

யாழ்ப்பாணம், ஜன. 19

தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவினால் இதுவரையில் 32 தனியார் பஸ்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் தாமதத்துக்கான தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

யாழ்.பருத்தித்துறை வீதியில் தனியார் பஸ்களுக்கு இடையிலான போட்டியால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அத்துடன் தனியார் பஸ்களுக்கிடையில் மோதல்களும் ஏற்பட்டன. இதனால் தனியார் பஸ்கள் ஒருநாள் பகிஷ்கரிப்பையும் மேற்கொண்டிருந்தன.

அதனையடுத்து இந்த வருட ஆரம்பத்திலிருந்து தனியார் பஸ்களுக்கு ஒரு நிமிடத்துக்கான தாமதக் கட்டணமாக ஆயிரத்து 500 ரூபா அறவிடத் தீர்மானிக்கப்பட்டது. இதற்காகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் முக்கிய இடங்களில் நேரக் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

புதிய நடைமுறைகளின் பிரகாரம் பருத்தித்துறை மற்றும் அச்சுவேலி சங்கங்களைச் சேர்ந்த 32 தனியார் பஸ்கள் தாமதக் கட்டணமாக தலா ஆயிரத்து 500 ரூபாவைச் செலுத்தியுள்ளன.

இந்த நடைமுறை தொடர்ந்து பின்பற்றப்படுவதுடன் ஏனைய மார்க்க போக்குவரத்து சேவைகளிலும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த வேளையில் யாழ்.மாவட்டத்தை பாதுகாப்பதற்கு விசேட செயற்றிட்டம்

## இடர் முகாமைத்துவ நிலையம் தயாரிக்கிறது



யாழ்ப்பாணம், ஜன. 19

*2020 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தை அனர்த்தத்தில் இருந்து பாதுகாத்து, பாதுகாப்பான சமூகமாக மாற்றும் வகையில் செற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவி தெரிவித்தார்.*

இடர் முகாமைத்துவ உப குழுக்களுக்கிடையிலான கலந்துரையாடல் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர்மேஜர். ஜெனரல் ஹாமினி ஹெட்டியாராச்சி, யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் , பிரதேச செயலாளர்கள், திணைக் களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இடர் முகாமைத்துவத்தில் சகலரும் இணைந்து பணியாற்ற வேண்டும். தனித்து இடர் முகாமைத்துவ திணைக்களத்தினர் மட்டும் இந்த வேலைகளை முன்னெடுக்க முடியாது. அனர்த்த தணிப்பு வேலைகளில் சகலரும் பணியாற்றும் போது தான் வெற்றியடைய முடியும்.

யாழ். மாவட்டத்துக்கு 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான 3 வருடங்களுக்கு 120 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. இதில் கடந்த ஆண்டுக்கு 33 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 50 மில்லியன் ரூபா நிதி வழங்கப்படவுள்ளது என்று பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஹாமினி ஹெட்டியராச்சி தெரிவித்தார்.

இதன் பின்னர் உரையாற்றிய யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவி:-

2020 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தை பாதுகாப்பான சமூகமாக மாற்றும் வகையில் செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சகலரது ஒத்துழைப்புகளும் இருந்தால்தான் இந்த இலக்கை அடைய முடியும்.

இந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் உள்ள புத்திஜீவிகளை அழைத்து ஆய்வரங்கு ஒன்று இடர் முகாமைத்துவம் தொடர்பில் நடத்தப்படவுள்ளது.

எமது பிரதேசத்துக்கு சாத்தியமான செயற்றிட்டங்கள் எவை என்று ஆராய்ந்து அதற்கமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 473 பாடசாலைகளில் 30 பாடசாலைகளில் ஏற்கனவே இடர்முகாமைத்துவ தொண்டர்களை உருவாக்கியுள்ளோம்.

ஏனைய பாடசாலைகளுக்கு இந்த வருடம் உருவாக்கவுள்ளோம். அத்துடன் சகல பாடசாலைகளுக்கும் அனர்த்தப் பாதுகாப்புத் திட்டம் தயாரிக்கவுள்ளோம். வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகள் இந்த வருடமும் மேற்கொள்ளப்படவுள்ளது. -என்றார். (ம-5-7)

# நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்க குளங்களில் மீன்குஞ்சு வளர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19

வடமாகாணத்தில் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட குளங்களில் மீன் குஞ்சுகளை விடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாய கால்நடை அபிவிருத்தி காணி நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி அமைச்சின் வடமாகாண செயலாளர் யூ.எல்.எம்.ஹால்டின் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீன் குஞ்சுகளைத் தெரிவு செய்யப்பட்ட குளங்களில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நன்னீர் மீன்பிடி உற்பத்திக்கு வடமாகாணத்தில் 19 குளங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நன்னீர் மீன் உற்பத்தியில் அம்பாறை மாவட்டம் முதலிடத்தை வகிக்கின்றது. அந்த மாவட்டங்களில் இருந்து மீன்குஞ்சுகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்ட குளங்களில் விடவுள்ளோம்.

புதிதாக வவுனியா குளத்திலும் கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் குளத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்தையன் குளத்திலும் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

இதற்காக 28 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வருடம் முழுவதும் நீர்தேங்கி நிற்கக் கூடிய குளங்களே தெரிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார். (ம-13)

# வீதியின் அவல நிலையால் பயணிகள் பெரும் சிரமம்



பளை கச்சாய்வெளி - செல்வபுரம் ஊடாக புலோப் பளைக்குச் செல்லும் மூன்று கிலோ மீற்றர் நீளமான வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் உள்ளது. இதனால் அப்பகுதியில் வாழும் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் பெரும் சிரமங்களின் மத்தியில் தினமும் பயணித்து வருகின்றன.

கனரக வாகனங்களின் பாவனையால் சேதமடைந்து வீதியின் பல இடங்களில் குளம் போல் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வருவோரும் வாகனங்களில் வருவோரும் பெரும் சிரமம் அடைய வேண்டியுள்ளது.

இந்த வீதியைப் புனரமைத்து வழங்குமாறு உரிய அதிகாரிகளைப் பல தடவைகள் கோரியும் பலன் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஏ-9 வீதியிலிருந்து புலோப் பளைக்குச் செல்வதற்குக் குறுகிய பாதையாக முன்னர் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# காசோலை மோசடி குறித்து கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.19

திருநெல்வேலிப் பகுதியில் பணத்தைக் கடனாகப் பெற்றுவிட்டு வங்கியில் பணமீதி இல்லாத வெற்றுக் காசோலையை வழங்கி மோசடி செய்தது தொடர்பாகக் கடந்த 13 ஆம் திகதி கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காசோலை மோசடி செய்த நபர் திருநெல்வேலியைச் சேர்ந்த ஒருவரிடம் 2 இலட்சத்து 16 ஆயிரம் ரூபா பணத்தைக் கடனாகப் பெற்றுள்ளார்.

கடனைத் திருப்பிக் கேட்டபோது வங்கி வைப்பில் பண மீதியில்லாத வெற்றுக் காசோலையை வழங்கியுள்ளார்.

**காசோலை மோசடி செய்த நபர் திருநெல்வேலியைச் சேர்ந்த ஒருவரிடம் 2 இலட்சத்து 16 ஆயிரம் ரூபா பணத்தைக் கடனாகப் பெற்றுள்ளார்.**

கொக்குவில் பகுதியைச் சேர்ந்த அந்த நபர் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் வங்கிக்கு நேரடியாகச் சென்று விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

இதே வேளை, கோப்பாய் பிரதேசத்தில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி நபர் ஒருவரிடம் 11 இலட்சத்து 77 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்று வேலை பெற்றுக் கொடுக்காமல் ஏமாற்றப்பட்டமை தொடர்பாகக் கடந்த 2 ஆம் திகதி கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பலாலி வீதியைச் சேர்ந்தவர். இவர் தற்போது தலைமறைவாகியுள்ளதால் இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று கூறப்பட்டது. (ம-14)

# தாளையடி உப தபாலகத்தை திறந்து வைக்கக் காத்திருப்பு

வடமராட்சி கிழக்கு தாளையடியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உபதபாலகக் கட்டடத்தைத் திறந்து வைப்பதற்கு மத்திய தபால் திணைக்களத்தின் அனுமதிக்காக யாழ். பிரதம தபாலகம் காத்திருக்கிறது என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தப் பகுதியில் சுமார் ஐந்து மில்லியன் ரூபா நிதியில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது.

இந்தக் கட்டடம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு அதன் பணிகள் பூர்த்தியடைந்த நிலையில் இருந்தும் அதை திறந்து வைப்பதற்குத் தபால் திணைக்களம் இதுவரை அனுமதி வழங்கவில்லை.

தற்போது இந்தத் தபாலகம் இந்தப் பகுதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் செயற்பட்டு வருகின்றது.

இந்தக் கட்டடத்தை விரைவாகத் திறந்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-17)

# 24 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் குடாநாட்டில் கடந்த வாரத்தில் திருட்டு

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தகவல்

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ். குடாநாட்டில் கடந்த வாரத்தில் மட்டும் 24 லட்சத்து 67 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பெறுமதி மிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புத்தூர், நவக்கிரி பகுதியில் கடந்த 13 ஆம் திகதி வீடு புகுந்து 9 லட்சம் பெறுமதியான தங்க நகைகளும் 5 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளன.

நல்லூர் நாவலர் வீதியில் கடந்த 13 ஆம் திகதி வீதியால் சென்று கொண்டிருந்த பெண்ணின் ஒரு லட்சத்து 80 [illegible] பெறுமதியான தங்கச் [illegible] யாடப்பட்டுள்ளது.

அரியாலைப் பகுதியில் கடந்த 16 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்ற நபர்கள் வீடு புகுந்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைச் சேதப்படுத்தியுள்ளதுடன் அங்கிருந்த மோட்டார் சைக்கிளையும் அபகரித்துச் சென்றுள்ளனர். கொடிகாமம் பிரதேசத்தில் கடந்த 12 ஆம் திகதி கடை ஒன்றை உடைத்து 5 லட்சம் பெறுமதியான ரயர் மற்றும் ரியூப்புகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

கோப்பாய் பிரதேசத்தில் கடந்த 12 ஆம் திகதி வீடொன்றை உடைத்து 39 ஆயிரம் ரூபா பெறுமதியான ரீ.வி. திருடப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் கடந்த 15 ஆம் திகதி வீடு ஒன்றில் இருந்து தங்க நகை மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் மூன்றும் திருடப்பட்டுள்ளன. மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த 9 ஆம் திகதி 12 ஆயிரம் ரூபா பணம் ஆலய உண்டியல் உடைத்து திருடப்பட்டுள்ளது.

[illegible] கோயிலடியில் வீடொன்றில் கடந்த 11 ஆம் திகதி 27 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி திருடப்பட்டுள்ளது.

வேலணைப் பகுதியில் கடந்த 14 ஆம் திகதி வீடொன்றை உடைத்து 3 லட்சத்து 87 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டைப் பகுதியில் கடந்த 13 ஆம் திகதி வீதியில் சென்ற பெண் ஒருவரின் ஒன்றரைப் பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பிரதேசத்தில் கடந்த 10 ஆம் திகதி வீடு புகுந்து ஒருவரைத் தாக்கியதுடன் ஒரு லட்சம் 92 ஆயிரம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி வாதரவத்தை வீரவாணி பகுதியில் கடந்த 13 ஆம் திகதி கடையொன்றில் 90 ஆயிரம் பெறுமதியான இரும்பு மற்றும் குழாய்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டு, கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 10 நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-14-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மாநாடுகள் அனைத்திலும் இலங்கையை உலகம் புறக்கணிக்கும்

## மௌபிம மக்கள் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.19

''சர்வாதிகார ஆட்சியினூடாக மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை அரசு தொடர்ந்தும் மேற்கொள்ளுமாயின், பொது நலவாய நாடுகளின் அரச தலைவர்களின் உச்சி மாநாட்டில் மட்டுமல்ல, உலகில் இடம்பெறுகின்ற அனைத்து மாநாடுகளிலும் உலக நாடுகள் இலங்கையைப் புறக்கணிக்கும்.''

- இவ்வாறு மௌபிம மக்கள் கட்சியின் தலைவர் கலாநிதி ஹேமகுமார நாணயக்கார தெரிவித்தார்.

உலகில் எந்தவொரு நாட்டிலும் மனித உரிமை மீறப்படுமானால், மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கின்ற நாடுகள் அந்த நாட்டுக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுக்கும். இந்த நிலை நமது நாட்டுக்கும் ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உலகிலுள்ள ஒவ்வொரு நாடுகளும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். இதைத் தவிர்த்து எந்தவொரு நாடும் மனித உரிமைகளை மீறும் நடவடிக்கைகளில் ஈடுபடுமானால், அந்த நாட்டுக்கு எதிராக உலக நாடுகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும். தற்போதே நமது நாட்டுக்கு எதிராக இவ்வாறான எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. இன்னும் சிறிது காலத்தில் சர்வதேசத்தின் முழுமையான எதிர்ப்புகள் எமது நாட்டுக்கு எதிராக விடுக்கப்படும்.

பதவிநீக்கம் செய்யப்பட்ட பிரதம நீதியரசர் விவகாரத்தால் இலங்கை மீது அதிருப்தி கொண்டுள்ள சில மேற்குலக நாடுகள், எதிர்வரும் நவம்பர் மாதம் இங்கு நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் உச்சிமாநாட்டைப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேபோல, ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரிலும் உலக நாடுகள் இலங்கையைப் புறக்கணிக்கலாம்.

அதுமட்டுமல்லாது, சர்வாதிகார ஆட்சியினூடாக இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தும் இடம்பெறுமானால், உலகில் இடம்பெறுகின்ற எல்லா மாநாடுகளிலும் உலக நாடுகள் இலங்கையைப் புறக்கணிக்கும்.



அவ்வாறு உலக நாடுகள் இலங்கையைப் புறக்கணித்தால், அது நாட்டு மக்களுக்குத்தான் பேராபத்தை ஏற்படுத்தும்.

நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் சர்வாதிகாரப் போக்குடன் கூடிய ஆட்சியால் உலக நாடுகள் எம் மீது பொருளாதாரத் தடையையும் விதிக்கலாம். அவ்வாறு பொருளாதாரத் தடைவிதிக்கப்பட்டால் நாட்டு மக்கள் தான் பட்டினியில் வாடி சாகவேண்டியேற்படும்.

எனவே, இத்தகைய பேராபத்துகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்க அரசு செயற்படவேண்டும். இதற்காக அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தாம் தயாராக உள்ளோம். மக்கள் எம்முடன் கைகோர்த்து செயற்படவேண்டும் - என்றார் ஹேமகுமார நாணயக்கார. (சி)

## வெடிபொருள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கச் செய்ததுடன் அதை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். குடிநீர் விநியோகக் குழாய்களை நிலத்துக்குள் தாழ்ப்பதற்கு வீதியோரம் மண் அகழ்ந்தபோதே மேற்படி வெடிபொருள் புதைந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (16-8)

## பஸ்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இரண்டாம் கட்டைச் சந்தியில் இடம்பெற்றது.

கரிசல் கிராமத்திலிருந்து தாராபுரம் பிரதான வீதியூடாக மன்னார் பஸ் நிலையத்தை நோக்கி வந்த இ.போ.ச. பஸ்ஸே விபத்துக்குள்ளாகியது. சம்பவத்தில் காயமடைந்த 4 பெண்களும், 8 ஆண்களும் மன்னார் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(க-12)

## தமிழ்நாட்டு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

னர் தமது உற்பத்தி நிலையங்களை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு முன்வந்துள்ளனர். இதன்மூலமாக இங்குள்ளவர்களுக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். பயிற்சிகளையும் வழங்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும்.

இதுதொடர்பில் ஒப்பந்தம் ஒன்று அடுத்தவாரம் கைச்சாத்திடப்படவுள்ளது. வர்த்தக கைத்தொழில் மன்றத்துடன் அவர்கள் இந்த ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடவுள்ளனர்.

காஞ்சிபுரம் பட்டு, சாரம் என்பவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களே முதலில் இங்கு அமைக்கப்படவுள்ளன. தொடர்ந்து ஏனைய உற்பத்தி நிறுவனங்களும் இங்கு முதலீடு செய்ய உள்ளன. முதலீடு செய்யும் பணிகள் இந்தவருடமே ஆரம்பிக்கப்பட்டு விடும்-என்றார். (த-4)

## அரசமைப்பு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

முன்னேற்பாடுகள் ஆரம்பித்து விடுமென அரச பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த தெரிவுக்குழுவானது நீதித்துறை மற்றும் நாடாளுமன்றம் ஆகிய இரண்டுக்குமிடையில் நிலவும் அதிகார முரண்பாடுகள் குறித்து கவனம் செலுத்தி திருத்தங்களை செய்யுமென்றும், அரசமைப்பு முழுமையாகத் திருத்தப்படமாட்டதென்றும் அந்த பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

மேற்படி நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பிலும், அதற்கான உறுப்பினர் நியமனம் தொடர்பிலும் சபாநாயகர் விரைவில் கட்சித் தலைவர்களுக்கு அறிவிப்பாரென தெரிவிக்கப்படுகின்றது.

அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் அமைச்சர்களிடையே முரண்பட்ட கருத்துகள் நிலவுகின்றன எனக் கூறப்படும் நிலையில், அவசர அவசரமாக திருத்தங்களை மேற்கொள்ளும் நடவடிக்கையில் அரசு இறங்கியுள்ளது.

அதற்காகவே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிக்க அரசு முடிவு செய்து அதற்கான முன்னேற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், என்னென்ன திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று இதுவரையில் இனங்காணப்படவில்லை என அரசு அறிவித்துள்ளது.

## அரசமைப்பு திருத்தம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நம்பிக்கை இல்லை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

அத்துடன், அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வது குறித்து தமது தெளிவான நிலைப்பாட்டை அரசு அறிவிக்கவேண்டும் என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்ற அரசின் யோசனை தொடர்பில் எமக்கு அதன் மீது நம்பிக்கை இல்லை. தற்போதைய சூழ்நிலையில் நாட்டுக்கு என்ன தேவையோ அது தொடர்பில் அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும்.

அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்று அரசு, தமது நலனுக்காகவே கூறுகிறது. எனவே, இது விடயத்தில் நாம் அரசுக்கு ஆதரவளித்தோமெனில், நாம் அரசுக்குச் சார்பாகச் செயற்படுகின்றோம் எனக் கூறுவர். அதற்கு நாம் ஒருபோதும் தயாரில்லை.

அரசமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமெனில், அது எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது என்பது தொடர்பில் தமது நிலைப்பாட்டை அரசு தெளிவாக எடுத்துக்கூறவேண்டும்.

அரசு தமது நிலைப்பாட்டைத் தெளிவாக அறிவிக்காமல் நாம் இது தொடர்பில் கருத்துக் கூறமுடியாது. தமது நிலைப்பாட்டை அரசு தெளிவாக அறிவித்தால் மட்டுமே, அது தொடர்பில் தாம் பரிசீலிக்கலாம் - என்றார் திஸ்ஸ. (சி)

## மார்ச்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பட்டுள்ளன. எஞ்சிய வீடுகளை பயனாளிகளிடம் பணத்தைக் கொடுத்து அவர்கள் மூலமே அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய வடக்கில் இந்திய வீட்டுத் திட்டப் பணிகள் முகவர் நிறுவனங்கள் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் கடந்த வருட இறுதிவரையில் ஐ.எப்.ஆர்.சி. நிறுவனத்தால் ஆயிரத்து 108 பேருக்கு முதற்கட்ட வீட்டுத் திட்ட நிதி வழங்கப்பட்டுள்ளது. 115 பேருக்கு இரண்டாம் கட்ட நிதி வழங்கப்பட்டுள்ளன.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் 320 பேருக்கு முதற்கட்ட நிதியும், 108 பேருக்கு இரண்டாம் கட்ட நிதியும் வழங்கப்பட்டுள்ளது. யு.என். ஹபிற்றார் நிறுவனத்தால் ஆயிரத்து 204 பேருக்கு முதற்கட்ட நிதியும், 299 பேருக்கு இரண்டாம் கட்ட நிதியும், 2 பேருக்கு மூன்றாம் கட்ட நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 6 பேர் வீடுகளை முழுமையாக நிர்மாணித்துள்ளனர்.

பெரும்பாலும் எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக வடக்கில் 11 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்து முடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-5-13)

## அடுத்தவாரம்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

என்றும் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அந்நாட்டின் அழைப்பை ஏற்றே இந்த பயணம் மேற்கொள்ளப்படுகிறது என்று மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அடுத்தவார இறுதிக்குள் தமிழ்க் கூட்டமைப்பு தென்னாபிரிக்காவுக்கு பயணம் செய்கிறது என்றும் மாவை சேனாதிராஜா உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, தென்னாபிரிக்கப் பயணம் பற்றி கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், ''தென்னாபிரிக்கா நடுநிலை வகிக்கவில்லை, தனது பட்டறிவுகளையே எம்முடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றது. எங்களோடும் அரசுடனும் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவே தென்னாபிரிக்கா விரும்புகின்றது. இந்த அனுபவத்தை பெற்றுக்கொள்வதில் எமக்கு எவ்வித தயக்கமும் இல்லை. இதனால் நன்மை மட்டுமே ஏற்படும். இதற்கு எமது சம்மதத்தையே தெரிவித்துள்ளோம்'' - என்றார். (சி)

## அவசரமாக

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்நிலை அதிகாரி ஜிம் பிறவுன் உட்பட மூத்த அதிகாரிகள் அடங்குகின்றனர் என அறியமுடிகின்றது.

இந்தப் பயணத்தின் போது இலங்கை நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் சட்டவாக்கத்துறைக்கும் இடையிலான மோதல் மற்றும் பிரதம நீதியரசர் பதவிநீக்க விவகாரம் ஆகியவை குறித்து இலங்கையிடம் உரிய விளக்கங்களை இக்குழு கோரவுள்ளது என்று தெரியவருகிறது.

இவர்களின் விஜயம் பிரதம நீதியரசர் ஷிராணி பதவிநீக்கப்பட்ட விவகாரத்தை மையப்படுத்தி அமைந்திருந்தாலும், எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மாநாடு குறித்தும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பிலும் இலங்கைத் தலைவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளனர் எனத் தெரியவருகிறது.

இலங்கையின் தற்போதைய மனித உரிமை நிலைவரங்கள், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுலாக்கம், கடந்த ஜெனிவா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்பவை தொடர்பிலும் இக்குழு, இலங்கை அரசிடம் கேள்வி கேட்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில், பிரதம நீதியரசர் பதவிநீக்க விவகாரம் சர்வதேச நாடுகளால் பூதாகரப்படுத்தப்படும் நெருக்கடி இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நிலையில், அமெரிக்கக் குழுவின் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஜனாதிபதி பராக் ஒபாமா இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் இலங்கைக்கு வரும் முதல் குழு இது என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து பேச்சுகளை நடத்தவுள்ள இந்தக் குழு வடக்கிற்கான விஜயமொன்றையும் மேற்கொள்ளும் எனத் தெரிகிறது.

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது கிடப்பில் போடப்பட்டுள்ள தீர்வுத் திட்டப் பேச்சுகளை மீள ஆரம்பிக்குமாறு அமெரிக்கக் குழு வலியுறுத்தும் என்றும் அறியவருகிறது.

அத்துடன், இருநாட்டு பாதுகாப்பு ஒப்பந்தங்கள் மற்றும் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தல் போன்ற விடயங்கள் குறித்தும் இந்தக் குழு பேச்சு நடத்தவுள்ளது. (சி)

## சர்வதேச...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

துணைத் தூதரக ஒத்துழைப்புடன் இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.

365 காட்சியறைகளில் இந்தக்கண்காட்சி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய நிறுவனங்கள் 38 , இந்திய துணைநிறுவனங்கள் 49, இந்தோனேசிய நிறுவனங்கள் 2, மலேசிய நிறுவனங்கள் 2 என்பனவும் இலங்கை நிறுவனங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

இந்திய நிறுவனங்களில் தமிழ் நாடு, மதுரைவர்த்தக தொழிற்துறை மன்றத்தின் 29 காட்சியறைகளும் உள்ளடங்குகின்றன.

கண்காட்சியின் ஆரம்பநிகழ்வு யாழ். பொது நூலககேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் இடம்பெற்றது. அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, றிஷாட் பதியுதீன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறைமன்றத் தலைவர் கே.பூரணச்சந்திரன், இலங்கை வர்த்தக தொழிற்துறை மன்றத் தலைவர் குமார் மல்லிமராய்ச்சி, இந்தியத் துணைத்தூதர் வ.மகாலிங்கம், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, இலங்கை கண்காட்சி மாநாடுகள் வணிகப் பணிப்பாளர் இம்ரான்ஹசன் உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

யாழ். பொது நூலகத்தில் இடம் பெற்ற ஆரம்பநிகழ்வில் அமைச்சர்கள் உட்பட பலர் உரையாற்றினார்கள். அதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் அனைவரும் பொது நூலகத்திலிருந்து ஊர்வலமாக மேளதாளங்களுடன் யாழ். துரையப்பா விளையாட்டரங்குக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு அமைச்சர்கள் உட்பட விருந்தினர்கள் பலர் இணைந்து நாடாவை வெட்டிக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் சிலருக்கு அன்பளிப்பாக உதைபந்துகள் கையளிக்கப்பட்டன. அதனைத் தெடர்ந்து விருந்தினர்கள் காட்சி அறைகளுக்குச் சென்று பார்வையிட்டனர். கண்காட்சி ஆரம்பித்ததிலிருந்து நூற்றுக்கணக்கானோர் கண்காட்சியைப்பார்வையிட்டு வருகின்றனர். இந்தக்கண்காட்சி இன்றும், நாளையும் தொடர்ந்து நடைபெறுகிறது. (த-4-17-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அபகரிப்பு நடவடிக்கை கிளிநொச்சியில் அதிகரிப்பு

கிளிநொச்சி,ஜன.19

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் உள்ள அரச மற்றும் தனியார் காணிகளை சட்ட விரோதமான முறையில் அபகரிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் உள்ள பல தனியார் காணிகளின் உரிமையாளர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். அவர்களது உறவினர்களின் பராமரிப்பில் உள்ள காணிகளே அரச ஆளும் தரப்புக் கட்சிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் சிலரால் அபகரிக்கப்படும் சம்பவங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. காணிகளைப் பராமரித்து வரும் உறவினர்கள் அச்சுறுத்தப்பட்டும் வருகின்றனர்.

அண்மையில் கிளிநொச்சி தொண்டமான் நகர் கிராமத்திலும் ஜெயந்தி நகர் கிராமத்திலும் இவ்வாறான இரு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதனை விட கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் இருந்து உருத்திரபுரம் வரை நீரைக் கொண்டு செல்லும் பிரதான நீர்ப்பாசன வாய்க்காலின் இரு மருங்கிலும் உள்ள நீர்ப்பாசன திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள் அரசியல் கட்சி சார்ந்தவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் தற்போது வணிக நிலையங்களும் இயங்கி வருகின்றன.

இவ்வாறு இரத்தினபுரம் கழிவு வாய்க்காலுக்கு ஒதுக்கப்பட்ட நிலமும் அபகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காணிகளை அபகரிக்கும் சம்பவங்கள் கிளிநொச்சியில் அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

(க-6)

## வவுனியா தமிழ்ப் பாடசாலையின் வகுப்பறையில் டெங்கு நுளம்புகள்

### அழிக்கும் நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர்

நெளுக்குளம், ஜன.19

வவுனியாவிலுள்ள பாடசாலையின் வகுப்பறைகளில் காணப்பட்ட டெங்கு நுளம்புகள் சுகாதாரப் பிரிவினரால் அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி வவுனியா தமிழ் வித்தியாலயத்தின் வகுப்பறைகளில் டெங்கு நுளம்புகள் இருப்பதை அறிந்த சுகாதாரப் பிரிவினர் அங்கு சென்று அவற்றை அழிக்கும் பொருட்டு புகையூட்டலில் இறங்கினர். காலை 8.30 மணியளவில் பாடசாலை மாணவர்கள் வகுப்பறையில் இருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் ஒன்றரை மணித்தியாலங்களாக பாடசாலை வளாகம் முழுவதும் புகையூட்டப்பட்டது.

மேலும் அங்கிருந்த பற்றைகள், குப்பை கூளங்கள் என்பன மாணவர்களால் அப்புறப்படுத்தப்பட்டன. வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் கடந்த சில மாதங்களாகத் தீவிரமடைந்ததால் சுகாதாரத் திணைக்களத்தினரும் நகரசபையினரும் டெங்கு எதிர்ப்பு நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

கடந்த 5 ஆம் திகதி டெங்கு நோயினால் வவுனியா தேக்கவத்தை ஆலடிப் பகுதியைச் சேர்ந்த 3 வயதுச் சிறுமி உயிரிழந்ததை அடுத்து இந்த நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன. கிராமங்கள், திணைக்களங்கள் பாடசாலை வளாகங்கள் ஆகிய இடங்களில் டெங்கு நுளம்பை ஒழிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

சீரற்ற வடிகால் அமைப்புகளில் நீர் தேங்கிக் காணப்படுவதால் டெங்கு நுளம்புகள் பெருகிக் காணப்படுவதை அவதானிக்க முடிவதாகவும் தெரியவந்துள்ளது. குறிப்பாக வவுனியா நகரை அண்மித்தும் குளங்களை அண்மித்துள்ள கிராமப்புறங்களிலும் நீர் வழிந்து செல்லாத இடங்களிலும் டெங்கு நுளம்புகள் காணப்படுகின்றன.

இவ்வாறு தேங்கியுள்ள நீர் அப்புறப்படுத்தப்படுமேயானால் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தைத் தணிக்க முடியுமென சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(க-402)

## கொட்டகை பிடுங்கப்பட்டதால் தளபாடங்களுக்கு சேதம்

நெடுங்கேணி, ஜன.19

நிறுவனமொன்றினால் அமைத்து வழங்கப்பட்ட கொட்டகை திடீரெனப் பிடுங்கப்பட்டதால் அங்கிருந்த தளபாடங்கள் மழையில் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நிறுவனமொன்று இங்குள்ள தச்சுத் தொழிலாளி ஒருவருக்கு தற்காலிகக் கொட்டகையொன்று வழங்கியிருந்தது. இவர் இந்தக் கொட்டகையினுள் வைத்து தனது தொழிலை மேற்கொண்டு வந்தார்.

இந்த நிலையில் இங்குள்ள சில கிராமங்களில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருவதால் வசதி கருதித் தனது தொழிலை கீரிசுட்டான் கிராமத்திலுள்ள தனியார் வீடு ஒன்றில் மேற்கொண்டு வந்தார்.

இதனையறிந்த கொட்டகையை இவருக்கு வழங்கிய நிறுவனம் அதனைத் திடீரென பிடுங்கிச் சென்றுள்ளது.

இதனால் இங்கு வைக்கப்பட்டிருந்த சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் மழையில் நனைந்து சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-435)

## உதவிகள் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி, ஜன.19

கடந்த ஆண்டு வாழ்வு எழுச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில் பயனாளிகளுக்கான உதவிகள் இன்று வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இந்தப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களுக்கு நிதி மற்றும் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் ஒரு மணியளவில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்டவர்களை இதில் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-18)

### முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு கிராமத்தில்

## யாழ்.நகர் றோட்டறிக் கழகம் நிவாரண விநியோகம்



முல்லைத்தீவு,ஜன.19

யாழ். நகர் மைய றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டம் தண்ணிமுறிப்புக் கிராமத்திலுள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். நகர் மைய றோட்டறிக் கழகத்தினால் முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று, பிரதேச செயலர் பிரிவிலுள்ள தண்ணிமுறிப்பு கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 100 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

யாழ். இந்துக் கல்லூரியின் 2012 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்கள் றோட்டறிக் கழகத்தினருடன் இணைந்து யாழ். வர்த்தகர்கள், பொதுமக்கள் ஆகியோரின் பங்களிப்புடன் சுமார் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவிகளுக்கு பாதிக்கப்பட்ட மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

மேலும் இதற்கு உதவிய யாழ். வர்த்தகர்கள், பொது மக்கள் மற்றும் இடவசதி, போக்குவரத்து வசதிகளை வழங்கிய சிவகுருநாத குரு பீடத்துக்கு தமது நன்றிகளைத் தெரிவிப்பதாக றோட்டறிக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(க-14)

## சவூதி அரேபிய அரசினது உதவி எமக்கு வேண்டாம்

எனது மகளுக்கு மரணதண்டனை விதித்த சவூதி அரேபிய அரசினதோ அல்லது அந்த நாட்டைச் சேர்ந்த நபர்களினதோ எந்த உதவிகளும் எமக்குத் தேவையில்லை.

இவ்வாறு சவூதியில் மரண தண்டனைநிறைவேற்றப்பட்ட இலங்கைப் பணிப்பெண் ரிசானாவின் தாயாரான அஹமது செய்யது பரீனா தெரிவித்தார்.

சவூதி அரேபியாவின் எந்த உதவிகளையும் நாம் பெற்றுக் கொள்ளத் தயாரில்லை என்றும் அவ்வாறான அன்பளிப்புகளை எடுத்துக்கொண்டு எனது வீட்டுக்கு எவரும் வர வேண்டாம் -என்றார்.

(ச)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

அக்கராயன், ஜன.19

அக்கராயன் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அதிபர் க.மதுரநாயகம் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-18)

## பாதிப்புக்களுடன் காணப்படும் வட்டக்கச்சி தென்னைகள்

அக்கராயன்,ஜன.19

கிளிநொச்சி வட்டக்கச்சி கிராமத்தில் தென்னைகளின் வளர்ச்சியில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக இங்கு மீளக் குடியமர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதேநிலை காணப்படுவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் நோய்த் தாக்கம் காரணமாக தென்னங் குலைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதேபோன்று மாமரங்களும் நோய்த்தாக்கத்துக்கு உட்பட்டிருப்பதன் காரணமாக உரிய விளைச்சலைப் பெறமுடியவில்லை எனவும் கவலை தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக கருத்து தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் மாமரங்களின் கிளைகளைக் கத்தரிப்பதன் மூலமாகவே சிறந்த பழங்களைப் பெறலாம் எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி செல்வநகர் கிராமத்திலும் தென்னைச் செய்கையில் பாதிப்புக்கள் காணப்படுவ்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆய்வுகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நெல்வயல்களில் இலைச்சுருட்டி நோயின் தாக்கம் அதிகமாக உள்ளதாக விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-18)

## மரண அறிவித்தல்

## நல்லதம்பி தங்கரத்தினம்



கே.கே.எஸ். வீதி, இணுவில் கிழக்கைச் சேர்ந்த நல்லதம்பி தங்கரத்தினம் நேற்று(18.01.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா நல்லதம்பியின் அன்பு மனைவியும், இணுவில் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா-ஆச்சிமுத்து தம்பதியரின் மகளும், இணுவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னையா-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், பாலச்சந்திரன், சூரியகுமாரன், ஞானபண்டிதன், ஸ்ரீதிருமுருக கதிர்காம நாதன், செல்வக்குமாரி, லலிதாபத்மினி, கலையரசன் ஆகியோரின் அன்புத் தாயும், உருத்திரேஸ்வரி, மனோகலா, சித்திரா, உஷாதேவி, ஜெயபாலசிங்கம், அரவிந்தன், பிரியா ஆகியோரின் அன்பு மாமியும், சுதர்சன், சிந்துஜா- நந்தகுமார், மீரா, சரண்ஜா, கௌசியா, கதிர், சத்யா, குகன், தர்ஷிகன், பிரதாபன், அட்சயன், அக் ஷேய், அபிராமி, நிவேதன், பிரகன், டர்ஸ்னா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், அஜித், மாஜா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(20.01.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கே.கே.எஸ் வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KAJAN PLASTIC WORKS**

FIX & GLUE 077 160 7752

157 2nd Floor A9 Road, Kachcheriyady.


வட இலங்கை ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்ல ஆச்சிரமம்
வதிரி, கரவெட்டி

## ஏலவிற்பனை அறிவித்தல்

இந்த இல்ல ஆச்சிரமத்தில் பாவனைக்குட்படுத்தப்பட்டு பழுதடைந்த பின்வரும் பொருள்கள் 31.01.2013 மு.ப. 10.00 மணிக்கு இல்ல ஆச்சிரமத்தில் **ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.**

★ இரும்புக் கட்டில்கள்
★ மரத் தளபாடங்கள்
★ பிளாஸ்டிக் கதிரைகள்
★ குளிரூட்டி
★ துணி துவைக்கும் இயந்திரம்
★ வேறு இரும்புப் பொருள்கள்
★ காஸ் சிலிண்டர்

பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் 18.01.2013 தொடக்கம் மு.ப. 9.00 மணிமுதல் பி.ப. 4.30 மணிவரை பார்வையிட முடியும்.

ஏலத்தில் சித்தி பெறுவோர் முழுத்தொகைப் பணத்தையும் உடனே செலுத்துவதோடு பொருள்களை இரு நாள்களுக்குள் அகற்ற வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் ஆச்சிரம அலுவலகத்தில் அறிந்து கொள்ளமுடியும்.

தர்மகர்த்தா சபை.

## மரண அறிவித்தல்

### மகாலிங்கம் டென்சில்



வளம்புறம், கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி வடக்கு அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் டென்சில் 18.01.2013 அன்று காலமானார்.

அன்னார் மகாலிங்கம் காலஞ்சென்ற சபீனா தம்பதியரின் அன்பு மகனும், மரியநாயகியின்(பவுண்) அன்புக் கணவரும், மரியகொலஸ் ரிக்கா, மேரிகிம்சம், டென்சிலின்ராஜ், மதுசா ஆகியோரின் பாச மிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.01.2013) பி.ப. 2.00 மணியளவில் அச்சுவேலி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக அச்சுவேலி புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
(மனைவி-பவுண்)
077 545 0971

(28440)(5-6-7)

**விற்பனைக்கு** கந்தர்மடம் குமாரசுவாமி வீதியில் அமைந்துள்ள பழைய வீட்டினுடைய கட்டடம் விற்பனைக்கு உண்டு. **தொடர்பு** - 0773614630

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1988, விசாகம் 3 ஆம் பாதம், கி.பா.14, B.Sc. Hons (Special), Degree in IT, தற்போது M.Sc. படித்துக் கொண்டு விரிவுரையாளராகப் பணிபுரியும் மணமகளுக்குத் தகுதியான மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு:0715140950 (28484)(6.2)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன (கிறேடன்)
நாய்க்குட்டிகள்
விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0779493947, 0755554359

(28444)(6.2)

## விற்பனை

மேல் வகுப்புக்கான பாடக் குறிப்புப் புத்தகம் (வேலைத் திட்டமும் பாடப் பதிவேடும்) விற்பனைக்கு உண்டு.

**பாரதி பதிப்பகம்,**
480, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே. இல: 021 222 3081

## தவறிவிட்டது

இல.41, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த வீரகத்தி சோமசுந்தரம் (மண்டைதீவு) 371852999V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை கொக்குவில் சந்திக்கும் சம்பியன் லேனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தொ.பே.0775284276

(28442)(6.2)

## பிரத்தியேக வகுப்புகள் (Personal Classes)

தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கான கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகியன சிறந்த முறையில் கற்பிக்கப்படும்.
தொடர்பு:0771645170, 0758427924

(28480)(6.2)

## கண்ணீர் அஞ்சலி

கடந்த புதன்கிழமை(16.01.2013) அன்று காலமான பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மட்டக்களப்பை வசிப்பிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற பருத்தித்துறை நகரசபை லிகிதர்



**மகாலிங்கம் இராஜரட்ணம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளரும் ஊழியர்களும்**
**கனன்**
**போட்டோ கொப்பி பருத்தித்துறை.**

(சி/5727)(5-6-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் திறன் அபிவிருத்தி உதவியாளராகக் கடமையாற்றும் செல்வி வேலாயுதம் கலாவதி அவர்களின் அன்புத் தாய்

**திருமதி விசாலாட்சி வேலாயுதம்**

அவர்கள் 17.01.2013 அன்று அமரத்துவம் அடைந்து விட்டார். அன்னாரின் இழப்பால் தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

காரைநகர் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிசங்கம்,
பிரதேச செயலகம், காரைநகர். (C/5723) (2.6.7)



## பத்தாம் ஆண்டு நினைவு

மலர்வு
23.01.1943
உதிர்வு
16.01.2003

**திருமதி பொன்னர் பூபதி**

எங்கள் உணர்வுக்குள் உறைந்திருக்கும் தாயே
ஒரு தசாப்தம் என்ன ஒன்பது தசாப்தங்கள் ஆனாலும்
நாம் எங்கு தான் நின்றாலும் உன் நினைவுகள்
எம்மை விட்டகலாது தாயே.

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு.
உரும்பிராய்.

நினைவுகளுடன் வாழும்
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(28473)(6.7.2)


# சர்வதேச வர்த்தகச் சந்தை - 2013
# கல்விக் கண்காட்சி

JITF 2013
JAFFNA INTERNATIONAL TRADE FAIR
4th Edition

edexcel
advancing learning, changing lives

**HND** in Computing & System Developmen
The leading to Bsc (Hons) in Computing

**HND** in Business Management
The leading to B.A (Hons) in Business & Financ


Stall No 163

Special Offer

Grap
Your Dell new Latop



What we Offers.........



Dell Laptop
Pendrive
Subwoofer 4.1
T - Shirt

Diplomas at ESOFT

DiTEC Information Technology
DiCA Computerized Accounting
DiSE Software Engineering
DiHN Hardware & Networking
DiWE Web Engineering
DiE English

பதிவுகளுக்கு : 077 309 9 308

ESOFT
Shaping Lives, Creating Futures.

**ESOFT Metro Campus**
No 137 , K K S Road, Jaffna. Tel :021 222 4142


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இன்றைய இக்கட்டிலிருந்து மீள மக்களின் ஒற்றுமையே அவசியம்

இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளை தமக்கு வாய்ப்பானவையாக, அல்லது தமக்குப் பிடித்தமானவையாக ஆக்குவதற்கு சர்வதேச சக்திகள் எமக்கு அழுத்தம் தரமுடியாது. நாம் அதனை எந்தக் கட்டத்திலும் அனுமதிக்கப்போவதில்லை.

இவ்வாறு அரசாங்கத்தின் சார்பில் வீறாப்புடன் அனைத்துலக நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த. இவர் இன்றைய அரசில் அங்கம் வகிக்கும் மூத்த அமைச்சர்களில் ஒருவர், ஒருவகையில் ஜனாதிபதிக்கு மிக நெருக்கமானவர்.

அதீத அதிகாரத்துடன் அமர்ந்திருப்பவர்கள் தாம் கூறுவதெல்லாம் தேவ வாக்கென்றும், தம்மை வேறு எவரும் தட்டிக் கேட்கக் கூடாதென்ற வன்மத்துடன் செயற்படுவதும், கருதுவதும் புதிதான ஒன்றல்ல.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான விசாரணையும் பதவிப் பறிப்பும் இந்த நாட்டில் ஜனநாயகத்தையும் அதன் அருமருந்தன்ன விழுமியங்களையும் குழிதோண்டிப் புதைத்து, நாட்டை சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்வதற்கான முதற் காலடி என்பதனை உலக நாடுகளில் பலவும் முத்திரை குத்துவதற்கு ஆரம்பித்துள்ளன.

ஜனநாயகத்தின் பிரதான தூண்களாக விளங்கும் சட்டவாக்கத்துறைக்கும் நீதித்துறைக்கும் இடையே ஆரம்பிக்கப்பட்ட கயிறிழுப்பு, இரண்டு பெரும் தூண்களையும் கேள்விக்குறிகளாக்கி எதிர்வரும் காலங்களில் அவற்றை தகர்த்தெறிந்து விடுமோ என்ற ஏக்கம் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது; கீழ் மட்டங்கள் வரை பரவி விட்டது.

முன்னாள் பிரதம நீதியரசரின் பதவி பறிப்பும், புதிய நீதியரசரின் நியமனமும் உள்நாட்டில் மட்டும் உணர்வலைகளை உண்டாக்கவில்லை. அனைத்துலக நாடுகளினதும் கவனத்தையும் அவை ஈர்த்துள்ளன. அதன் வெளிப்பாடே அமெரிக்கா, பிரிட்டன், கனடா மற்றும் மேற்குலக நாடுகள் இலங்கை அரசை விமர்சிக்கத் தூண்டியுள்ளன என்ற தகவல்கள்.

வன்னிப் போரின் போது இலங்கை அரசாங்கம் பாரதூரமான மனித உரிமை மீறல்களை செய்ததென்றும், அனைத்துலகச் சட்டங்களையும் நியமங்களையும் புறக்கணித்தது என்றும் ஐ.நா. மட்டத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இலங்கை அரசு அதற்குப் பொறுப்புக் கூறவேண்டும் என்ற அழுத்தங்களும் மேலோங்கியுள்ளன; மேலெழுந்து வந்தன. அவற்றைத் தடுப்பதற்கு அரசின் சார்பில் அதன் பிரதிநிதியாகச் செயற்பட்ட ஒருவர் புதிய பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டிருப்பது அனைத்துலக மட்டத்தில் பெரும் அதிருப்தியை உண்டாக்கியுள்ளது. இதனை நீதித்துறையை நிந்திக்கும் பாரதூரமான செயல் என்று அனைத்துலக ஜூரர்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது; கண்டித்துள்ளது.

ஆயினும், எந்தக் கொம்பன் எதனைக் கூறினாலும், தான் நினைத்ததைச் செய்வதிலேயே இந்நாட்டு அரசு கால்பதிக்கிறது. தனது விடாக்கண்டன் கொடாக்கண்டன் போக்கில் ஓர் அங்குலம் தானும் பின்னெடுத்து வைப்பதற்கு அரசு தயாரில்லை என்ற நிலையையே இது பிரதிபலிக்கிறது.

அனைத்துலகம் குறித்து அலட்டிக் கொள்ளப் போவதில்லை என்ற அரசின் போக்கு மாற்றமுறும் என்று எதிர்பார்க்க இயலவில்லை.

புதிய நீதியரசர் நியமனம் எதிர்காலத்தில் இலங்கையின் சட்டத்துறை முடிவுகள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகள், அரசின் செயற்பாடுகளை நியாயப்படுத்துவனவாகவும், பக்கச்சார்பானவையாக அமைவனவாகவும் இருக்கும் அபாயம் குறித்து மிக மூத்த சட்டத்தரணியும் அரசியல் விமர்சகருமான ஹோமின் தயாசிறி சுட்டிக்காட்டியிருப்பதனையும் கருத்தில் கொள்ளலாம்; கவனத்தில் கொள்ள வேண்டும்.

அத்தகைய ஒரு நிலை உருவானால் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து நாட்டைச் சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்லும் என்பதனை தட்டிக்கழிக்க இயலாதே...

மொத்தத்தில் நாட்டில் ஜனநாயகமும், நீதியும் கேள்விக்குறியாகிவிடும் என்ற வாதத்தையும் புறந்தள்ளி விடமுடியாதே...

அதாவது, நாட்டின் அரசியல் அரங்கில் உருவாக்கப்பட்டுள்ள 'குழப்ப நிலையே' முடிவின்றித் தொடரும் என்பதனையும் ஓரங்கட்ட இயலாதே...

இத்தகைய சந்தர்ப்பத்தில் காலம் தரப்போகும் செயன்முறைத் தீர்ப்பு எதுவாக இருக்குமோ என்று மக்களை நாளுக்கு நாள் நிரந்தர ஏக்கத்தில் மூழ்க வைக்கும் என்பதனைப் பிசிறின்றிக் கொள்ளலாம். இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம் என்ற முடியாட்சிக் காலநிலைமை தோன்றாதிருக்க மக்களிடையே ஒற்றுமை மட்டுமே ஒரே ஒரு பலம்.

# கைப்பணிக் கலைஞர் விவரங்களை திரட்டவுள்ளது அருங்கலைகள் பேரவை

யாழ்ப்பாணம்,ஜன.19

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய அருங்கலைகள் பேரவை யாழ். மாவட்டத்தில் உள்ள கைப்பணிக் கலைஞர்களின் விவரங்களைத் திரட்டவுள்ளது.

கைப்பணித்துறையில் ஈடுபடும் கலைஞர்கள் தமது பிரதேச செயலகங்களில் உள்ள தொழில்களை திணைக்கள நிகழ்ச்சித் திட்டத்தில் அல்லது யாழ்.மாவட்ட செயலகத்தில் உள்ள தொழில்துறை திணைக்கள மாவட்ட அலுவலகத்திலோ புதன்கிழமைகளில் தமது விவரங்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று யாழ்.மாவட்ட தொழில்துறை திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

கைத்தொழிலாளர்களில் களிமண் உற்பத்திகளில் செங்களிமண், செரமிக் உற்பத்திகளும் தும்பு, ஓலை, புல் சார்ந்த உற்பத்திகள் பிரம்பு, மூங்கில் வடிவமைப்புக்கள், உலோக கைப்பணிப் பொருள்களில் வார்ப்பு, செதுக்கல்கள், வெள்ளி, தங்க உலோகங்களில் செதுக்கல்கள் ஆபரணங்களில் உலோக ஆபரணங்கள், கல்பதித்த மற்றும் நானாவித ஆபரணங்கள், முகமூடி மற்றும் பாவைகள், செதுக்கிய மூடிகள், சங்கீத உபகரணங்கள், துணி மற்றும் துணிகளிலான கைப்பணிப் பொருள்கள், பற்றிக் ஆடை அலங்காரங்கள், ரேந்தைகள், வெண்கல உற்பத்திகள், மரஉற்பத்திகள், தோற்பொருள்கள், கற்கள் மூல கைப்பணிப் பொருள்கள், வரைவுகளும் சிற்பங்களும், இவற்றில் பாரம்பரிய சுவரோவியங்கள், பாரம்பரிய விழா சார்ந்த உபகரணங்கள் உள்ளடங்க வேண்டும்.

தென்னை, கித்துள் மற்றும் பனை சார்ந்த உற்பத்திகள் மற்றும் நானாவித கைப்பணிப் பொருள்கள் ஆகிய கைத்தொழில்களில் ஈடுபடுவோர் கைத்தொழில் துறை திணைக்களத்தில் பதிய முடியும்.

தேசிய அருங்கலைகள் பேரவை வடமாகாணத்தில் தொழில்துறை திணைக்களத்துடன் இணைந்து வருடாந்தம் கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

அத்துடன் கைத்தொழிலாளர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதோடு பயிற்சி நிறைவில் அரச சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன என்று மேலும் கூறப்பட்டது. (ம-13)

# 'வறுமையற்ற இலங்கை' எனும் தொனிப்பொருளில் அபிவிருத்தி

யாழ்ப்பாணம்,ஜன.19

2013 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்துக்கு அமைவாக மூன்றாண்டுத் திட்டத்தில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் ''வறுமையற்ற இலங்கை'' எனும் தொனிப்பொருளில் அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தில் பிரசவ விடுதிகளை அபிவிருத்தி செய்தல், அடிப்படை வசதிகளான குடிதண்ணீர், வீடு, சுகாதாரம் போன்ற துறைகளை மேம்படுத்தல், முன்பள்ளிகள் மற்றும் ஆரம்பப் பள்ளிகளைப் புனரமைப்புச் செய்தல் மற்றும் கட்டியெழுப்புதல், சுற்றுலா மற்றும் கட்டுமானம் ஆகிய விடயங்களில் தொழில் திறமைகளை மேம்படுத்தல், பாதை அமைப்பு மற்றும் வியாபார சந்தைகளைப் பெற்றுக் கொடுத்தல், வாராந்த சுகாதார சிகிச்சை நிலையங்களை நடத்த அனுசரணை செய்தல், ஒவ்வொரு கிராமத்தினதும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தச் செயற்றிட்டத்தில் இணைந்து கொள்ளும் அமைச்சுக்கள், மாகாணங்கள், உள்ளூராட்சி சபைகள், மாவட்ட மற்றும் கோட்ட, கிராமமட்ட உத்தியோகத்தர்கள் ஊடாக பின்தங்கிய கிராமங்களில் இந்தச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-14-122)

# வாகனப் பதிவு 2012 இல் வீழ்ச்சி

கொழும்பு,ஜன.19

2012 ஆம் ஆண்டில் வாகனப் பதிவு அதற்கு முந்திய ஆண்டான 2011 ஆம் ஆண்டைவிட குறைவடைந்துள்ளது.

மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களத்தின் புள்ளி விவரங்களுக்கு அமைய கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒட்டுமொத்த வாகனங்களின் எண்ணிக்கை 3 லட்சத்து 97 ஆயிரத்து 295 ஆகும்.

அதற்கு முந்திய ஆண்டில் அதாவது 2011 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒட்டுமொத்த வாகனங்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 25 ஆயிரத்து 421 ஆகும்.

2012 ஆம் ஆண்டில் வாகனங்களுக்கான தீர்வை வரிகள் உயர்த்தப்பட்டதன் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை சரிவை எட்டியுள்ளன. அத்துடன் வாகனங்களின் விலையும் பெருமளவில் எகிறிச் சென்றுள்ளது.

அதற்கமைய 2012 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் கார்களின் எண்ணிக்கை 31,546 ஆகும். ஒட்டோக்களின் எண்ணிக்கை 98,815 ஆகும். மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 92 ஆயிரத்து 284 ஆகும்.

பஸ்கள் 3 ஆயிரத்து 95, இருவித செயல்திறன் கொண்ட வாகனங்கள் 37 ஆயிரத்து 397, பாரவூர்திகள் 12 ஆயிரத்து 266, உழவு இயந்திரங்கள் 18 ஆயிரத்து 450, மற்றும் உழவு இயந்திரப் பெட்டிகள் 3 ஆயிரத்து 442 என்றவாறு பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று மோட்டார் வாகன திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-22)

# முதியோரைப் பராமரிக்க இளையோருக்குப் பயிற்சி

## கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் தகவல்

குருநகர்,ஜன.19

வடமாகாணத்தில் உள்ள முதியவர்களைப் பராமரிப்பதற்கு சமூகத்திலுள்ள இளம்பராயத்தினர் முன்வர வேண்டும்.

அவர்களுக்கு இந்தத் துறையில் பயிற்சி வழங்குவதற்கு கைதடி அரச முதியோர் இல்லம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் வடமாகாணத்தில் இயங்கும் மூத்த பிரஜைகளுக்கான சேவை நிலையங்களின் பொறுப்பாளர்களுடன் நடத்திய ஒன்றுகூடலில் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் இயங்கும் மூத்த பிரஜைகள் பராமரிப்பு நிலையங்களைச் சேர்ந்த பொறுப்பாளர்களுடனான கலந்துரையாடல் கைதடி அரச முதியோர் இல்லப் பிரார்த்தனை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தர், அரசமுதியோர் இல்லப் பணியாளர்கள் இந்த ஒன்றுகூடலில் கலந்து கொண்டிருந்தனர். (ம-51)

# தரம் ஒன்று மாணவருக்கு பரிசுப் பொருள்கள்

தென்மராட்சி,ஜன.19

சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கிக் கிளையினர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் ஒன்றில் இணைந்த 558 மாணவர்களுக்கு பரிசுப் பொருள்களை வழங்கினர்.

தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களுக்கு மென்பந்து, கதைப்புத்தகம், கொப்பி, கலர் கட்டி ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்கினார்.

இருபதுக்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு நேரில் சென்று புதிதாக இணைந்த மாணவர்களுக்குப் பரிசுப் பொருள்களை வழங்கினர். (ம-9)

# 17 மாவட்டங்களில் கித்துள் அபிவிருத்தி

யாழ்ப்பாணம்,ஜன.19

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சால் 19 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 17 மாவட்டங்களில் கித்துள்சார் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வாழ்வின் எழுச்சி திட்டத்தின் கீழ் வங்கிகள் ஊடாக இலகு கடன் மற்றும் கித்துள்சார் உற்பத்தியாளர்களின் சங்கங்களை அமைத்தல் மற்றும் தொழில்துறையை நவீனமயப்படுத்தி மேம்படுத்தல், உற்பத்திகளின் தரத்தை உயர்த்தி சந்தைவாய்ப்பை அதிகரித்தல் போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

காலி, களுத்துறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் முதற்கட்டமாக கித்துள் மரங்களை புதிதாக நடுகை செய்தல் மற்றும் கித்துள் சார் தொழிலாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அமைச்சால் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் கித்துள்சார் உணவு மற்றும் உணவல்லாத உற்பத்திகளை நவீன தொழில்நுட்பத்துடன் நீண்ட காலத்துக்கு பாதுகாக்கக்கூடிய வகையில் சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கு அமைய சீனிக்குப் பதிலாக கித்துளைப் பாவித்தல் தொடர்பாகவும் வனவளத் திணைக்களத்துடன் இணைந்து கித்துள் பண்ணைகளை அமைத்தல் போன்ற விடயங்களும் அமைச்சால் கலந்துரையாடப்பட்டுள்ளன. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை பூர்த்தியடைந்த நிலையில் ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனம்

அக்கராயன்,ஜன.19

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராமத்துக்கு ஏற்று நீர்ப்பாசனத்தை வழங்குவதற்கான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு ஏற்று நீர்ப்பாசனம் மூலமாக 140 ஏக்கர் பயிர் நிலத்துக்கு நீர்பாய்ச்ச முடியும். ஆனால் போர்ச் சூழல் காரணமாகச் செயலிழந்திருந்த ஏற்று நீர்ப்பாசன கட்டுமானங்கள் மீள் குடியமர்வின் பின்னர் அக்கராயன் குளப் புனரமைப்பின் ஓர் அங்கமாக இடம்பெற்று வந்தன. தற்போது ஸ்கந்தபுரம் கிராமத்துக்கான ஏற்று நீர்ப்பாசன வேலைகள் நிறைவடைந்துள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வு விரைவில் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்கந்தபுரத்துக்கான ஏற்று நீர்ப்பாசனத்தின் மூலமாக அக்கராயன் மத்தியிலுள்ள ஈச்சங்குளத்தில் நீர் நிரப்பப்படுமாயின் கோடை காலத்தில் அக்கராயன் மத்தியிலுள்ள கிணறுகளின் நீர் மட்டத்தைப் பேணுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-18)

# காஞ்சிபுரத்தில் 73 குடும்பங்கள் வசதிகள் எதுவுமின்றிச் சிரமம்

கிளிநொச்சி,ஜன.19

கிளிநொச்சி காஞ்சிபுரம் கிராமத்தில் போதிய அடிப்படை வசதிகள் இன்றியும் போக்குவரத்து வசதிகள், வீட்டு வசதிகள் இன்றியும் சுமார் 73 குடும்பங்கள் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள குமரபுரம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள காஞ்சிபுரம் கிராமத்திலும் அதற்கு அருகிலுள்ள கமரிக்குடா கிராமத்திலுமாக சுமார் 73 குடும்பங்களைச் சேர்ந்த 325 க்கு மேற்பட்டோர் வசிக்கின்றனர்.

குறித்த கிராமங்களில் போதிய அடிப்படை வசதிகள் இன்றியும் போக்குவரத்து வீதிகள் இன்றியும், வீட்டுத்திட்ட வசதிகள் இன்றியும் மக்கள் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த கிராமத்தில் இருந்து எந்தத் தேவைகளுக்குச் செல்வதாயினும் சுமார் 5 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பரந்தன் நகருக்குச் சேறும் சகதியும் நிறைந்த வயல்வெளி வீதியூடாகவே செல்ல வேண்டிய அவல நிலை உள்ளது. எந்தவிதமான போக்குவரத்து வசதிகளும் இல்லை.

குறித்த வீதியை புனரமைத்துக் கொடுக்கப் பொறுப்பேற்றுக் கொண்ட ஒப்பந்தகாரர்களும் வேலைகளை இழுத்தடித்து வருகின்றனர்.

இந்த நிலையில் அன்றாடத் தேவைகளுக்குப் பல்வேறு சிரமங்களின் மத்தியிலேயே செல்ல வேண்டியுள்ளதுடன் தினமும் 80 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலை செல்வதிலும் சிரமப்பட்டு வருகின்றனர்.

இதனைவிட குறித்த கிராமத்தில் 20 குடும்பங்களுக்கு 'நேர்ப்' திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களைத் தவிர வேறு எந்தவிதமான வீட்டுத் திட்டங்களும் வழங்கப்படவில்லை.

இதனால் தற்போது 53 வரையான குடும்பங்கள் தற்காலிக வீடுகளிலேயே கடந்த மூன்று வருடங்களாக வாழ்கின்றன.

இந்த நிலையில் கவனிப்பாரின்றிக் காணப்படும் இந்தக் கிராமத்தின் தேவைகளை பூர்த்தி செய்து தருமாறு மேற்படி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

(த-6)

# மருதன்குளம் கிராமத்தின் பிரதான வீதி துப்புரவு

கிளிநொச்சி,ஜன.19

கிளிநொச்சி கண்டாவளை மருதன்குளம் கிராமத்தின் பிரதான வீதி பிரதேச மக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஊரியான் கிராம அலுவலர் பிரிவில் உள்ள விவசாயக் கிராமங்களில் ஒன்றாகவுள்ள மருதன்குளம் பிரதான வீதி கடந்த பல ஆண்டுகளாகத் புனரமைப்புக்களின்றி குன்றும் குழியுமாக காணப்பட்டது.

இதனால் குறித்த கிராமத்தில் உள்ள குடும்பங்கள் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வந்ததுடன் குறித்த வீதியைப் புனரமைத்து தருமாறு பல்வேறு திணைக்கள அதிகாரிகளிடமும், தொண்டு நிறுவனங்களிடமும் கோரிக்கை விடுத்திருந்தன. எனினும் குறித்த வீதி புனரமைக்கப்படவில்லை. அத்துடன் இந்த வீதியில் பயணிக்கமுடியாத நிலையினால் கிராம அலுவலரோ கிராம மட்டக் குழுக்களின் உறுப்பினர்களோ குறித்த கிராமத்துக்குச் செல்வதில்லை.

இந்த நிலையில் கிராமத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் ஒன்றிணைந்து குறித்த வீதியைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து புனரமைத்துள்ளன. (த-6)

# நாச்சிக்குடா முஸ்லிம் ம.விக்கு போதிய ஆளணி வசதி இல்லை

கிளிநொச்சி,ஜன.19

கிளிநொச்சி பூநகரி கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட நாச்சிக்குடா முஸ்லிம் வித்தியாலயத்துக்கான அடிப்படை மற்றும் ஆளணி வளங்களை ஏற்படுத்தித் தருமாறு கோரி பெற்றோர்களும் மாணவர்களும் மறியற் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளதுடன், கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றையும் கோட்டக் கல்வி அதிகாரியிடம் கையளித்துள்ளனர்.

கிளிநொச்சி கல்வி வலையத்தின் கீழ் உள்ள 101 பாடசாலைகளில் ஒரேயொரு முஸ்லிம் பாடசாலையாகக் காணப்படும் நாச்சிக்குடா முஸ்லிம் வித்தியாலயத்தில் 136 முஸ்லிம் மாணவர்கள் உள்ளடங்கலாக 450 வரையான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த பாடசாலைக்கு 24 ஆசிரியர்கள் தேவையான போதும் தற்போது 18 இற்கும் குறைவான ஆசிரியர்களே கடமை புரிகின்றனர். ஆரம்பக் கல்விப் பிரிவுக்கு நான்கு ஆசிரியர்கள் உடனடியாகத் தேவையாக உள்ளதுடன் ஏனைய தொழில்நுட்பப் பாடங்களுக்கு ஆறு ஆசிரியர்கள் தேவை.

இந்த ஆசிரியர் வெற்றிடங்களை உடனடியாக நிவர்த்தி செய்வதுடன் ஏனைய கட்டட வசதிகள், நூலகவசதிகள், அடிப்படை பௌதிக வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கோரி சுமார் 200 பெற்றோர்களும், 400 மாணவர்களும் கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாடசாலை முன்பாக ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

அத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு கோட்டக்கல்வி அதிகாரி ஊடாக மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

குறித்த வசதிகளை உடனடியாக செய்து கொடுக்க வேண்டிய தேவையிருப்பதுடன் போக்குவரத்து வசதிகள் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் பெரியளவில் இல்லாத காரணத்தினால் சேவையர்ப்பணிப்புடன் சேவையாற்றக்கூடிய ஆசிரியர்களையே நியமிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது எனவும் இதனைத் தான் சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துரைப்பதாகவும் கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார்.

(த-6)

## வவுனியா கந்தசாமி கோயிலில் மண்டபம்

வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் 3 கோடி ரூபா செலவில் திருமண மண்டபம் கட்டிமுடிக்கப்பட்டுத் திறக்கப்பட்டுள்ளது.

இக்கட்டட திறப்புவிழா 17ஆம் திகதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெற்றது. ஆலய தர்மகர்த்தா சபை தலைவர் சிறி செல்வராணி, சிறிகாந்தக் குருக்கள், ஆலய தர்மகர்த்தா சபைச் செயலாளர் ந.பாலச்சந்திரன், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், உலக இந்துமத தலைவர் சோமஸ்கந்த குருக்கள், அமரிக்கத் துறவி மேகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சனிக்கிழமை (இன்று) கொடியேற்றத்துடன் இவ்வாலய மஹோற்சவ பெருவிழா ஆரம்பமாகி 10 நாள்கள் விசேட பூசையுடன் எதிர்வரும் 27 ஆம் திகதி தைப்பூசத்துடன் விழா முடிவடையும். (த-402)

# முதிரை மரக் குற்றிகள் வைத்திருந்தோருக்கு தண்டம்

கிளிநொச்சி,ஜன.19

கிளிநொச்சியில் அனுமதிப்பத்திரமின்றி முதிரை மரக் குற்றிகளை வெட்டி உடைமையில் வைத்திருந்த இருவருக்கு 35 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி கிளிநொச்சி கிராஞ்சிப் பகுதியில் சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான முதிரை மரக் குற்றிகளைத் தனது உடைமையில் வைத்திருந்த வேளை கைது செய்யப்பட்டவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

இதேவேளை பூநகரி முட்கொம்பன் பகுதியில் சுமார் ஒரு லட்சத்து 9 ஆயிரம் ரூபா பெறுமதியான முதிரை மரக் குற்றிகளை வைத்திருந்தவருக்குச் சுமார் 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர்கள் பிணையில் செல்ல மன்றினால் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் முன்னிலைப் படுத்தியதையடுத்து அவர்களுக்கு 35 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. (த-6)

# சேவையைப் பெறமுடியாத நிலையில் கரைச்சி கால்நடை வளர்ப்போர்

கிளிநொச்சி,ஜன.19

ஒரு கால்நடை மருத்துவ நிலையம் மட்டுமே இயங்கி வருவதால் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 42 கிராம அலுவலர் பிரிவுகளுக்கென ஒரு கால்நடை மருத்துவ நிலையம் மட்டுமே இயங்கி வருகின்றது. இதனால் விலங்கு வேளாண்மையில் ஈடுபட்டு வருவோர் , கால்நடை மருத்துவரின் சேவையைப் பெறுவதில் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள கால்நடை மருத்துவ நிலையத்தை நாடிச் சென்று தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டிய நிலையில் உள்ளனர்.

மேலும் கால்நடைகளுக்கு நோய்கள் ஏற்படும் போது அவற்றுக்குச் சிகிச்சையளிப்பதில் பல்வேறு வகையிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. மேலும் நீண்ட தூரத்துக்குக் கால்நடைகளைக் கொண்டு செல்வதிலும் இடர்களை எதிர் கொள்கின்றனர். கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் கால்நடை மருத்துவ நிலையம் மட்டுமே உள்ளது.

இதனால் கால்நடை வளர்ப்பாளர்கள் நீண்ட தொலைவிலிருந்து வந்து தமது கால்நடைகளுக்கான மருத்துவ வசதிகளைப் பெறவேண்டிய நிலையில் உள்ளனர். ஆகவே பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இந்தக் கால்நடை மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு பாதிக்கப்பட்டவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

# விரட்டுங்கள் குரங்குகளை!

## கிளிநொச்சி விவசாயிகள் வேண்டுகோள்

அழிவுகளை ஏற்படுத்தி வரும் குரங்குகளை தூர இடங்களுக்கு விரட்டுமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் குரங்குகள் பெருகிக் காணப்படுகின்றன. இதனால் விவசாய முயற்சிகளை - பயிர்களை அவை நாசம் செய்து வருகின்றன. இந்த நிலையில் குரங்குகளைத் தொலைவான இடங்களுக்கு விரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் தொடக்க நிகழ்வு கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், உட்பட மாவட்டத்தின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் பெருகிக் காணப்படும் குரங்குகள் விவசாயிகளால் பயிர் செய்யப்பட்டுள்ள மரக்கறி மற்றும் பழவகைகளுக்கு ஏற்படுத்தி வரும் சேதங்கள் தொடர்பாக விவசாயிகளால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி அரச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், குரங்குகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு உரியதாகும். மக்களின் ஒத்துழைப்புடன் நீண்ட தொலைவுக்கு குரங்குகளை விரட்டி விடுவதன் மூலமாக குறிப்பிட்ட காலத்துக்கு குரங்குகளால் தொல்லை இருக்காது எனக் குறிப்பிட்டார்.

(க-18)

# கெங்காதரன் குடியிருப்பில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு

அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பு மக்கள் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை எதிர் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அக்கராயனில் உள்ள உயர்வான பகுதியொன்றில் கெங்காதரன் குடியிருப்பு அமைந்துள்ளது.

இங்கு நீர்வழங்கல் செயற்பாடுகளை நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபை மேற்கொண்டு வருவதாகத் தெரிகின்றது. அக்கராயன் குளத்திலிருந்து கெங்காதரன் குடியிருப்புக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டமும் நடைமுறைப் படுத்தப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

கெங்காதரன் குடியிருப்பு மக்கள் தற்போது அக்கராயன் குளத்தை குளிப்பதற்கும், வேறு தேவைக்கும் பயன்படுத்தி வருகின்றனர்.

வழக்கமாக ஜூலை மாதமளவில் இந்த கிராமத்தில் கடுமையான குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றமை வழக்கமானதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-18)

# யானைகளால் பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டால் அறிவிக்குக

## விவசாயிகளுக்கு கரைச்சி பிரதேச செயலர் கூறுகிறார்

கிளிநொச்சி,ஜன.19

யானைகளால் பயிர்களுக்குச் சேதங்கள் ஏற்படுமாயின் பிரதேச செயலகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்துமாறு கரைச்சிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

இங்குள்ள பயிர் நிலங்களில் நுழையும் யானைகள் பயிர்களுக்குப் பெரும் சேதங்களை ஏற்படுத்தி வருவதால் விவசாயிகள் நட்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் யானைகள் வருகின்ற வேளைகளில் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டால் விவசாயிகளுக்கு யானை வெடிகளை வழங்க முடியுமென கரைச்சிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வன்னேரிக் குளம், பாலன்குளம்,கரைச்சி கிழக்கு பகுதிகளில் யானைகளால் தொல்லைகள் ஏற்பட்டு வருகின்றன.

குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவும் காலங்களில் யானைகள் குடிமனைக்குள் புகுந்து பெரும் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 17 குடும்பங்களுக்கு கூரைத் தகரங்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வடமராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் வழங்குகிறார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தற்காலிக வீடு அமைப்பதற்காக இவை வழங்கப்பட்டன. (ம)

# கடந்த வாரம் 129 பேர் யாழ். மாவட்டத்தில் கைது

## குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில்

வலி வடக்கு, ஜன. 19

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் பல்வேறு குற்றச் செயல்களுடனும் தொடர்புடைய 129 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். மாவட்ட நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கும் யாழ். மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் இடையே வாராந்தம் நடைபெறும் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**வேறு குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் ஒரு தொகுதியினர் சம்பந்தமான விவரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்.**

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 20 பேரும், சட்ட விரோதமாக மதுபானம் விற்பனையில் ஈடுபட்ட 18 பேரும், திருட்டுத்தனமாக மணல் ஏற்றிய 02 பேரும், குடிபோதையில் வாகனம் செலுத்திய 05 பேரும் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்திய 15 பேரும், பொது இடத்தில் மது அருந்திய 23 பேரும், குடித்து விட்டு பொது மக்களுக்க இடையூறு ஏற்படுத்திய 16 பேரும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் கடந்த காலத்தில் கொலை செய்ததாக தேடப்பட்ட சந்தேக நபர்கள் 05பேர், ஆட்கடத்தலில் ஈடுபட்ட 04 பேர், சிறுமிகளை பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கிய 02 பேர், சிறு குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்பட்ட 22 பேர், காசோலை மோசடி செய்த ஒருவர், வேலை வாய்ப்பு மோசடி செய்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வேறு குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் ஒரு தொகுதியினர் சம்பந்தமான விவரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.- என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-86-14)

# டெங்கு பரவும் சூழலை வைத்திருந்ததால் வழக்கு

தென்மராட்சி, ஜன.19

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு பெருகுவதைக் கட்டுப்படுத்தச் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட டெங்கு நுளம்பு ஒழிப்பு செயற்றிட்டத்தின் முதல்நாள் நிகழ்வில் டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான வகையில் சூழலை வைத்திருந்த மூன்று குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விசேட டெங்கு ஒழிப்புத் திட்டத்தில் கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வீடு வீடாகப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆயிரத்து 31 வீடுகளில் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் மூவர் குடியிருப்பு சூழலை டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான நிலையில் வைத்திருந்தமையால் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை, வீதியோரங்களில் நுளம்பு உற்பத்தியாகக் கூடிய வகையில் குப்பைகளைக் கொட்டியமைக்காக பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# அழிவடைந்த புகையிலைக்கு மாற்றீடாக புதிய நாற்றுக்கள்

யாழ்ப்பாணம்,ஜன.19

தீவுப் பகுதியில் அண்மையில் பெய்த மழையால் அழிவடைந்த புகையிலைக்கு மாற்றீடாகப் புதிய நாற்றுக்களை நடுகை செய்வதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் சுமார் 50 ஹெக்ரெயர் வரையிலான நிலப்பரப்பில் நடுகை செய்யப்பட்டிருந்த புகையிலை நாற்றுக்கள் மழை வெள்ளத்தால் அழிவடைந்து போயிருந்தன.

இந்த நிலையில் அழுகிய புகையிலை நாற்றுகளை அகற்றி மீண்டும் அதே இடத்தில் புதிய நாற்றுகள் நடுகை செய்யப்பட்டு வரு கின்றன. இதற்கென விவசாயிகள் வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து புகையிலை நாற் றுக்களை பெரும் எண்ணிக்கையில் எடுத்து வருகின்றனர்.

தற்போதைய காலநிலை மாற்றத்தைப் பயன்படுத்தி இந்த நாற்றுக்கள் நடுகை செய்யும் பணிகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# மண்டைதீவு வயல்களில் கட்டாக்காலிகள் தொல்லை

யாழ்ப்பாணம்,ஜன.19

மண்டைதீவுப் பிர தேசத்தில் வயல்களில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவற்றால் பயிர்கள் நாசமாகி வருகின்றன என்று விவசாயிகள் கூறுகின் றனர்.

இந்தப் பிரதேசத்தின் பிரதான வீதியோரங்களில் காணப்படும் வயல்களிலேயே இந்தக் கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

தற்போது வயல்களில் உள்ள நெற்பயிர்கள் கதிர் வந்த நிலையில் காணப்படுகின்றன.

இந்த நிலையிலேயே பயிர்களைக் கட்டாக்காலிகள் மேய்ந்து வருகின்றன. இந்தப் பகுதி விவசாயிகளில் சிலர் வயல்களில் காவல் கடமையாற்ற வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

ஒரு சில விவசாயிகள் பாதுகாப்பு வேலி அமைந்துள்ளதால் அந்த வயல் நிலங்களில் உள்ள பயிர்கள் தப்பிப் பிழைத்துள்ளன எனவும் விவசாயிகள் கூறுகின்றனர். (ம-17)

# 52 சனசமூக நிலையங்களே வலி. வடக்கில் செயற்பாட்டில்

## 38 நிலையங்கள் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில்

யாழ்ப்பாணம், ஜன.19

வலி.வடக்கு பிரதேசத்தில் தற்போது 52 சனசமூக நிலையங்கள் மட்டுமே செயற்பாட்டில் உள்ளன. ஏனைய 38 சனசமூக நிலையங்களும் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இதனால் அவை செயற்பாட்டில் இல்லை என்று வலி.வடக்கு பிரதேச சபையின் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் து.இளமுருகன் தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அளவெட்டி தெற்கு கலைநகர் கலைவாணி சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வலி.வடக்குப் பிரதேசத்தில் மீள்குடியமர்வு இடம் பெற்ற பகுதிகளில் பல சனசமூக நிலையங்கள் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் உள்ளன.

அதனால் அவற்றின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசத்தில் 90 சனசமூக நிலையங்கள் இருந்தன. தற்போது 52 சனசமூக நிலையங்களே செயற்பட்டு வருகின்றன.

ஏனைய சனசமூக நிலையங்களை மக்களின் ஒத்துழைப்புடன் மீள இயங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேசத்தின் அபிவிருத்தி சனசமூக நிலையங்கள் பிரதானமாக இருப்பதால் அவற்றைப் புனரமைப்புச் செய்து மீண்டும் செயற்பட வைக்க வேண்டிய தேவை உள்ளது என்று கூறினார். (ம-14-36)

# வெங்காயச் செய்கையில் இம்முறை அனலைதீவு விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம்,ஜன.19

அனலைதீவு பிரதேச விவசாயிகள் அடுத்த பெரும்போக வெங்காயச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்தச் செய்கையை மேற்கொள்வதற்கு விவசாய நிலங்களை பயன் படுத்துவதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

**கடந்த போக வெங்காயச் செய்கையில் இந்தப் பகுதியைச் சேர்ந்த 12 விவசாயிகள் ஈடுபட்டிருந்தனர்.**

கடந்த போக வெங்காயச் செய்கையில் இந்தப் பகுதியைச் சேர்ந்த 12 விவசாயிகள் ஈடுபட்டிருந்தனர்.

இவர்களுக்கு விவசாயத் திணைக்களத்தால் 50 வீத மானிய அடிப்படையில் விதை வெங்காயமும் வழங்கப்பட்டிருந்தது.

தற்போது இந்த வெங்காயப்பயிர்கள் நல்ல நிலையில் காணப்படுகின்றன.

இது எதிர்பார்த்த விளைச்சலை விட அதிக விளைச்சலை கொடுக்கும் என்று விவசாயிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்த மாதத்தில் இந்த வெங்காய அறுவடை இடம் பெறும் என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

இதனையடுத்து பிரதேச விவசாயிகள் அடுத்த பெரும்போக வெங்காயச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# விபத்தில் காயம்

தென்மராட்சி, ஜன.19

இரு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் மீன் வியாபாரிக்கு கால் முறிந்தது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பகல் மிருசுவிலில் இடம்பெற்றது.

மிருசுவில் பகுதியில் மீன் வியாபாரத்தை முடித்துக் கொண்டு வீதி திரும்பு கையில் விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

துன்னாலையைச் சேர்ந்த இராசையா உதயன் (வயது-32) என்பவருக்கே கால் முறிந்துள்ளது.

காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ம-9)

# நல்லை ஆதீனத்துக்கு முன்பாக விரைவில் வீதிச் சுற்றுவட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.19

நல்லை ஆதீனத்துக்கு முன்பாக வீதிச் சுற்றுவட்டம் ஒன்றை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நல்லூர் அரசடி வீதி, கோயில் வீதி சந்திக்கும் பகுதியில் இந்தச் சுற்றுவட்டத்தை அமைக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்தச் சந்திப் பகுதி மிகவும் அகலமாகக் காணப்படும் நிலையில் வாகன சாரதிகள் போக்குவரத்து விதிமுறைகளை மீறிப் பயணம் செய்து வருகின்றனர்.

இதனால் இந்தப் பகுதியில் விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலைமை காணப்படுகிறது.

இந்த நிலையில் இந்தப் பகுதியில் வீதிச் சுற்றுவட்டத்தின் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது. இதனை அடுத்து இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று கூறப்பட்டது.

இதேவேளை, யாழ். நகரை அண்டிய பிரதேசங்களில் பிரதான வீதிகள் இணையும் முக்கிய சந்திப் பகுதிகளில் சுற்று வட்டங்களை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே குறித்த பகுதிகளில் சுற்று வட்டங்கள் காணப்படின் அவற்றை அகற்றிவிட்டு புதிதாகச் சுற்றுவட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பிரதான சந்திகளில் காணப்படும் ஒரு சில சுற்று வட்டங்கள் இடிந்து காணப்படுவதால் பாதசாரிகள் பெரும் சிரமம் அடைந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாகக் கே.கே.எஸ். வீதியில் தபாலகச் சுற்று வட்டம் மற்றும் வின்சர் சந்திப் பகுதியில் உள்ள சுற்று வட்டம் போன்றன புனர்நிர்மாணம் இன்றிக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. தொழிலதிபருக்கு 14 ஆண்டுகள் சிறை

## சிக்காக்கோ நீதிமன்றம் தீர்ப்பு

மும்பை, ஜன.19

மும்பை தாக்குதல் உள்ளிட்ட பலவேறு சதித் திட்டங்களில் உடந்தையாக இருந்த அமெரிக்கத் தொழிலதிபர் தஹாவூர் ராணாவுக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



மும்பை தாக்குதலில் ஈடுபட்ட முக்கிய தீவிரவாதிகளில் ஒருவனான ஹெட்லியின் உதவியாளராக ராணா செயல்பட்டார்.

இதேபோல் தஹாவூர் ராணா, டேனிஷ் நியூஸ் பேப்பர் தாக்குதல் எனும் சதித் திட்டத்திலும் முக்கியப் பங்கு வகிப்பவர். இவருக்கு எதிரான வழக்குகள் அமெரிக்காவின் சிக்காக்கோ நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்தது. அந்தநிலையில், நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது ராணாவுக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது.


மும்பை தாக்குதல் குற்றவாளியான ஹெட்லி மீதான வழக்கில் எதிர்வரும் 24ஆம் திகதி தீர்ப்பளிக் கப்படுகிறது. பாகிஸ்தானைச் சேர்ந்த ராணா அமெரிக்காவின் சிக்காக்கோவில் குடியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)




மும்பை, தானேயில் தேசியவாதக் காங்கிரஸ் கட்சியினர், விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மதுரை மல்லிகைக்கு புதிய அந்தஸ்து

## புவிசார் குறியீட்டு அங்கீகாரம்



மனம் மயக்கும் மதுரை மல்லிகைக்கு தற்போது புதிய அந்தஸ்து கிடைத்துள்ளது. குண்டு குண்டாக வாசனை கொண்ட மதுரை மல்லிகைப் பூவுக்கு மத்திய அரசின் அறிவுசார் சொத்துரிமைக் கழகம் புவிசார் குறியீட்டு அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

புவிசார் குறியீடு தமிழகத்தில் முதல் முறையாக மதுரை மல்லிகைக்கு தற்போது கிடைத்திருக்கிறது. தமிழ் நாட்டில் மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டங்களில் மதுரை மல்லிகை பயிரிடப்படுகின்றன. இந்த நிலையில் விவசாயிகள் சங்கத்தினர் மதுரை வேளாண்மைக் கல்லூரி, தானம் அறக்கட்டளை உதவியில் கடந்த 2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3ஆம் திகதி மதுரை மல்லிகை பூக்களுக்கு பதிவுரிமை கோரி விண்ணப்பித்தனர்.

இதனையடுத்து 27 மாதங்களுக்குப் பின் கடந்த செப்ரெம்பரில் மதுரை மல்லிகைக்கு புவிசார் குறியீடு வழங்க முடிவு எடுத்தது. தனது 45ஆம் இதழில் இதற்கான அறிவிப்பை அப்போது வெளியிட்டது. இதற்கு எதிர்கருத்துக்கள் இருப்பின் அது குறித்து தெரிவிக்க 4 மாதம் கால அவகாசமும் வழங்கியது. ஆனால், இந்த 4 மாதங்களில் மதுரை மல்லிகைக்கு புவிசார் குறியீடு தருவதற்கு என எந்த ஆட்சேபக் கருத்தும் வரவில்லை. எனவே தற்போது மதுரை மல்லிகைக்கு புவிசார் குறியீடு அறிவிப்பு அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

# தமிழின துரோகக் கும்பலை வேருடன் சாய்த்து ஒழிப்போம்

## நீலகிரியில் ஜெயலலிதா சூளுரை

சென்னை,ஜன.19

தமிழகத்தின் நியாயமான கோரிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடும், தமிழினத் துரோகக் கும்பலை, வேருடன் சாய்த்து ஒழிப்போம்,'' என, எம்.ஜி.ஆர். சிலை திறப்பு விழாவில், முதல்வர் ஜெயலலிதா சூளுரைத்தார்.

நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் அமைக்கப்பட்ட, எம்.ஜி.ஆர். வெண்கல சிலையை, முதல்வர் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் திறந்து வைத்தார். நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏழை, எளியோரின் இதயங்களில் என்றென்றும் நிறைந்துள்ளவர். எம்.ஜி.ஆர். ஆறாவது முறையாக அ.தி.மு.க. அரியணையில் அமர்ந்துள்ளது தமிழகமே முதன்மை மாநிலம் என்னும் இலக்கை நோக்கி பீடுநடை போடுகிறது. காவிரி முல்லைப் பெரியாறு விவகாரங்களில் நீதியின் துணையோடு தமிழக உரிமையை மீட்டெடுக்க அரசு கடமையாற்றுகிறது.

''காவிரி விவகாரத்தில் நடுவர்மன்ற இறுதி தீர்ப்பை, மத்திய அரசிதழில் வெளியிடும் முடிவை இந்த மாத இறுதிக்குள் தெரிவிக்க வேண்டும்' என மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது மாநில அரசின் முனைப்புக்கு கிடைத்த வெற்றி. எம்.ஜி.ஆர். ஆசியோடு 1991 மற்றும் 2011 இல் எதிர்க்கட்சி என்னும் தகுதியை எட்டுவதற்கும் இயலாத நிலைக்கு தி.மு.க.வை வீழ்த்தினோம்.

எம்.ஜி.ஆர். எதிர் கொண்டு சாய்த்தது கருணாநிதியை. இன்று நாம் வீழ்த்தியிருப்பதோ கருணாநிதியின் பரந்து விரிந்த ஊழல் குடும்பத்தை. மத்திய ஆட்சியில் பங்கேற்பு என்னும், அவர்களது ஆணவத்தை வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் அடியோடு ஒழிப்போம்.

''காவிரி, முல்லைப் பெரியாறு, கச்சதீவு பிரச்சினை, கூடுதல் நிதி அரிசி ஒதுக்கீடு, மின்சார ஒதுக்கீடு' போன்ற தமிழகத்தின் நியாயமானக் கோரிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடும் தமிழினத்துரோகக் கும்பலை வேருடன் சாய்ப்போம். எம்.ஜி.ஆர். காண விழைந்த இலட்சிய கனவை நனவாக்க சூளுரைப்போம். ''நாளைய பாரதம் நம் கையில்' என்ற இலக்கை அடைய, சுழன்று பணி செய்வோம் என்றார். (3)

# பதற்றத்தைத் தணிக்க பேச்சு; அழைக்கின்றது பாகிஸ்தான்



எல்லைப் பகுதியில் நிலவும் பதற்றத்தை முடிவுக்குக் கொண்டு வர அமைதிப் பேச்சுக்கு வருமாறு, இந்தியாவுக்கு பாகிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக, வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு நடத்தலாம் எனப் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹினா ரபானிகர் யோசனை தெரிவித்துள்ளார்.

எல்லைப் பிரச்சினை தொடர்பாக, இரு நாட்டு ராணுவ அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் கருத்து தெரிவிப்பது, இரு நாடுகளுக்கு இடையே பதற்றத்தை அதிகரிக்கவே வழி வகுக் கும் என்றும் அவர் கூறியுள்ளார். எனவே, பேச்சுக்கள் மூலம் இந்தச் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றும் ஹினா ரபானி கூறியுள்ளார். இந்தியா மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்பு கூறியிருந்த அவர், தற்போது சமாதானப் பேச்சுக்கள் நடத்த முன்வந்துள்ளார். பதற்றத்தைத் தணிக்க, இந்தியா- பாகிஸ்தான் ராணுவத் தலைமைகளும் ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ள நிலையில், ஹினா ரப்பானியும் தற்போது அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.(3)

# பாகிஸ்தானுடன் பேச்சு; இந்தியா நிபந்தனை

இந்திய வீரரின் தலையை துண்டித்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்த பின்னரே பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த முடியும் என்று மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

காஷ்மீரில் அத்துமீறி தாக்குதல் நடத்திய பாகிஸ்தான் ராணுவம், இந்திய வீரர்கள் இருவரைக் கொன்றனர். அதில் ஒருவரின் தலையை தனியாகத் துண்டித்து எடுத்துச் சென்றனர். இந்த விவகாரத்தால் இரு நாடுகளுக்கு இடையே போர் பதற்றம் உருவானது.

இந்த நிலையில், அமைதிப் பேச்சு நடத்த இந்தியா முன்வர வேண்டும் என்று பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹினா ரப்பானி அழைப்பு விடுத்தார். இதற்கு பதில் அளித்து மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் மனிஷ் திவாரி கூறியதாவது:-

**இந்திய வீரர்களின் தலையை துண்டித்தவர்கள் மீது பாகிஸ்தான் முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

இந்திய வீரர்களின் தலையை துண்டித்தவர்கள் மீது பாகிஸ்தான் முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதன் பின்னர்தான் அந்த நாட்டுடன் பேச்சு வார்த்தை நடத்த முடியும். பாகிஸ்தானுடன் இனிச் சுமுக உறவு கிடையாது என்று பிரதமரும் எச்சரித்துள்ளதை நினைவில் கொள்ள வேண்டும்.

அமைதியை விரும்பினால் பாகிஸ்தான் முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார். (3)

# இனி வரும் தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சிக்கே வெற்றி

## ராகுல் நம்பிக்கை

நேரடி மானியத் திட்டம் முறையாகச் செயல்பட்டால், இந்தத் தேர்தலில் மட்டுமல்லாமல், இனி வரும் தேர்தல்களிலும் நாமே வெற்றியீட்டுவோம், ஜெயிப்போம் என ராகுல் கருதுவதாக அவரது ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

''சிந்தான் சிவிர்'' என பெயரிடப்பட்டுள்ள அந்த மாநாட்டில், அனுபவம் வாய்ந்த காங்கிரஸ் தலைவர்களுக்கு இணையாக இளைஞர்களுக்கும் வாய்ப்புகள் வழங்கப் படவுள்ளன. இரண்டு நாள் மாநாட்டின் நிறைவாக நடக்கவுள்ள அகில இந்தியக் காங்கிரஸ் குழுக் கூட்டத்தில், மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு, 2014ம் ஆண்டு நடக்கவுள்ள பொதுத் தேர்தலை எதிர்கொள்ளத் தேவையான உத்திகள் வகுக்கப்படவுள்ளன. அந்த மாநாட்டில், காங்கிரஸ் தலைவர்



சோனியா, பிரதமர் மன்மோகன் சிங், பொதுச் செயலாளர் ராகுல் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர். இந்தாண்டு இறுதியில் 5 மாநில சட்டசபை தேர்தல்கள் நடக்கவுள்ளன. தேர்தலுடன் சேர்த்து பொதுத் தேர்தலும் நடத்தப்படுவதற்கான சூழ்நிலைகள் உள்ளன.

இந்த நிலையில் காங்கிரஸ் கட்சி இத்தகைய தொரு மாநாட்டை நடத்த முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்ஜீரியப் படைகள் அதிரடித் தாக்குதல்

## பணயக் கைதிகள் உட்பட 50 பேர் சாவு

அல்ஜீரியஸ், ஜன.19

அல்ஜீரியாவில் வெளிநாட்டவர்களை பணயக் கைதிகளாக சிறைப்பிடித்து வைத்திருந்த தீவிரவாதிகள் மீது அல்ஜீரிய இராணுவத்தினர் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர். அந்தத் தாக்குதலில் 35 பணயக் கைதிகள் உட்பட 50 பேர் உயிரிழந்தனர்.

மாலியில் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு பிரான்ஸ் அரசு உதவி வருகிறது. தீவிரவாதிகள் மீது விமானத் தாக்குதலை மேற்கொள்வதற்கு வசதியாக வான்பரப்பை பயன்படுத்த அல்ஜீரிய அரசு பிரான்ஸுக்கு அனுமதியளித்திருந்தது.

அதை எதிர்த்தே தீவிரவாதிகள் வெளிநாட்டவர்களை பணயக்கைதிகளாகச் சிறைபிடித்திருந்தனர்.

இந்த பயங்கரவாதிகளை சமாளிக்க மாலி அரசு பிரான்ஸ் நாட்டின் உதவியை நாடியது. அதையடுத்து, கடந்த வாரம், மாலிக்கு விரைந்த பிரான்ஸ் படைகள், விமானம் மூலம் குண்டு வீசி பயங்கரவாதிகள் கைப்பற்றிய பகுதிகளை மீட்டன.



பிரிட்டன் நிறுவனத்துக்கு சொந்தமான, ''பிபி' நிறுவனத்தில் பணிபுரிந்த, அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் ஊழியர்களே கடத்தப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில் தீவிரவாதிகள் பணயக் கைதிகளை வைத்திருந்த எண்ணெய்க் குதம் மீது அல்ஜீரிய இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

அதில் பணய கைதிகள் 35 பேரும், தீவிரவாதிகள் 15 பேரும் உயிரிழந்தனர். 26 பணய கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

## கென்யாவில் அரசியலில் குதிக்கிறார் மாலிக் ஒபாமா

நைரூபி, ஜன.19

கென்யாவின் மாகாணத் தேர்தலில் ஒபாமாவின் சகோதரர் போட்டியிட உள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் தந்தைக்கு நான்கு மனைவிகள். அவர்களில் ஆன் துன்ஹாம் என்பவருக்கு பிறந்தவர்தான் பராக் ஒபாமா. மற்றொரு மனைவிக்கு பிறந்தவர் மாலிக் ஒபாமா.

கென்யாவைச் சேர்ந்த மாலிக் ஒபாமா கணக்காளராகப் பணியாற்றி வருகிறார்.

கென்யாவில் எதிர்வரும் வரும் மார்ச் மாதம் மாகாண தேர்தல் நடக்கஉள்ளது. சியாயா மாகாண தேர்தலில் இவர் சுயேச்சையாகப் போட்டியிட திட்டமிட்டுள்ளார். இவரை எதிர்த்து தற்போதைய கென்ய பிரதமர் ரெய்லா ஒடிங்காவின் சகோதரர் போட்டியிடுகிறார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் சகோதரர் என்ற அங்கீகாரம் உள்ளதால் தேர்தலில் தனக்கு வெற்றி வாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறார் மாலிக்.

## அமெரிக்க இராணுவத்தில் அதிகரிக்கும் தற்கொலைகள்

வோஷிங்டன், ஜன.19

அமெரிக்க இராணுவ வீரர்கள் தற்கொலை செய்து கொள்வது அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு 349 வீரர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இது ஆப்கனில் மோதல்களில் உயிரிழந்த வீரர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும். கடந்த ஆண்டில் ஆப்கனில் அமைதிப் பணியில் ஈடுபட்டு, பயங்கரவாதிகளுக்கெதிரான போரில் உயிரிழந்த வீரர்களின் எண்ணிக்கை 229 என ராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டில் தற்கொலை செய்து கொண்ட இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 311 ஆகும்.

தற்கொலை செய்து கொள்வோரில் அமெரிக்க கடற்படை வீரர்களே அதிகம் என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடும் மன அழுத்தமே இந்தகைய தற்கொலைகளுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## கொல்லப்பட்டார் பிரான்ஸ் உளவாளி

பரிஸ், ஜன.19



பணயக் கைதியாகப் பிடித்து வைத்திருந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த உளவாளியைக் கொன்று விட்டதாக சோமாலியத் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர்.

2009ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த டெனிஸ் அலெக்ஸ் என்பவரை சோமாலிய தீவிரவாதிகள் பணயக் கைதியாகப் பிடித்தனர்.

அலெக்ஸை மீட்பதற்கு கடந்த வாரம் பிரான்ஸ் இராணுவம் முயற்சி செய்தது. அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இந்தநிலையிலேயே அவரைக் கொலை செய்து விட்டதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான காணொலியையும் தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர். அதில் பிரான்ஸ் ஜனாதிபதிக்கான செய்தி ஒன்றை அலெக்ஸ் வாசிப்பது போன்ற காட்சி இடம்பெற்றுள்ளது.

எனினும் அலெக்ஸை மீட்கும் முயற்சியின் போது அவர் கொல்லப்பட்டு விட்டதாக பிரான்ஸ் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆங்கில அறிவை வளர்க்க ரூ.153 கோடி

லண்டன், ஜன.19

பிரிட்டனில் வசிக்கும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளுக்கு ஆங்கில மொழி அறிவை வளர்ப்பதற்கு 153 கோடி ரூபாவை பிரிட்டன் அரசு ஒதுக்கியுள்ளது.

பிரிட்டனில் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த பலர் வசித்து வருகின்றனர். இவர்களது குழந்தைகளும், ஆங்கில மொழியில் திறமை பெற பிரிட்டன் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. பிரிட்டனில் அனைவரும் ஆங்கில அறிவு பெற்றிருத்தல் வேண்டும் என்ற நோக்கிலேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

# முடிவுக்கு வந்தது காத்ரியின் முற்றுகைப் போராட்டம்

இஸ்லாமாபாத், ஜன.19

பாகிஸ்தானில் போராட்டம் நடத்தி வரும் தாகிர் அல் காத்ரியுடன் நடந்த பேச்சுக்களில் சுமூக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.


பாகிஸ்தானில் ஊழல், வன்முறை பெருகி விட்டது. அரசு உடனடியாக பதவி விலக வேண்டும் என்று தேரிக் மின் ஹஜ்-உல்-குரான் கட்சியின் நிறுவுநர் தாகிர் அல் காத்ரி கடந்த நான்கு நாள்களாகத் தொடர் போராட்டம் நடத்தி வருகிறார்.

தற்போதைய ஊழல் அரசு உடனடியாக பதவி விலக வேண்டும், இல்லாவிட்டால் எகிப்து, துனிசியா, ஏமன் போன்ற நாடுகளை போன்று பாகிஸ்தானில் தொடர் போராட்டம் நடைபெறும் என்றும் காத்ரி எச்சரித்திருந்தார்.

அதையடுத்து காத்ரியைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனினும் காத்ரியை கைது செய்தால் நிலைமை மேலும் மோசமடையும் என்பதால், அவருடன் பேச்சு நடத்த பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காக மத விவகாரத் துறை அமைச்சர் குர்ஷித் ஷா தலைமையில் முக்கிய கட்சிகளின் தலைவர்கள் அடங்கிய நான்கு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இவர்கள் காத்ரியுடன் பேச்சுக்களை நடத்தினர்.

சுமார் 5 மணி நேரம் நடைபெற்ற இந்த பேச்சுக்களில் உடன்பாடு ஏற்பட்டது. அதனையடுத்து நாடாளுமன்ற முற்றுகை போராட்டத்தை கைவிடுவதாக காத்ரி அறிவித்தார்.



## மெக்ஸிகோவில் விமான விபத்து; 8 பேர் சாவு

டுக்ஸ்ட்லா, ஜன.19

தெற்கு மெக்சிக்கோவில் தனியாருக்குச் சொந்தமான சிறிய விமானம் ஒன்று விபத்துக்குள்ளானது. இதில் 8 பேர் உயிரிழந்தனர்.

விமானத்தில் 3 பெரியவர்களும், 3 குழந்தைகளும், விமானி மற்றும் துணை விமானி ஆகியோர் பயணம் செய்ததாக முதல்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

விமான இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்

## இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்ட 600 பூனைகள் மீட்பு

பீஜிங், ஜன.19

இறைச்சிக்காகக் கொண்டு செல்லப்பட்ட 600 பூனைகள் மீட்கப்பட்டன. இந்தச் சம்பவம் சீனாவில் இடம்பெற்றுள்ளது.

சீனாவின் மத்திய பகுதியில் குவாங்டாங் மாகாணத்தில் உள்ள ஓர் உணவு விடுதிக்கு இறைச்சிக்காக, 600 இற்கும் அதிகமான பூனைகள் 50 மூங்கில் கூடைகளில் அடைத்து எடுத்துச் செல்லப்பட்டன.

பூனைகளை ஏற்றிச் சென்ற வாகனம் ஓர் இடத்தில் விபத்துக்குள்ளாகி நின்றுவிட்டது.

விபத்துக்கான வாகனம் அப்படியே நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. கூடைகளில் அடைக்கப்பட்டிருந்த பூனைகள் பல நாள்களாக பட்டினி கிடந்ததால் 100 பூனைகள் உயிரிழந்துள்ளன.

அதனால் அந்த பகுதியில் துர்நாற்றம் வீசியது. இதை அறிந்த மிருக பாதுகாப்பு ஆர்வலர்கள், மீதமுள்ள பூனைகளை மீட்டுள்ளனர்.

# பாக். பிரதமருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை

## ஊழலுக்கு எதிரான விசாரணை அமைப்பு உயர்நீதிமன்றில் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஜன.19

பாகிஸ்தான் பிரதமருக்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகளுக்குப் போதிய ஆதாரங்கள் இல்லை என்று ஊழலுக்கு எதிரான விசாரணை அமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப்புக்கு எதிரான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது அங்கு முன்னிலையான ஊழலுக்கு எதிரான விசாரணை அமைப்பின் தலைவரே இவ்வாறு தெரிவித்தார்.

அஷ்ரப்புக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குக் குறித்து முன்னர் ஊழலுக்கு எதிரான விசாரணை அமைப்பு விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. அந்த விசாரணைகளிலேயே குற்றச்சாட்டுகளுக்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்று கண்டறியப்பட்டதாக அந்த அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

வழக்கின்போது முன்னிலையான ஊழலுக்கு எதிரான விசாரணை அமைப்பின் (என்.ஏ.பி.) தலைவர் பாஸி பொகாரி கூறுகையில்,

''வழக்கில் என்.ஏ.பி. அதிகாரிகளுக்குக் கிடைத்த ஆதாரங்கள் போதுமானவையாக இல்லை. இந்த மின்திட்டத்தில் நிகழ்ந்த ஊழலால் அரசுக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை. விசாரணையை அவசர கதியில் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். அவர்கள் அளித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்குப் போதிய ஆதாரங்கள் இல்லை. இந்த அறிக்கையின் அடிப்படையில் வழக்கு தொடரப்பட்டால் குற்றவாளிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விடுவார்கள்'' என்று தெரிவித்தார்.

பொகாரியின் கருத்தால் அதிருப்தியடைந்த நீதிபதிகள் குழு-

''பொகாரி குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு சார்பாக முன்னிலையான சட்டத்தரணியைப் போன்று பேசுகிறார். இந்த வழக்கில் என்.ஏ.பி. இப்போது தெரிவித்துள்ள நிலைப்பாடு உண்மையை பிரதி பலிப்பதாக இல்லை. சட்டத்தின் முன் அனைவரும் சமமே. இந்த ஊழல் வழக்கில் உச்ச நீதி மன்றம் உறுதியான நடவடிக்கையை எடுக்கும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட என்.ஏ.பி.யின் விசாரணை அறிக்கைகள் அனைத்தையும் உடனடியாக நீதிமன்றத்தில் பார்வைக்குக் கொண்டு வர வேண்டும்'' என்று உத்தரவிட்டுள்ளது.

விசாரணை அறிக்கைகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்க அரச தரப்பினர் ஒப்புக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கச் சுரங்கத்துக்காக மோதல் சூடானில் 100 பேர் உயிரிழப்பு

நியூயோர்க், ஜன.19
சூடானில் தங்கச் சுரங்கத்தைக் கைப்பற்றுவது தொடர்பாக இரு பழங்குடியினப் பிரிவினரிடையே நடைபெற்ற மோதலில் 100 பேர் உயிரிழந்துள்ளனர் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஐ.நா. செய்தித் தொடர்பாளர் மார்டின் நெசிர்கி இது குறித்து தெரிவிக்கையில்: -

''டார்பர் பகுதியில் உள்ள தங்கச் சுரங்கத்தைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக பெனி ஹுசைன் மற்றும் அபல்லா என்ற இரு பழங்குடியின மக்களுக்கு இடையே மோதல் நடைபெற்று வருகிறது.

ஜனவரி 5 முதல் 9ஆம் திகதிகளில் கடும் மோதல்கள் நடைபெற்றுள்ளன. இதில், 100இக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

சில கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. 70 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வசிப்பிடத்தை விட்டு வெளி யேறியுள்ளனர்.

துப்பாக்கி ஏந்திய போராட்டக்காரர்கள் வீதிகளில் தடைகளை ஏற்படுத்தியுள்ளனர். மோதல் இடம்பெற்ற பகுதிகளுக்கு ஐ.நா. பார்வையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இருப்பினும், கடந்த சில நாள்களாக வன்முறைகள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. டார்பரில் செயல்படும் ஐ.நா- ஆபிரிக்க கூட்டமைப்பு உதவி மையம், 75 ஆயிரம் கிலோ நிவாரணப் பொருள்களை அனுப்பி வைத்துள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் வாகனங்கள் அப்பகுதிக்குச் செல்ல போதிய பாதுகாப்பு அளிக்கப்படுகிறது- என்று தெரிவித்தார்.

சூடானில் வன்முறைகளால் 2003ஆம் ஆண்டில் இருந்து சுமார் 3 லட்சம் மக்கள் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# வெள்ளத்தில் மிதக்கிறது தலைநகர் ஜகார்த்தா



ஜகார்த்தா, ஜன.19
இந்தோனேஷியாவில் பலத்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர். தாழ்வான பகுதிகளில் வசித்த 20 ஆயிரம் பேர் வேறு பகுதிகளுக்கு தற்காலிகமாக இடம் பெயர்ந்து சென்றனர்.

இந்தோனேசியாவில் ஆண்டுதோறும் மழைக் காலங்களில் வெள்ளம் கரை புரண்டோடும். இந்த ஆண்டு வழக்கத்தைவிட அதிகமாக ஆறுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

நாட்டின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. ஒரு கோடியே 40 லட்சம் மக்கள் வசிக்கும் தலைநகர் ஜகார்த்தாவில் 50 செ.மீ. உயரத்துக்கு தண்ணீர் தேங்கியுள்ளது. வீடுகள், அலுவலகங்கள், பள்ளிகள் உட்பட அனைத்து இடங்களிலும் புகுந்த வெள்ள நீர், ஜனாதிபதி மாளிகையையும் விட்டுவைக்கவில்லை.

இந்த வெள்ளத்தில் சிக்கி இதுவரை 4 பேர் உயிரிழந்தனர். 20 ஆயிரம் பேர் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் பருவ மழை பெய்யும்போதெல்லாம் ஆறுகளில் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் கடும் சிரமத்துக்குள்ளாகும்நிலை தொடர்கிறது.

இதேவேளை, உத்தியோக பூர்வ பயணமாக கடந்த வியாழக்கிழமை ஜகார்த்தா வந்த ஆர்ஜென்ரீன ஜனாதிபதி கிறிஸ்டினா கிர்ச்னரை, முழங்கால் அளவு தண்ணீரில் நின்றபடி இந்தோனேஷிய ஜனாதிபதி சுசிலோ பாம்பேங் யுதோயானோவும், அந்நாட்டின் வெளியுறவு அமைச்சரும் வரவேற்றமை குறிப்பிடத்தக்கது.

# புதையல் தேடியவருக்கு கிடைத்தது அதிர்ஷ்டம்

மெல்பேர்ன், ஜன.19
ஆஸ்திரேலியாவில் புதையலை தேடிக் கொண்டிருந்த நபருக்கு 5 கிலோ தங்க கட்டி கிடைத்துள்ளது.



ஆஸ்திரேலியாவில் விக்டோரியா மாகாணத்தின் பாலாரட் என்ற நகருக்கு அருகே உலோகப் பொருள்களைத் கண்டறியும் கருவியின் (மெட்டர் டிடெக்டர்) உதவியுடன் புதையலை நபர் ஒருவர் தேடிக் கொண்டி ருந்தார்.

அப்போது தரைக்கு கீழே இரண்டடி ஆழத்தில் உலோக கட்டி இருந்ததால் அது காட்டியது.

அதனையடுத்து அந்த இடத்தை தோண்டி பார்த்ததில், சுமார் ஐந்தரை கிலோ எடையுள்ள தங்க கட்டி கிடைத்தது. இதன் விலை 3 லட்சம் டொலர்களுக்கு மேல் என்று கருதப்படுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆஸ்திரேலியாவில் சூடு பிடித்த தங்கக் வேட்டையின் போது, இந்த இடம் தங்கம் தேடுவோர் மத்தியில் பிர பலமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டனின் இளவரசர் ஹரியே திருமணம் செய்ய தகுதியானவர்

நியூயோர்க், ஜக.19
உலகில் திருமணம் செய்து கொள்வதற்கு மிகத் தகுதியான இளைஞராக பிரிட்டன் இளவரசர் ஹரி (வயது 28) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.




அமெரிக்காவின் பிரபல பத்திரிகை ஒன்று சமீபத்தில் பெண்கள் திருமணம் செய்து கொள்ளக்கூடிய அளவுக்கு தகுதியுடைய 50 நபர்களை தெரிவு செய்தது.

அந்தப் பட்டியலில் இளவரசர் ஹரி முதலிடத்தை பிடித்துள்ளார். மேலும் இளவரசர் ஹரி, பிரிட்டன் விமானப் படையுடன் இணைந்து அபாச்சேரக இராணுவ ஹெலிகாப்டர்களை இயக்கும் வல்லமை உடையவர் என்றும் ஆப்கனில் தலிபான்களுடன் போரிட்ட முதலாவது மிகச் சிறிய வயதுடைய அரச குடும்ப உறுப்பினர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளார்.

அத்துடன் சகோதரர் வில்லியமை விட, மன இறுக்கம் குறைந்தவர் என்றும், வசீகரமானவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆயிரத்து 500 கோடி ரூபா நிதியுதவி: பலஸ்தீனத்துக்கு வழங்குகிறது சவூதி

ரமல்லா, ஜன.19
பலஸ்தீனத்துக்கு 1,500 கோடி ரூபா நிதியுதவியை சவூதி அரேபிய அரசு வழங்கியுள்ளது.



பலஸ்தீன அரசுக்குத் தற்போது பெரும் நிதி நெருக்கடி உள்ளது. அதையடுத்து பலஸ்தீனத்துக்கு அரபு நாடுகள் உதவ வேண்டும் என்று பலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸ் அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனை ஏற்றுக் கொண்ட சவூதிஅரேபியா ரூ.1,500 கோடியை பலஸ்தீனத்துக்கு வழங்க முன்வந்துள்ளது.

இந்த தகவலை பாலஸ்தீன ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்தது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம் 12.06.1930
மறைவு 20.12.2012

**அமரர் செல்லக்கண்டு மகேஸ்வரி**

தன் உறவென்று பாராது - பிறர்
உறவுகளையும் தனதெனப் பார்த்து
எல்லோருக்கும் வளர்பிறையானீர்
அனைவருக்கும் மெழுகுவர்த்தி ஆனீர்
கண்மூடும் வேளையிலும் கணபதியே காக்க!
என தெய்வீக சிந்தனையோடு சிவபதம் அடைந்த
எம் அம்மா கனவிலும் நினைவிலும் தோன்றுவாயாக!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## சிரியாவில் குண்டு வெடிப்பு

சிரியாவில் இடம் பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவின் இட்லிப் நகரிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த நகரம் சிரிய அரச படைகளின் கட்டுப் பாட்டில் உள்ளது. நகரின் சுற்றுப்புறங்கள் போராளிக் குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

போராளிக்குழுக்கள் அரச படைகளைக் குறிவைத்து நகருள் குண்டுத் தாக்குதல்களை மேற் கொண்டு வருகின் றன.

நேற்றுமுன்தினம் கார் ஒன்றில் மறைத்து வைக்கப் பட்டிருந்த குண்டு ஒன்றே வெடித்தது என்று கூறப்படுகிறது.

அதில் 20 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்தனர்.


**கணினிதிருத்தம் Computer Repair**
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா?
உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து
திருத்தித் தருகின்றோம்.
அழையுங்கள்: Shan -0779969058
412,Hospital Road,Jaffna
(28299)(45.7.6)

**காணி விற்பனை**
தெல்லிப்பழை, வீமன்காமம், பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையில் பிரதான வீதியிலிருந்து 50 யார் தூரத்திலமைந்த 38 பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு :0750395884, 0773960224
(28353)(6.711)

**வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்**
சகல விதமான மோட்டார் வாகனங்களுக்குரிய பிளாஸ்ரிக் உதிரிப்பாகங்கள் ஒட்டுதல், ஸ்ரியேரிங் வீல் ரிபெயரிங் செய்தல், வைபர் மோல்டிங், பிளேற்றிங் மோல்டிங், கண்ணாடி பொலிசிங் செய்தல் என்பன சிறந்த முறையில் சீர்செய்து கொடுக்கப்படும். (நல்லூர் பின் வீதி)
இல.286/2,அரசடி வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:கி.கேதீஸ்வரன் 077351 2591
(28228)(45-6-7)

**வீடு காணி விற்பனை**
யாழ். பருத்தித்துறை வீதியில்
நீர்வேலி உபதபாற் கந்தோர்
அமைந்திருக்கும் வீடும் காணி
5¾ பரப்பும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு :077 6067 026
(சி/5964)(6.745)

**காணிவிற்பனைக்கு**
ஊரெழு -கரந்தன் வீதியில் ஊரெழுச் சந்தியிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் வீதியின் அருகில் வலது புறத்தில் வைரவர் கோயிலுக்கு முன்பாக 31 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: 0775484695,0777606040
(சி/6710)(6.7.4)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
PULSAR 180CC, Red& Black, UG4, 4S. 14500km பாவித்த நல்ல நிலையிலுள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:077 9025987
(28458) (6.7.4)


# மரண அறிவித்தல்

## திருமதி கௌரிதேவி வரதன் (கௌரி)



தெல்லிப்பழை வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும், லண்டன் கிறீன்போர்ட்டை (Greenford, Middlesex) வசிப்பிடமாகவும் கொண்ட கௌரிதேவி வரதன் (கௌரி) 13.01.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்தம்பி செல்லத் துரை (புன்னாலைக்கட்டுவன்) மற்றும் மெல்போர்ன் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மனோன்மணி (வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழை) தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், அவுஸ்.சிட்னியில் வசிக்கும் தம்பையா தியாகராசா (இணுவில்) - காலஞ்சென்ற தங்கம்மா (உரும்பிராய்) தம்பதியரின் அன்பு மரு மகளும், வரதன் அவர்களின் அன்பு மனைவியும், சறோயினிதேவி (மெல்போர்ன்), சாந்தாதேவி (மினசோட்ரா, அமெரிக்கா), உஷாதேவி (மினசோட்ரா, அமெரிக்கா), வசந்தாதேவி(சிட்னி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தயாளினி, சிவச்சந்தி ரன் (சிட்னி), தயாளன், கல்யாணி (நியூ ஜெசி, அமெரிக்கா), சிவனேசன் (மெல்போர்ன்), இராஜ லிங்கம்(மினசோட்ரா, அமெரிக்கா), பால சுப்பிரமணியம் (இலங்கை), விஜயகுமார்(சிட்னி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.01.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 முதல் 5 Courthope Road, Greenford, Middlesex UB6 8PZ இல் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அதன் பின்னர் தகனக்கிரியைகள் 11.30 முதல் St Marylebone Crematorium, East End Road, London N2 ORZ இல் அமைந்துள்ள மயானத்தில் நடைபெறும்.

குறிப்பு: அன்றைய தினம் நாளை (20.01.2013) காலை 9.30 மணிக்கு இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய தெற்கு வீதியில் உள்ள அன்னாரின் சகோதரன் க.கோடீஸ்வரன் இல்லத்திலும் சாந்திப் பிரார்த்தனை இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: Srirangan 004478 5212 1049 (28457) (6.7.2) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர்கள் பலவந்தமாக வேலை நீக்கம்

## நிர்வாகங்களுக்கு இ.தொ.கா.எச்சரிக்கை

நுவரெலியா,ஜன.19

தோட்டத் தொழிலாளர்களை பலவந்தமாக வேலை நீக்கும் தோட்ட நிர்வாகங்களுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து இ. தொ. கா. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஆண், பெண் இருபாலாரும் 60 வயது வரை தோட்டங்களில் வேலை செய்யலாம் என்ற நியதி அமரர் தொண்டமான் காலத்திலேயே நடைமுறைக்கு வந்தது. இந்த நிலையில் நிறுவனங்களின் இலாப நோக்குடன் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யும் நடவடிக்கையை ஏற்க முடியாது.

மலையக பெருந்தோட்டங்களிலிருந்து அதிகளவு இலாபம் பெறும் நோக்கில் தோட்ட நிர்வாகங்கள் தோட்டத் தொழிலாளர்கள் ஓய்வு வயதை அடைய முன்னரே வேலையிலிருந்து நீக்கி, அவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வேலை வழங்கப்பட்டு வருகிறது.

இந்தச் செயற்பாட்டை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

கூட்டு ஒப்பந்தத்துக்கு அமைவாக சில தோட்ட நிர்வாகங்கள் செயற்படுவதற்குப் பின்வாங்குகின்றன.

ஆண், பெண் இருபாலாரும் 60 வயதை அடைந்த பின்னரே தமது ஓய்வூதியத்தைப் பற்றி சிந்திக்கவும், தீர்மானிக்கவும் முடியும். ஆனால் சில தோட்ட நிர்வாகங்கள் அவர்களை இடைப்பட்ட காலத்தில் பலவந்தமாக வேலையிலிருந்து நிறுத்தி விடுகின்றன.

கொடுப்பனவுகளை வழங்கி மீண்டும் அவர்களையே நாள் கூலிக்கு வேலைக்கு அமர்த்துவது எவ்விதத்தில் நியாயமாகும்.

இந்தச் செயற்பாட்டால் அவர்களது சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, வருடாந்த போனஸ், இலாபப் பங்கீடு அனைத்தும் நிரந்தரமற்ற கொடுப்பனவுகளாக மாற்றம் பெறுகின்றன.

அதேவேளை கடமையில் இருக்கும் ஒருவருக்கு விபத்து நேரிடும் போது அதற்கான சலுகைகளும், மருத்துவ வசதிகளும் பெறும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றன.

தொண்டமான் காலத்திலே 60 வயதை அடையும் வரை தோட்டத் தொழிலாளர்கள் வேலை செய்யலாம் என்ற நிலை ஏற்பட்டிருந்தது. அது இன்றும் கூட நடைமுறையில் இருந்து வருகின்றது. ஆனால் இலாபத்தை நோக்காகக் கொண்டு தொழிலாளர்களை கைகூலிகளாகப் பயன்படுத்த தோட்ட நிர்வாகங்கள் முற்சிக்கின்றன. -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நகர சபைக்கு வரி செலுத்தாத 28 பேருக்கு சட்ட நடவடிக்கை

### காத்தான்குடி தலைவர் அறிவிப்பு

காத்தான்குடி,ஜன.19

காத்தான்குடி நகர சபைக்கு வரி செலுத்தத் தவறிய 28 பேருக்கு எதிராக சட்ட நவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று காத்தான்குடி நகர சபைத் தலைவர் அஸ்பர் தெரிவித்தார்.

கடந்த 2012 ஆம் ஆண்டுக்குரிய வரியை காத்தான்குடி நகர சபைக்கு செலுத்த தவறிய 28 பேருக்கும் எதிராக காத்தான்குடி நகர சபை நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு வரி செலுத்தத் தவறிய வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், எட்டு ஓட்டோ சாரதிகள் ஆகியோருக்கு எதிராக வழங்குத் தொடரப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## கஞ்சா வைத்திருந்தவர் செலுத்தினார் ரூ.10,000

அம்பாறை,ஜன.19

அம்பாறை, இறக்காமம் பிரதேசத்தில் கஞ்சா வைத்திருந்த இளைஞர் ஒருவருக்கு தண்டப் பணமாக 10,000 ரூபாவை செலுத்துமாறு அம்பாறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம். எஸ்.பிரிங்கி உத்தரவிடுள்ளார்.

தமண பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்தே இறக்காமம் தண்ணீர் தாங்கிக்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றை சோதனையிட்டனர்.

அதன்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிராம் கஞ்சாவை பொலிஸார் மீட்டதுடன், இளைஞரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோதே அவரை 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக செலுத்தமாறு உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



காத்தான்குடியில் நிர்மாணிக்கப்பட்ட அஷ்ஷெய்கு அறைமவ் லெவ்வை ஞாபகார்த்த மண்டபத்தை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத் திறந்து வைத்தார்.

## கடலில் மூழ்கி மாணவன் சாவு

களுவாஞ்சிக்குடி,ஜன.19

களுவாஞ்சிக்குடி, ஒந்தாஞ்சிமடம் கடலில் நீராட சென்ற மாணவன் நேற்று முன்தினம் வியாழக் கிழமை மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மகிலூர் சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவனான கிரிஷனன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கல்முனையில் கரையொதுங்கிய பெண்ணின் சடலம்

கல்முனை,ஜன.19

கல்முனையில் கரையொதுங்கிய நிலையில் பெண்ணொருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

மனநிலை பாதிக்கப் பட்டிருந்த நிலையில் காணாமற் போன ஆதம்பாவா ரிசானா (வயது-34) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப் பட்டுள்ளது.

இந்த நபர் கல்முனை 3ஆம் பிரிவைச் சேர்ந்தவர் என்று கல்முனை பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(ச)

## தொப்பிகலவில் ஆயுதங்கள் மீட்பு



மட்டக்களப்பு,ஜன.19

மட்டக்களப்பு, தொப்பிகல பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை வாழைச்சேனை பொலிஸார் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை மீட்டுள்ளனர்.

வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் லால் செனவிரத்னவுக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வாழைச்சேனை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் ரத்னாயக்கா தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினரே தொப்பிகல பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

இந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் முன்னர் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப் படுகிறது.

கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## லொறி விபத்தில் இருவர் படுகாயம்

**லொறி 200 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.**

கண்டி,ஜன.19

தேயிலைத் தூள் ஏற்றிக் கொண்டுச் சென்ற லொறி 200 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கண்டி, நெல்லியகொட என்னும் இடத்தில் நேற்று வெள்ளிக் கிழமை காலை 6 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

பசறையிலிருந்து கண்டிக்கு தேயிலை தூளை ஏற்றிக்கொண்டு சென்ற லொறியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## புதிதாக புனரமைக்கப்பட்ட வீதிகள் எங்கும் குழிகள்

### காத்தான்குடி மக்கள் விசனம்



காத்தாக்குடி,ஜன.19

காத்தான்குடி நகரசபைப் பிரிவில் புதிதாக புனரமைக்கப்பட்ட பல வீதிகள் குறிப்பிட்ட சில நாள்களுக்குள்ளேயே சேதமடைந்து குன்றும் குழியுமாக மாறிவிட்டன என்று மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் விநியோகிக்கப்படும் குடிதண்ணீரைப் பெறுவதற்காக வீதியில் பல இடங்கள் தோண்டப்பட்டுள்ளன.

அவ்வாறு தோண்டப்படும் குழிகள் முறையாக மீண்டும் மூடப்படாமையால் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வருபவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

எனவே தோண்டப்பட்டு குழிகளாக்கப்பட்டுள்ள இந்த வீதிகளை மீண்டும் முறையாக மூடி செப்பனிட்டுத் தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவுகளுடன் தமிழ்ப் பகுதிகளை இணைப்பது நிறுத்தம்?

### ஜனாதிபதி வாக்குறுதி அளித்துள்ளாராம்

மட்டக்களப்பு,ஜன.19

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழும் கிராமங்களை முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவுகளுடன் இணைப்பதற்கான நடவடிக்கை இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தமது கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி அதனை நிறுத்திவைத்திருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர் அருண் தம்பிமுத்து தெரிவித்தார்.

இதேவேளை தமிழ்க் கிராமங்களை பிரிப்பது குறித்து கூட்டமைப்பும் ஆட்சேபனை தெரிவித்திருந்தது.

இந்த விடயம் குறித்து கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்மேலதிக செயலாளருக்கு மனு அனுப்பி இருந்தமை தெரிந்ததே.

இது தொடர்பான தீர்மானம் மீளாய்வு செய்யப்படவுள்ளது என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உறுதி அளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்

(19.01.2013)



திரு. அந்தோனிப்பிள்ளை

**இருதயநாதர்**

B.A. (Hons), Dip.in.Edu.

திருந்தாத இதயங்கள் பலவற்றை
சீர்திருத்திய செயலாளன்
புகழ் விரும்பாப் பெருமகனாய்
புரிந்த விந்தைகள் பற்பல
விரும்பிய பலன் தரு விருட்சம் அவர்
விழுது விடும் காலத்திலே விடைபெறும் நேரம் இது
திரு இருதயநாதர் அவர் அருள் பெற்றே
சீரோடும் சிறப்போடும் வாழ்க! பல்லாண்டு! Best Wishes

ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை ம.வி.
(27774)(15.6.7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது
பாடசாலையின்
நலன் விரும்பியான
உயர்திரு.
மு.வேலாயுதபிள்ளை

(பிரதி அதிபர், யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி) அவர்கள்
18.01.2013
அன்று ஓய்வுபெற்றுள்ளார்.
ஓய்வு காலத்தில் சகல சௌபாக்கி யங்களுடனும் நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
யா/தாவடி இ.த.க.பாடசாலை, கொக்குவில்.

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொ.பே:077735 3957 (28462)(6.7.4)

## வாகனம் விற்பனைக்கு

P.E 4XXX இலக்கமுடைய சுப்பர் G.L.172 DUAL A/C Full Adjustable Seat, Alloy wheel Good Condition.
உற்பத்திவருடம்2002, முதல்பதிவு-2007-10
விலை 46லட்சம் (46,00000)
தொடர்பு: 0777004363

## மலேசியாவில் உடனடி வேலை வாய்ப்பு

Samsung Electronic Company இல் Packing வேலைக்கு ஆட்கள் தேவை. குறைந்த செலவுடன் பயணம் செய்து மாத கொடுப்பனவில் மீதிப் பணம் செலுத்தும் வசதி செய்து தரப்படும்.
T.P:0776911402

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## இணுவில் மக்லியோட் வைத்தியசாலை

### தேவை - தொழிலாளி

இணுவில் மக்லியோட் வைத்தியசாலைக்கு ஒரு தொழிலாளி (Labourer) தேவைப்படுகின்றது. விரும்பியவர்கள் 22.01.2013 இற்கு முன் வைத்திய மேலதிகாரியை ஆவணங்களுடன் சந்திக்கவும்.

வைத்திய மேலதிகாரி.
Madical Superintendent. T.P: 021 224 1569

## Singapore இல் வேலை வாய்ப்புடன் கூடிய Hotel Management பயிற்சி

**Spot Admission**

ஒரே வேலை நாளில் Offer Letter தரப்படும்.
28 நாட்களில் Student Pass Visa கிடைக்கும்.

Certificate Levelக்கு - ஒரு வருட வீசா.
Diploma Levelக்கு - 1 1/4 வருட வீசா.
HND Levalக்கு - 2 வருட வீசா.

HND Level முடித்தவர்களுக்கு Skill Pass உடன் நிரந்தர வேலை வாய்ப்பு செய்யும் வசதி.
Skill Pass கிடைத்த பின்பு PR கிடைக்கும் வாய்ப்பு.

Application Closing Date :- 31/01/2013

**BRISTOL BUSINESS SCHOOL**

5001 Beach Road
#04-03 Golden Mile Complex
Singapore 199588

Regional Manager
No :01, 2nd Lane,
Power House Road,
Jaffna.
T.P - 0212219787

தொடர்புகளுக்கு :- 0777751382 / 0773448706 / 0772521070

## 31 ஆம் நாளில் நினைவு கூரல்



அமரர்
**இராசலிங்கம் காந்தலிங்கம்**

ஏனடா என்னை மறந்தாய்!
நானடா பாவியிலும் பாவி
தேனடா நீ எனக்குத்
தெவிட்டாத அமுதடா!நான் பெறா மகனடா
என் தங்கையின் மகனடா
அன்பான மகனடா, அறிவுள்ள ஆசானடா
நெறிதவறா மகனடா, நெஞ்சம் துஞ்சுதடா
உன்னை, உன் சுகத்தை ஏன் மறந்தாய் மகனே
திருவெம்பாவை நாள் திருவெம்பாவை நாள்
திருவிளையாடல் சிவன் நடத்திய நாடகம்
நடிகனும் நீயடா

என்றும் மறவா அன்பான பெரியம்மா
திருமதி சத்தியரஞ்சிதம் சத்தியசேகர்
(ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை, ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை), கோண்டாவில்.
(28468)(2.6.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**செல்வநாயகம் பிரேமாவதி**



தோற்றம் 07.08.1952 மறைவு 20.12.2012

எம் அருமை அம்மாவே!
எத்தனை நாள்கள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது

பனங்கட்டு கொட்டு மேற்கு,
மன்னார்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்லையா சிவகுருநாதன்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும்கொண்ட செல்லையாசிவகுரு நாதன் 15-01-2013 செவ் வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான செல்லையா - சிதம் பரம் தம்பதியரின் நான்காவது அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான அரியக்குட்டி - நாக ரத்தினம் தம்பதியரின் மரு மகனும், காலஞ்சென்றவர் களான சபாரத்தினம், ராமநாதி, ராசரத்தினம், செல்வராசா, சண்முகநாதன், பூபால சிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், புவனேஸ்வரி (சோதி - ஜேர்மன்) யின் அன்புக் கணவரும், ரேவதி(மணி - சுவிஸ்), தேவராணி (ராணி - ஜேர்மனி), மதியழகன் (மதி - சுவிஸ்), சியாமளா (மாலா - சுவிஸ்), கீதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுந்தரலிங்கம், யோகராசா, ஜெயந்தினி, சோதிநாதன், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கோபிசங்கர், உதயசங்கர், யகிர்தன், இசையழகா, மாதங்கி, மாலதி, அபிஷேக், அனுஜன், துளசி, பாவலன், சேயோன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20-01-2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
(28467)(6.7.2)

இணுவில் கிழக்கு (வங்கியடி), இணுவில்.
தகவல்: குடும்பத்தினர்.

## கிளி/ மாவட்ட கல்வி வளர்ச்சி அறக்கட்டளை இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் ஆங்கிலம் கற்பித்தலுக்கான ஆசிரியர் நியமனம்

ஒப்பந்த அடிப்படையில் இரண்டு வருடம் ஆங்கில பாடம் கற்பித்தலுக் காக க.பொ.த.சா/த பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்திபெற்ற கிளி நொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர் களிடமிருந்து விண்ணப்பம் கோரப் படுகின்றது. தெரிவு செய்யப்படுபவர் களுக்கு ஆறுமாத கால டிப்ளோமா பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக் காலத் தின் போது மாதாந்தம் 3000.00 கொடுப்பனவும் பயிற்சி நிறைவின் பின் மாதாந்தம் ரூபா 10,000 படியா கவும் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 31.01.2013

தலைவர்,
க.பத்மநாதன்
கிளி/ மாவட்ட கல்வி வளர்ச்சி அறக்கட்டளை
151 குமரபுரம், பரந்தன்.
தொ.பே.: 077 128 5073

## 31ஆம் நாள் நினைவு தினமும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 14 - 05 - 1952
ஆண்டவன் அடியில் 22 - 12 - 2012

**R.Kanagarajah**
*(Post Master)*

ஓய்வுபெற்ற உதவி தபால் அதிபர்(கிளிநொச்சி)

அன்னாரின் இறுதி இணைப்பாற்றுத் திருப்பலி ஆராதனைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் இரங்கற்செய்தி, மலர்வளையங்கள் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு21.01.2013 பி.ப. 1.00 மணிக்கு இல்லத்தில் நடைபெறும் 31ஆவது நினைவு தின மதியபோசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிள்ளைகள்: க.திரோன் தெரன்ஸ், க.டெரின் டெசன்,
மருமகள்: ரோஸ் ஆன், பேரப்பிள்ளை: ஜியாடா
மற்றும் உறவினர்கள்

இல. 12,பண்ட் றோட், திருநகர்,கிளிநொச்சி.
தொ.பே.: (+94) 77 848 7895, Skype : teyron7

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 02 - 04 - 1944
உதிர்வு 19 - 01 - 2008

அமரர்
**இராசப்பு அல்பிரட் அருமைநாயகம்**

ஐய்யனே ஐந்து ஆண்டுகள் வந்தனவோ
ஆறாக பெருகுதையா எங்கள் கண்களில் நீர்
வந்தானோ கயவன் உம்மைக் கொன்று சென்றானோ
பிஞ்சான உள்ளங்கள் புண்ணாகப் போனதையா
உன் நினைவால் உன்னை மறவாத எங்கள் அன்னையானவள்
தூக்கத்திலும் உன் பெயர் உரைக்கின்றாள்
மறவாள் என்றென்றும் மறையாத உன் நினைவு
மறவாத எங்கள் நெஞ்சம் மாறாது என்றென்றும்

மேரி இல்லம்,
குரவெட்டி வடக்கு, வதிரி. (27703)(5.6.7)

அ.றொபின்சன்
(மகன்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17.02.1926
மறைவு 31.01.2012

அமரர்
**இராசம்மா வேலுப்பிள்ளை**

பாசத்தின் உறைவிடமே! பண்பின் ஒளிவிளக்கே!
அறிவின் இருப்பிடமே! ஆண்டு ஒன்றாகியும்
ஆறவில்லை எம் மனம்
போகும் இடமெல்லாம் உங்கள் விம்பம்
கேட்கும் ஒலிகள் எல்லாம் உங்கள் குரல்
ஆறுதல் கிடைக்காமல் தவிக்கின்றோம்
காலங்கள் எத்தனை கடந்தாலும்
மாறாது உங்கள் நினைவலைகள்.

மடத்தடி, சாவகச்சேரி. (28017)(5.6.7)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சேவையிலிருந்து ஒதுக்கப்பட்ட பஸ்களை நீர்கொழும்பு பஸ் டிப்போ பொறியியலாளர்கள் மறுசீரமைத்துள்ளனர். அவ்வாறு மறுசீரமைக்கப்பட்ட முதலாவது பஸ்ஸை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அலரி மாளிகை வளாகத்தில் பார்வையிட்டார். அருகில் போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம காணப்படுகிறார்.

# பரீட்சையில் சித்தியடையாவிட்டாலும் பட்டப்படிப்பை மேற்கொள்ள வாய்ப்பு

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.19

ஜி.சீ.ஈ சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்திய டையாத மாணவர்கள் 2013 ஆம் ஆண்டில் பட்டப்படிப்பை மேற் கொள்ள நடவடிக்கைகள் எடுக் கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைத்துக்கொள் ளும் தேசிய நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை திருகோண மலை வித்தியாலோக வித்தி யாலயத்தில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இந்தப் பரீட்சைகளில் சித்திய டையாத மாணவர்கள் தகவல் தொழில்நுட்பப் பட்டப் படிப்புக்காக உள்வாங்கப்படுவர் என்று அவர் மேலும் கூறினார். (ச)

# ஷிராணியின் விவகாரம் நிறைவு; வழக்குத் தாக்கல் செய்யமுடியாது

## சுசில் பிரேமஜயந்த கூறுகிறார்



கொழும்பு,ஜன.19

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப் பிரேரணை விவகாரம் நிறைவடைந்து விட்டது. அந்த குற்றப் பிரேரணையிலுள்ள குற்றச் சாட்டுகளுக்கு எதிராக யாரும் வழக்குத்தாக்கல் செய்யமுடி யாது.

இவ்வாறு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரி வித்தார்.

ஊடகத்துறை அமைச் சின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற அமைச்சரவை முடிவு களை அறிவிக்கும் ஊடகவிய லாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை விவகாரம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

அந்த நடவடிக்கை தொடர் பில் யாரும் இனி எதனையும் செய்யமுடியாது. குற்றப் பிரேர ணையிலுள்ள குற்றச்சாட்டு களுக்கு எதிராக யாரும் நீதி மன்றத்துக்குச் செல்லமுடியாது.

புதிய நீதியரசர் மொஹன் பீரிஸ் முன்னர் வகித்த சகல பதவிகளில் இருந்தும் வில கிக்கொண்டதன் பின்னரே புதிய பதவியைப் பொறுப் பேற்றுள்ளார்- என்றார். (ச)

# குற்றவியல் சட்டவரைவு மீண்டும் 22இல் சமர்ப்பிப்பு

## அமைச்சர் கெஹலிய சொல்கிறார்

கொழும்பு,ஜன.19

குற்றவியல் சட்டத்தின் கீழ் சந்தேகநபர் ஒருவரை 48 மணி நேரம் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கான சட்டவரைபு எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் மீண்டும் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவு களை அறிவிக்கும் செய்தியா ளர் மாநாடு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஊடக அமைச் சில் நடைபெற்றது.

மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குற்றவியல் சட்டத்தின் கீழ் ஒரு சந்தேகநபரை 12 மணித்தியாலங்களே தடுத்து வைப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. புதிய சட்ட திருத்தத் தின் பிரகாரம் 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரணை செய்ய முடியும்.

எனினும் அதற்கு மாஜிஸ் திரேட் ஒருவரின் அனுமதி பெறப்படவேண்டும்.

ஏற்கனவே இந்தச்சட்ட வரைவு நாடாளுமன்றத்துக் குக் கொண்டுவரப்பட்ட போது உயர் நீதிமன்றத்துக்கு இந்த விவகாரம் கொண்டு செல்லப்பட்டது.

உயர் நீதிமன்றம் இந்தச் சட்டவரைவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை நிரூபிக்கப்படவேண்டும் என்று தீர்ப்பு வழங்கியிருந் தது.-என்றார். (ச)

# 3 குற்றச்சாட்டுகளில் 17 வர்த்தகர்கள் கைது

கொழும்பு,ஜன.19

தடைசெய்யப்பட்ட அள வீட்டு உபகரணங்களைப் பயன்படுத்திய மீன் வியா பாரிகள் ஏழு பேர் பேரு வளையில் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இலங்கையில் பயன் படுத்துவதற்கு தடை விதிக் கப்பட்டிருந்த தராசுகளை சந்தேகநபர்கள் வைத்திருந் தனர் என்று அளவை மற் றும் தர நிர்ணய சேவைகள் திணைக்களத்தின் விசேட சுற்றிவளைப்புப் பிரிவு தெரி வித்துள்ளது.

இதேவேளை, முத்திரை பதிக்கப்படாத தராசுகளைப் பயன்படுத்திய சில்லறை வியாபாரிகள் நால்வர் களுத் துறையில் கைது செய் யப்பட்டுள்ளனர்.

அதேபோன்று எடை குறைந்த பாணை விற்பனை செய்த ஆறு வர்த்தகர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை களுத்துறையில் கைது செய் யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# ஷிராணி வழங்கிய இடமாற்றங்களை இரத்துச் செய்தார் மொஹான் பீரிஸ்

கொழும்பு,ஜன.19

முன்னாள் பிரதம நீதிய ரசர் ஷிராணி பண்டாரநாயக் கவால் மேல் நீதிமன்ற நீதி பதிகள் ஏழு பேருக்கு வழங் கப்பட்ட இடமாற்றங்களை, உடன் நடைமுறைக்கு வரும் வகையில் புதிய பிர தம நீதியரசர் மொஹான் பீரிஸ் இரத்துச் செய்துள்ளார்.

நாளைமறுதினம் திங்கட் கிழமை நடைமுறைக்கு வரும் வகையில் மேல் நீதிமன்ற நீதியரசர்கள் ஏழு பேருக்கு முன்னாள் பிரதம நீதியரசர் இட மாற்றம் வழங்கியிருந்தார்.

இந்த நிலையில் குறித்த இடமாற்றம் இரத்து செய்யப் பட்டுள்ளது என்று நீதிபதி களுக்கு தொலைநகல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ரிசானாவுக்கு ரூ.8 லட்சம் நட்டஈடு

கொழும்பு,ஜன.19

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப் பட்ட ரிசானா நபீக்கின் குடும் பத்துக்கு 8 லட்சம் ரூபா நட்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் ரவுப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் ரிசானாவின் மூதூர் வீட் டுக்குச் சென்று 5 லட்சம் ரூபாவை குடும்பத்தாரிடம் வழங்கியுள்ளார். சமூக சேவை கள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா ரிசானாவின் குடும் பத்துக்கு 3 லட்சம் ரூபாவை வழங்கினார். இந்த நிதி உதவி ரிசானாவின் குடும்ப நிலையை உயர்த்தவே வழங்கப்பட் டுள் ளது. (ச)

# 13 கோடி ரூபா பொருள்கள் சுங்கப்பிரிவால் பறிமுதல்

கொழும்பு,ஜன.19

சட்டவிரோதமாக இறக்கு மதி செய்யப்பட்ட 13 கோடி ரூபா பெறுமதியான பொருள் களை, விமான நிலைய சுங்கப் பிரிவினர் பறிமுதல் செய்துள்ளனர்.

மத்திய கிழக்கு நாடு களில் தொழில் புரிந்து நாடு திரும்பும் போர்வையில் சிலர் பயணப் பொதிகளில் மறைத்து, இந்தப் பொருள் களைக் கொண்டு வந்திருந் தனர்.

இவ்வாறு சுங்கத் திணைக் களத்தின் ஊடகப் பேச் சாளரும் சுங்கப் பணிப்பாள ருமான லெஸ்லி காமினி தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட பொருள் கள் 13 கோடி ரூபா பெறு மதியானவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**வெளிநாட்டு சிகரெட், மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் போன்ற பல பொருள்கள் காணப்பட்டன.**

சுங்கத் திணைக்களத் தின் விசேட சுற்றிவளைப் புப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்க ளில் வெளிநாட்டு சிகரெட், மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் போன்ற பல பொருள்கள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 20 நாள்களுக்கு வீதி மூடப்படும்

கொழும்பு,ஜன.19

காலி வீதியில், வெள்ள வத்தை பகுதியில் புனர மைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் அந்தப் பகுதி 20 நாள்க ளுக்கு மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தை, ராம கிருஷ்ணா வீதி சந்தியி லிருந்து விகாரை மாவத்தை வரையான வீதியே இவ்வாறு மூடப்படவுள்ளது.

அதனால் வாகனச் சாரதி கள் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு போக்கு வரத்துப் பொலிஸார் அறிவு றுத்தியுள்ளனர். (ச)

# நாட்டின் மூன்று துறைகளின் அபிவிருத்திக்கு சிங்கப்பூர் உதவும்

கொழும்பு,ஜன.19

இலங்கையின் கல்வி, தொழில்நுட்ப, கட்டுமானத் துறைகளின் அபிவிருத் திக்கு உதவி செய்ய சிங்கப் பூர் முன்வந்துள்ளது.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து சிங்கப்பூரின் டெமாசெக் அறக்கட்டளை மற்றும் குடி யரசு பொலிரெக்னிக் நிறுவ னம் இந்தத் திட்டத்தை செயற்படுத்தவுள்ளது.

இலங்கையில் தேசிய முன்னுரிமை எனக் கருதப் படும் மூன்று துறைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்த வென பயிற்சித் திட்டங் களைக் குறித்த நிறுவனம் முன்னெடுக்கவுள்ளது.

60 தொழில் பயிற்சியாளர் களுக்கு இரண்டு வருட பயிற்சி நெறியை சிங்கப்பூர் நிறுவனம் வழங்கவுள்ளது. அதன்பின்னர் 120 பேருக்கு மேலும் பயிற்சி அளிக்கவுள் ளது.

**டெமாசெக் அறக் கட்டளை 4 லட் சத்து 33 ஆயிரம் சிங்கப் பூர் டொலர் களை செலவிட தீர்மானித்துள்ளது.**

இந்தத் திட்டத்துக்கென டெமாசெக் அறக்கட்டளை 4 லட் சத்து 33 ஆயிரம் சிங்கப்பூர் டொலர்களைச் செலவிட தீர்மானித்துள்ளது. (ச)

# அரசமைப்பை மீறி செயற்படுகிறது அரசு

## ஜனநாயகத்தை பாதுகாக்க வீதியில் இறங்க வேண்டிவரும் என்கிறார் சஜித் பிரேமதாச

கொழும்பு,ஜன.19

அரசமைப்பை மீறி அரசு செயற்பட்டு வருகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சி யின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கட்டான, திம்பிரிகஸ் கட்டுவ பிரதேசத்தில் நடை பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற் றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:-

குற்றப் பிரேரணை அரச மைப்புக்கு விரோதமானது.

இது ஓர் அதிசயமான அரசு. ஒரு சந்தர்ப்பத்தில் உயர் நீதிமன்றின் தீர்ப்பு அரசுக்கு நியாயமானது, மறு சந்தர்ப்பத்தில் உயர் நீதிமன் றின் தீர்ப்புப் பிழையானது.

ஜனநாயகத்தையும், நீதி மன்றத்தையும் பாதுகாக்க நாம் வீதியில் இறங்க வேண் டியுள்ளது.

நாட்டில் சர்வாதிகார ஆட்சி உருவாக்கப்பட்டு வருகின்றது.

நீதிமன்றின் உன்னத தன்மையை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண் டும்.

அன்று உயர் நீதிமன்றம் சந்திரிகா அரசுக்கு வழங்கிய உத்தரவு ஏற்றுக்கொள்ளப் பட்டது.

இந்த அரசு தமக்குத் தேவையான வகையில் செயற் பட்டு வருகின்றது. பிரதம நீதியரசர் வீதியில் இறக்கப் பட் டுள்ளார்.-என்றார். (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நிறைவேற்ற வேண்டிய செயல் ஒன்று தாமதமாகலாம். மாற்று உபாயம் பின்பற்றுவதால், ஓரளவு நன்மை கிடைக்கும். சகதொழில், வியாபாரம் சார்ந்த எவருடனும் சச்சரவு கூடாது. பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** தன்னலம் கருதாமல் செயற்படுவீர்கள். நற்குணம் உள்ளவர்களின் நட்பு எளிதாகக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். கூடுதல் அளவில் பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** உயர்வான செயல்களால் சமூகத்தில் புகழ்பெறுவீர்கள். நண்பர், உறவினர் தேவையான உதவியை வழங்குவர். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். அதிக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம்.

**கடகம்:** உங்கள் செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். தன்னைச் சார்ந்தவர்களின் சூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரம் மந்த கதியில் இயங்குகிறநிலை உண்டு. குறைந்த அளவில் பணவரவு இருக்கும். வெளியூர் பயணத் திட்டத்தில் மாற்றம் செய்வீர்கள்.

**சிங்கம்:** உங்களுக்கு இடையூறாக செயல்படுகிற ஒருவரை அடையாளம் காண்பீர்கள். பெருந்தன்மையான அணுகுமுறையால் அவர்கள் மனதில் மாற்றம் உருவாக்குவீர்கள். தொழில், வியாபார நடைமுறை ஓரளவு நன்மை தரும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**கன்னி:** சமூக நடப்பில் புதிய அனுபவம் பெறுவீர்கள். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை அதிகரித்து அதிக பண வரவைத் தரும்.

நாளை

தை -07 ஞாயிற்றுக்கிழமை 20.01.2013
திதி: நவமி மு.இ. 11.51 வரை
நட்சத்திரம்: பரணி பி.இ. 03.37 வரை
சுபநேரம்: 09.35- 11.05 வரை
ராகுகாலம்: 05.05- 06.35 வரை

**துலாம்:** உங்களின் சந்தோஷ நினைவை நண்பரிடம் பகிர்ந்து கொள்வீர்கள். வாழ்வில் வளம் பெற புதிய செயற்திட்டம் உருவாகும். தொழில், வியாபாரத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். இலாப விகிதம் அதிகரிக்கும். பழைய விவகாரம் ஒன்றில் அனுகூலமான தீர்வு கிடைக்கும்.

**விருச்சிகம்:** உங்களின் நல்ல செயலை சிலர் பரிகாசம் செய்து பேசுவர். பொறுமை குணம் பின்பற்றுவதால், சில நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் வாய்ப்புக் கிடைக்கும். முக்கிய தேவைக்கு பணம் கிடைக்கும்.

**தனுசு:** உங்களால் பலன் பெற்ற ஒருவர் உதாசீனமாக நடந்து கொள்வார். அவரிடம் தேவையற்ற விவாதம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேற்றுவது நல்லது. பணவரவு குறைந்த அளவில் கிடைக்கும்.

**மகரம்:** உங்களை மதித்து பேசுபவரிடம், சொந்த விடயங்களை சொல்வீர்கள். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். இஷ்ட தெய்வ அருளால் தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

**கும்பம்:** உருவாகிற அசௌகரியம் ஒன்று அல்லல் தரலாம். சமூக நிகழ்வுகளை அறிவதில் கொண்டிருந்த ஆர்வம் குறையும். தொழில், வியாபார நடைமுறை சீராக கூடுதல் பணிபுரிவீர்கள். பணவரவு சிக்கன முறையில் பயன்படுத்த உதவும்.

**மீனம்:** எவரிடமும் நட்புணர்வுடன் பழகுவீர்கள். உங்களைப் பற்றிய மதிப்பு சமூகத்தில் உயரும். தொழில், வியாபார வளர்ச்சி திட்டமிட்டபடி நிறைவேறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். வீடு, வாகனத்தில் கூடுதல் வசதி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | | 5 | 4 | | |
| | 4 | | 6 | | 7 | 9 | | 1 |
| | 7 | | | | | 8 | | |
| | | | 3 | | | 7 | 6 | |
| | 6 | 9 | 7 | | 4 | 1 | 2 | |
| | 3 | 8 | | | 2 | | | |
| | | 7 | | | | | 4 | |
| 6 | | 2 | 9 | | 8 | | 1 | |
| | | 4 | 5 | | | 2 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 6 | 8 | 9 | 7 | 5 | 1 | 2 |
| 2 | 9 | 8 | 5 | 4 | 1 | 3 | 7 | 6 |
| 1 | 5 | 7 | 3 | 6 | 2 | 8 | 4 | 9 |
| 3 | 6 | 5 | 9 | 1 | 4 | 2 | 8 | 7 |
| 7 | 4 | 1 | 2 | 5 | 8 | 6 | 9 | 3 |
| 9 | 8 | 2 | 7 | 3 | 6 | 1 | 5 | 4 |
| 5 | 7 | 4 | 1 | 2 | 3 | 9 | 6 | 8 |
| 6 | 1 | 3 | 4 | 8 | 9 | 7 | 2 | 5 |
| 8 | 2 | 9 | 6 | 7 | 5 | 4 | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## ஓராண்டு போனதே காணவில்லை எம் அம்மாவை

# அமரர் நடராசா வசந்தா

மண்ணில் 05.06.1949

விண்ணில் 31.01.2012

அணையாத தீபமே
திதி:-அட்டமி

எம்மை வாழ வைத்த எம் அருமை அம்மாவே!
அம்மா நீங்கள் எம்மைப் பாதி வழிதனில்
பரிதவிக்க விட்டு விட்டு எங்கு சென்றீரோ!
உங்கள் உடன்பிறப்புக்களான தம்பி, தங்கையின்
மனதில் மறையாத வடுவாய் உங்கள் பிரிவு
ஓர் ஆண்டல்ல எத்தனை ஆண்டுகளாயினும்
உங்கள் நினைவு மறையாது
கனவின்றி நனவாக மாறாதோ உங்கள் வரவு
வழி மீது விழி வைத்து கண்ணீர் மல்க
காத்து நாமிருக்கிறோம்

பிரிவால் துயருறும்:
உங்கள் குடும்பத்தினர்.

உடுப்பிட்டி வீதி,
தொண்டைமானாறு.

(C/5645) (2.6.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## வழிகாட்டல் கருத்தரங்கு

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் இன்று காலை 9 மணிக்கு வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் விஞ்ஞான மாணி, அத்திவாரக் கற்கை நெறி ஆகிய பாடங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் கலந்து கொள்ளலாம் என பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(3)

## தகவல் தொடர்பாடல் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜன.19

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களில் தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி 16 தொடக்கம் 25 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் அனைத்து விவரங்களுடன் பயில விரும்பும் பயிற்சி நிலையம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரித்த விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்ட முகாமையாளர், நைற்றா, இல.07, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

(3-14)

## முழுநாள் கருத்தரங்கு



தென்மராட்சி, ஜன.19

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ''வறுமையற்றதோர் இலங்கை தேசம்'' என்னும் முழுநாள் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரீன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் திவிநெகும செயற்றிட்டங்கள் தொடர்பான விவரணத் திரைப்படம் காண்பிக்கப்பட்டது. தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், தென்மராட்சி பிரதேச விவசாய போதனாசிரியர் க.சிவபாலன், மாகாண சிறுகைத்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ். சிவகங்காதரன், கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி, சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் கோ.சேதுகாவலர், சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம், யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன், தென்மராட்சி பிரதேச சமுர்த்தி முகாமையாளர் க.விக்னேஸ்வரன் ஆகியோர் தமது துறை தொடர்பான கருத்துரைகளை வழங்கினர்.

திவிநெகும திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 500க்கு மேற்பட்ட பிரதேச மக்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(3-9)




யாழ்ப்பாணம்,ஜன.19

அளவெட்டி தெற்கு புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த உற்சவத்தின் திருநாள் திருப்பலி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகியது.

தினமும் மாலை 5 மணிக்கு திருப்பலிப்பூசைகள் இடம்பெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருப்பலிப்பூசையும், நற்கருணை வழிபாடும் இடம்பெற்று நாளை ஞாயிற்றுக்கிழமை திருநாள் திருப்பலியுடன் உற்சவம் நிறைவடையும்.

(14,36)

* * *

யாழ்.வண்ணை மணிக்கூட்டு வீதி, அரசடி விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து நடைபெறும் திருவிழாக்களில் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பரத் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், எதிர்வரும் 26 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

மாலை 4.45 மணிக்கு மூலஸ்தானப் பூசையும், மாலை 5மணிக்கு ஸ்தம்ப பூசையும், மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் சுவாமி திருவீதியுலாவும் இடம்பெறும்.

* * *

யாழ்ப்பாணம், ஜன.19

காரைநகர் பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் சப்பரத் திருவிழாவும் 26 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(3-13)

* * *

புங்குடுதீவு மேற்கு, இறுப்பிட்டி அரியநாயகன் புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பத்து நாள்கள் இடம்பெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத் தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(3-13)



31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
சுப்பிரமணியம் நவரத்தினம் (சாரதி)

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்புடனே எமை வளர்த்து பார்புகழ வாழவைத்து
இன்பமுடன் நாம் வாழ எம்மைவிட்டுப் பிரிந்தனையோ!
நெஞ்சிருக்கும் வரைக்கும் நாம்மறவோம் உம் நினைவால் வாழ்ந்திருப்போம்.

2012.12.21 ஆம் திகதி காலமான எமது குடும்பத்தலைவனின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த, அஞ்சலிகள், ஆறுதல் தெரிவித்த அன்பு உள்ளங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (20.01.2013) ஞாயிற்றுக்கிழமை பத்தமேனியில் உள்ள இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி
பத்தமேனி, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

(C/5719) (5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு விற்பனைக்கு**

யாழ்.மானிப்பாய் வீதி,ஆனைக்கோட்டையில் சமீபத்தில் கட்டப்பட்ட 4 அறைகள் (Full Tlile) கொண்ட வீடு 2 ¼ பரப்பு காணியுடன் விற்பனைக்கு உண்டு.

(28470)(6.2) தொ.பே:0778591565


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



தோற்றம் 1977.01.20

மறைவு 2012.12.20

## அமரர் இராசலிங்கம் காந்தலிங்கம்

நாள்கள் முப்பத்தொன்று கழிந்தாலும்
ஆண்டவன் பாதம் நீங்கள் சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறிடுமா எம் துயரம்

கடந்த 20.12.2012 வியாழக்கிழமை அன்பு மகனின் மரணச் செய்தி அறிந்து நேரிலும், மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (19.01.2012) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

கலட்டிலேன், கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். தொ.பே.0775296680

- குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 15 ✻ 06 ✻ 1928

மறைவு 19 ✻ 12 ✻ 2012

## திருமதி நாகம்மா சுப்பிரமணியம்

கடந்த 19.12.2012 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (19.01.2013) சனிக்கிழமை மு.ப.11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல. 127/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (28465)(5-6-7) குடும்பத்தினர்.

## 100க்கு 102 புள்ளி அதிர்ச்சியில் டில்லி பல்கலை மாணவர்

டில்லி, ஜன.19

டில்லி பல்கலைக் கழகத்தில் நடந்த தேர்வொன்றில் மாணவர்களுக்கு 100க்கு 102 புள்ளிகளை சில ஆசிரியர்கள் வழங்கியுள்ளனர்.

இதனால் மாணவர்கள் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர்.

ஏற்கனவே வட மாநிலங்களில் குளிர் வாட்டி எடுக்கும் இந்த நிலையில் இதுபோன்ற சம்பவம் நடந்தமை மாணவர்களை மேலும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. பெரும்பாலான மாணவர்களின் புள்ளிகள் அதிகபட்ச புள்ளிக்கும் அதிகமாக உள்ளது.

இதனை அவதானித்த மாணவர்கள், பல்கலைக்கழக நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளனர். ஆனால் அவர்கள் இதனை ஒரு பொருட்டாகவே கருதவில்லையாம்.

பல்கலைக்கழக துணைவேந்தரும் இது குறித்து பதிலளிக்க மறுத்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது. (3)

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.19

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலையத்தினரும் இணைந்து நடத்தும் தைப்பொங்கல் விழா இன்று காலை 9 மணிக்கு கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மாணிக்கராஜசர்மா அனந்தலட்சுமி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில் நந்தனன் கலந்து கொள்வார். (ம-14)


உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111



DATA ACQUISITION DESIGN

COMPLETE SOLUTION FOR INDUSTRIAL AUTOMATION

யாழ். துரையப்பா மைதானத்தில் நடைபெறும்

**யாழ் வர்த்தக கண்காட்சியில்**

உள்ள எமது B2 இலக்க கூடத்திற்கு வருகை தந்து, இயந்திரமயமாக்கலின் நவீன வரமுறைகள் மற்றும் கைத்தொழில் முயற்சிகளை பார்வையிடுங்கள்.

**DATA ACQUISITION DESIGN (PVT) LTD**

14, Ebenezer Place, Dehiwala

Tel: 011 2734744 Fax: 011 2734743

Email : dataad@sltnet.lk Web-www.dataad.co.uk


USAID FROM THE AMERICAN PEOPLE

SRI LANKA BIZ+ VEGA Volunteers for Economic Growth Alliance

## யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை நிகழ்வில் இலவச வியாபாரத் திட்டமிடல் பயிற்சி

உங்கள் திட்டத்திற்கான வியாபாரத்திட்டத்தினை தயாரிப்பதற்கான செய்முறைப் பயிற்சியை பெற்றுக்கொள்வதற்கு இது ஒரு தனித்துவமான வாய்ப்பு. உங்களுக்கான சந்தையை ஆராய்ச்சி செய்வது மற்றும் சந்தைப்படுத்தும் திட்டத்தினைத் தயாரிப்பது எப்படி என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள்.

இந்த வியாபாரத்திட்டப் பயிற்சியானது. வியாபாரத்திற்கான உச்சப்பயன்பாட்டை வழங்கும் பயிற்சிக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச நிறுவனத்தினரால் (International Institute for Training Development utilizing the Business Edge™) வழங்கப்படவுள்ளது. வியாபாரத் திட்டப் பயிற்சியின் கூறுகள் மற்றும் பயிற்சி முறைகள், முகாமையாளர்கள் மற்றும் முயற்சியாளர்களுக்கான சர்வதேச அங்கீகாரம் பெற்ற பயிற்சிகளின் ஒரு பகுதியாகும்.

**இடம் :-** கேட்போர் கூடம், பொது நூலகம், யாழ்ப்பாணம்

**காலம்:- நான்கு தடவைகள் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், ஒரு நிகழ்வுக்கு 25 பேர் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.**

- சனிக்கிழமை, 19 ஜனவரி, 10:00-12:00 மு.ப மற்றும் 15:00-17:00 பி.ப
- ஞாயிற்றுக்கிழமை, 20 ஜனவரி, 10:00-12:00 மு.ப மற்றும் 15:00-17:00 பி.ப

பதிவு நிபந்தனைகள்: மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்

**தொலைபேசி :- 024 222 6715, 0777 444355, 0777 444378**

**மின்னஞ்சல்:-**

elango.mariathasan@idd.landolakes.com,
k.gangatharan@idd.landolakes.com

இந்த வாய்ப்புக்கு நிதிவழங்குபவர்கள் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தின் (USAID) VEGA/BIZ+ திட்டமாகும். அமெரிக்க மக்களின் தாராளமான ஆதரவுடன் VEGA/BIZ+, பொருளாதார வளர்ச்சி மற்றும் விருத்திசெய்யப்பட்ட வாழ்வாதார வாய்ப்புகளை இலங்கையில் உருவாக்க சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களில் முதலீடுசெய்கிறது.


SICHER® GERMANY ஜெனரேட்டர்கள் 20% வரை விலை கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

JITF 2013

2013 யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சிக்கு வருகை தந்து இக்கழிவினை பெற்றுக்கொள்ளலாம்

கடை எண் 5-6-7 | இடம் துரையப்பா விளையாட்டு அரங்கில் | திகதி ஜனவரி 18 | 19 | 20 | 3 தினங்களுக்கு மட்டும்







SICHER GERMANY INDUSTRIAL GENERATOR | SERIES



10Kw to 1000Kw

மேலதிக விபரங்களுக்கு : 077-385 67 67 / 0777 783 089

Reliable Equipment (Pvt) Ltd.
இல.408, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
Tel : 0117 444 408 Fax : 0112 389 265 Web : www.reliablesl.com

MALABAR
இல.81, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021-222 2043, 021-492 3609


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 லட்சம் செலுத்தினால் மட்டுமே காதலியை கரம் பிடிக்க முடியும்

## இந்திய இராணுவ மேஜருக்கு நீதிமன்று உத்தரவு

இலங்கைக் காதலியை திருமணம் செய்வதற்கு விரும்பிய இந்திய இராணுவ மேஜருக்கு 16 லட்சம் ரூபாவைச் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த கட்டணம் மீளப் பெறப்பட்டதன் பின்னரே அவருக்கான திருமணச் சான்றிதழ் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பெண்ணொருவரை திருமணச் செய்வதற்காக தனது இராணுவ பதவியை ராஜினாமாச் செய்தார் இந்திய இராணுவத்தின் மேஜர் பதவிநிலை வகிக்கும் அதிகாரி. அவரின் ராஜினாமாக் கடிதத்தை இராணுவம் ஏற்கமறுத்தது .இதனால் அவர் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்திய இராணுவத்தின் சமிக்ஞைப் படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் விகாஸ்குமார் என்பவரே இந்த வழக்கைத் தாக்கல் செய்தவராவார்.

இருப்பினும் விகாஸ் குமாரின் ராஜினாமாவை இராணுவம் மறுக்க முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த நிலையில், அந்தத் தீர்ப்பை எதிர்த்து இந்திய இராணுவம் மேன்முறையீடு செய்திருந்தது.

நீதிமன்றம் இவ்வாறானதொரு உத்தரவைப் பிறப்பித்ததையடுத்து விகாஸ் குமாரை இராணுவத்திலிருந்து விடுவிக்க இராணுவம் தீர்மானித்தது. அவருக்கு இந்திய இராணுவக் கல்லூரியில் பயிற்சி வழங்குவதற்காக இராணுவம் செலவிட்ட 16 லட்சம் ரூபாவினையும் செலுத்தி விட்டே சேவையிலிருந்து விடுதலை பெறுமாறு அறிவித்துள்ளது. (3)

# கடல்சார் பயிற்சிநெறிகள்

தேசிய கடற்றொழில் மற்றும் கடல்சார் இயந்திரவியல் பயிற்சி நிறுவகம் 2013 ஆம் ஆண்டுக்கான புது மாணவர்களை சேர்த்துக் கொள்ளவுள்ளது.

கடல் இயந்திரவியல் விஞ்ஞானமாணி, கப்பல் கட்டுமானகல நிர்மாணத் துறையில் விஞ்ஞானமாணி, (பொது), கடற்றொழில் மற்றும் கடலக விஞ்ஞானி (விசேட) டிப்ளோமா பயிற்சி நெறிகளான டெக் அலுவலர் டிப்ளோமா, உயர் சான்றிதழ் வைபர் கிளாஸ் தொழில்நுட்பம், உயர் சான்றிதழ் - நீர்வாழ் உயிரினச் செய்கை மற்றும் முகாமைத் துவம், கடலக என்ஜின் பற்றிய டிப்ளோமாவும், சான்றிதழ் பாடநெறிகளான வளியினை இயந்திரம் பழுது பார்த்தலும் பராமரிப்பு பாடநெறி, கடலக இயந்திரவியல் தொழில்நுட்பம், கடற்றொழில் தொழில்நுட்பம், கடலக வெல்டிங் தொழில் நுட்பம், ஸ்குவா சுழியோடல் தொழில் நுட்பம், கடலக வரைவு வாசித்தல் தொலைத் தொடர்பு செயற்கை கோள் செயற்பாடு தொழில்நுட்பம், நீச்சல் (தொழில்) நீச்சல் (பாடசாலை சிறுவர்களுக்கு) பாடநெறிகளும் நடமாடும் பயிற்சி நெறிகளான வெளியிணை இயந்திரம் பழுது பார்த்தல், வலை பின்னுதலும் திருத்தலும், உணவு பதனிடலும் அறுவடைக்கும் பிந்திய முகாமையும், வைபர் படகு திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகளே நடைபெறவுள்ளது.

**தமது விண்ணப் பங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்குமுன் அனுப்பி வைக்கவும்.**

பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கீழ் காணப்படும் தேசிய கடற்றொழில் மற்றும் கடல்சார் இயந்திரவியல் பயிற்சி நிறுவகத்தின் மட்டக்குழி, தங்காலை, நீர்கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், காலி, களுத்துறை ஆகிய கிளைகளுக்கு உதவிப்பணிப்பாளர், தேசிய கடற்றொழில் மற்றும் கடல்சார் இயந்திரவியல் பயிற்சி நிறுவனம் எனும் முகவரிக்கு தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்குமுன் அனுப்பி வைக்கவும். (3)



குடாநாட்டுப் பாடசாலைகளில் முதலாம் தர மாணவர்களுக்கான கால்கோள் விழா நேற்று இடம்பெற்றன. புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலயத்தில் அதிபர் அருட்சகோதரி ஜீவந்தி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாணக் கல்வித் திணைக்கள திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.பிறெட்றிக், புனித மாட்டீன் குருமட அதிபர் வணபிதா சாள்ஸ் கொலின் ஆகியோர் கலந்து கொண்டனர். அவர்கள் மேடையில் உள்ளனர். சிறார்களில் ஒரு பகுதியினரும் காணப்படுகின்றனர். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் பாடசாலை அதிபர் திருமதி கௌரி சேதுராஜா தலைமையில் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம், அருட்தந்தை என்.ரி.ஜெபநேசன் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர். கம்பர் மலை இ.த.க.பாடசாலையில் சிறார்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர்.

கரவெட்டி திரு இருதயக் கல்லூரி சிறார்கள் பாடசாலை அதிபர் மற்றும் விருந்தினர்களுடன் அமர்ந்துள்ளனர். பளை டிறிபேக் கல்லூரி மாணவர்கள் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் அமர்ந்துள்ளனர். (ம-8-9-17-253)

# 30 பவுண் நகை திருட்டு; ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.19

சமையலறைப் புகைக் கூண்டின் கூரையைப் பிரித்து வீட்டுக்குள் இறங்கிய திருடர்கள் சுமார் 30 பவுண் நிறையுடைய நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். இந்தத் திருட்டுத் தொடர் பாக சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தெல்லிப்பளை, ஆனைக்குட்டி மதவடி ஒழுங்கையில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:

சம்பவ தினத்தன்று வீட்டிலிருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். இந்த வேளையில் சமையலறை புகைக்கூண்டின் கூரையைப் பிரித்து திருடர்கள் வீட்டின் உள்ளே இறங்கியுள்ளனர்.

வீட்டிலிருந்தவர்கள் காலையில் எழுந்து தமது வேலையில் ஈடுபட்டனர். குறித்த ஆசிரியை பாடசாலை செல்வதற்காக தனது நகை களை எடுக்கச் சென்றபோது நகைகள் வைக்கப்பட்டிருந்த பெட்டி வெளியே வீசப்பட்டுக் கிடந்தது. நகைகள் வைத்த இடத்திபார்த்தபோது நகைகள் எதனையும் காணவில்லை. சுமார் 30 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று அவர் தெல்லிப்பளைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளனர் என்று தெரிவித்தனர். எனினும் நகைகள் எவையும் மீட்கப்படவில்லை. (த-4)

## நூலக விஞ்ஞான மாணவர்களுக்கு மீட்டல் வகுப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தில் நூலக தகவல்விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியை பயிலும் மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புகள் எதிர்வரும் 26 ,27 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக இலங்கை நூலக சங்க யாழ் நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி எஸ்.கல்பனா அறிவித்துள்ளார். (16)

சட்ட விரோத மின் பாவனை இணைப்பு

# மின்சார சபைக்கு 212 மில்லியன் இலாபம்

கடந்த வருடம் இலங்கை மின்சார சபைக்கு 212 மில்லியனுக்கும் அதிகமான அபராத பணம் லாபமாகப் பெறப்பட்டுள்ளது. மின்சாரசபை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையாலேயே இந்த இலாபம் பெறப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 3569 பேர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

**2012ஆம் ஆண்டு சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 3569 பேர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.**

2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 2012 இல் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்களின் தொகை 50 சதவீதத்தால் குறைந்துள்ளதென அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

சட்டவிரோதமான முறையில் மின் இணைப்பு பெறும் நபர்களைத் தேடி தொடர்ந்தும் சோதனை நடத்தப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது. (3)

# பதிவுகள் மேற்கொள்ளாத கைபேசிகளது பாவனையை நீக்கச் செயற்றிட்டம்

கொழும்பு,ஜன.19

பதிவுகள் மேற்கொள்ளப்படாது இலங்கைக்கு எடுத்துவரப்படும் செல்லிடத் தொலைபேசிகளை இனங்காணல் மற்றும் அவற்றைப் பாவனையில் இருந்து நீக்கும் செயற்றிட்டம் ஒன்றை விரைவில் அறிமுகப்படுத்துவதற்கு மின் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது தரத்தில் குறைந்த மற்றும் முறைப்படியாகப் பதிவு செய்யப்படாத செல்லிடத் தொலைபேசிகள் பெரும் தொகைகளாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன என்று தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனால் இந்தச் செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது என்று ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிற்ற தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவசியப்படும் நவீன தொழில் நுட்பச் சாதனங்களை இதுவரை காலத்துக்குள் இலங்கைக்கு தருவிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய செயற்றிட்டத்தின் கீழ் பதிவுகள் இன்றி இலங்கைக்குள் எடுத்துவரப்படும் செல்லிடத் தொலைபேசிகளின் இலக்கங்கள் கண்டறியப்பட்டு நுண் தொழில்நுட்ப சாதனங்கள் மூலமாக குறித்த தொலைபேசிகளின் சமிக்ஞை செயற்பாடுகள் செயலிழக்கச் செய்யப்படும் எனவும் அதன் மூலம் அந்த தொலைபேசிகளை இலங்கையில் பயன்படுத்த முடியாது செய்யலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய நுகர்வோருக்கு சுகாதார ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும் தொலைபேசி வகைகளை நீக்கிவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலச் செயற்றிட்டம் ஒன்றாக பதிவு செய்யாத மற்றும் தரத்தில் குறைந்த தொலைபேசிகளைக் கண்டறியும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் மின் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மேலும் தெரிவிக்கிறது. (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை கிரிக்கெட் சங்கத்தால் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பிரிவு III இற்கான ஆட்டம் ஒன்று, யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. இரு நாள்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரியும், யாழ். இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்ட போது....(ங)

# தைப்பொங்கல் கரப்பந்தாட்டம் மானிப்பாய் சென்.ஆன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜன.19

தைப்பொங்கலை முன்னிட்டு அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மானிப்பாய் சென்.ஆன்ஸ் அணி சம்பியனானது.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. விலகல் முறையில் நடைபெற்ற இந்தச் சுற்றுப் போட்டியில் 17 அணிகள் பங்கு பற்றியிருந்தன. ஆரம்பச் சுற்றுக்களில் அபார ஆட்டங்களை வெளிப்படுத்திய மானிப்பாய் சென். ஆன்ஸ் அணியும், ரெயின்போ அணியும் இறுதிப் போட்டியில் மோதிக் கொண்டன.

**இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைக் குவித்ததால் எந்த அணி முதல் சுற்றைக் கைப்பற்றும் என்பதை கணிக்கமுடியாதிருந்தது.**

இந்த இறுதிப் போட்டியில் முதல் சுற்றில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காது சமராடின. இரு அணிகளும் மாறிமாறி புள்ளிகளைக் குவித்ததால் எந்த அணி முதல் சுற்றைக் கைப்பற்றும் என்பதை கணிக்க முடியாதிருந்தது. ஆயினும் முதற் சுற்றின் ஆரம்பத்தில் காட்டிய வேகத்தை ரெயின்போ அணி மெல்ல மெல்ல கைவிட்டது. இதனை நன்கு பயன்படுத்திக் கொண்ட சென். ஆன்ஸ் அணி கடைசி நேரத்தில் மளமளவென்று புள்ளிகளைக் குவித்து முன்னிலை பெற்றது. இதனால் அந்த அணி முதற் சுற்றை 15:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் தனதாக்கிக் கொண்டது.

இரண்டாம் சுற்றிலும் அதே வேகத்தோடு தமது திறமையை வெளிப்படுத்தினர் மானிப்பாய் சென். ஆன்ஸ் அணி வீரர்கள் . எனினும் முதல் சுற்றை இழந்ததால் மனோரீதியாக சோர்ந்து போன ரெயின்போ அணியினர் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தத் தவறினர். இதனால் இரண்டாவது சுற்றையும் 15:9 என்ற கணக்கிலும் இலகுவாக கைப்பற்றிய மானிப்பாய் சென். ஆன்ஸ் அணி 2:0 என்ற செற் கணக்கில் போட்டியில் வென்று சம்பியனானது.

போட்டியின் நிறைவில் சிறந்த வீரர்களுக்கான பரிசில்களை மன்றத் தலைவர் ரஜீவ் வழங்கினார். மானிப்பாய் சென்.ஆன்ஸ் அணியின் ரஜனி, ரெஜின்போ அணியின் நிஜன், நண்பர்கள் கழகத்தின் தாஸ் ஆகியோர் தொடரின் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். (ங)

# செந்தணல் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஜன.19

தைப்பொங்கலை முன்னிட்டு ஜெயந்திநகர் விளையாட்டுக்கழகம்நடத்திய 11 பேர் பங்குபற்றும் மென்பந்துச் சுற்றுப்போட்டியில் செல்வா நகர் செந்தணல் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்று சம்பியனானது.

ஜெயந்திநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமைஇடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில் செல்வாநகர் செந்தணல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புதுமுறிப்பு உதய சூரியன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய செல்வாநகர் செந்தணல் விளையாட்டுக்கழக அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களை பெற்றது.

இதில் பிரதீபன், பிரசாந் ஆகியோர் தலா 12 ஓட்டங்களைத் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் புதுமுறிப்பு உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி சார்பில் ரமேஸ் 12 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை வீழ்த்தினார்.

57 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குப் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியினர் 9 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 35 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.இதனால் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று சம்பியனானது செந்தணல் அணி.

இதில் சதீஸ் 10 ஓட்டங்களை தமது அணிசார்பாகப் பெற்றார். பந்து வீச்சில் செல்வாநகர் செந்தணல் விளையாட்டுக்கழக அணி சார்பில் சதீஸ், பார்த்தீபன் ஆகியோர் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர். (ங-23)

# கரப்பந்தில் நகுலேஸ்வரம் வாகை சூடியது

யாழ்ப்பாணம்,ஜன.19

தைப்பொங்கலை முன்னிட்டு தெல்லிப்பழை வித்தகபுரம் கண்ணகி விளையாட்டுக்கழகம் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்திய ஆண்,பெண் இரு பாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் பெண்கள் பிரிவில் நகுலேஸ்வரம் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் நகுலேஸ்வரம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளம்சுடர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் நகுலேஸ்வரம் விளையாட்டுக்கழக அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது. பதிலுக்கு இளம் சுடர் அணியும் உக்கிரமாக விளையாடியது. ஆயினும் இறுதியில் நகுலேஸ்வரம் அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ங-23)

# உதைபந்தில் வென்றது ஈகிள் அணி



யாழ்ப்பாணம்,ஜன.19

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டி முன்னாள் வீரர்களான சாந்தன்,யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் ஈகிள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அம்மன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஈகிள் விளையாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக்கழகங்களுக்கு இடையே ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடல்களில் நடத்தி வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில்இடம்பெறும் இறுதியாட்டங்கள் மற்றும் மூன்றாமிடத்துக்கான ஆட்டங்கள் என்பவற்றில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**மாலை 2.30 மணி (பெண்கள் பிரிவு- மூன்றாமிடத்துக்கான ஆட்டம் )**

★பட்டர்பிளை விளையாட்டுக்கழகம் எதிர் உடுவில் மகளிர் விளையாட்டுக்கழகம்

**மாலை 3.30 மணி (ஆண்கள் பிரிவு- மூன்றாமிடத்துக்கான ஆட்டம் )**

★கே.ஸி.ஸி.விளையாட்டுக் கழக'ஏ' அணி எதிர் பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி.

**பி.ப. 5 மணி (பெண்கள் பிரிவு -இறுதியாட்டம்)**

★கே.கே.எஸ்.விளையாட்டுக்கழகம் எதிர் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழகம்.

**பி.ப. 5 மணி (ஆண்கள் பிரிவு- இறுதியாட்டம் )**

★சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக'சொக்ஸ்' அணி எதிர் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழக'ஏ' அணி.

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**பிற்பகல் 3.30 மணி**

★ நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் பொலிகைபாரதி விளையாட்டுக் கழகம்.

**மாலை 4.30 மணி**

★ சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் எதிர் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக 'பி'அணி.

★ ★ ★

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**மாலை 6 மணி**

★ யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக'ஏ' அணி எதிர் ஈஸ்வரன் விளையாட்டுக்கழகம். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புயலாகினர்
## குலசேகர, மலிங்க

இலங்கை அணியின் குலசேகர, மலிங்க இருவரினதும் வேகப் புயலில் சொந்த மண்ணிலேயே பரிதாப தோல்வியைத் தழுவியது ஆஸ்திரேலியா.

இலங்கை அணிக்கு ஆஸ்திரேலியா அணிக்கும் இடையிலான மூன்றாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேர்ண் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இந்தத் தொடரில்இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்று சமநிலையில் இருந்தன. தொடரை வெல்லுவதற்காக ஆஸ்திரேலியா அணியின் நிரந்தரத் தலைவர் மைக்கல் கிளார்க், வோர்ணர், மத்தியூ வேட் ஆகியோர் இணைக்கப்பட்ட பலமான ஆஸ்திரேலியா அணி நேற்றைய போட்டியில் களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி. அணித் தலைவர் கிளார்க் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.




பழக்கப்பட்ட மைதானம். பலமான அணி. எனவே கடந்த போட்டியில் பெற்ற தோல்விக்கு ஆஸி. அணி இந்த முறை பழிவாங்கும் என்றே பலரும் கருதினர். ஆனால் அந்நினைப்பை இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர்கள் தவிடுபொடியாக்கினர். ஆட்டத்தின் மூன்றாவது பந்துப் பரிமாற்றத்தின் இலங்கை அணியின் உப தலைவர் மத்தியூஸின் பந்தில் 4 ஓட்டங்களோடு ஆஸி. அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் வோர்ணர் வெளியேற அந்த அணியின் சரிவு ஆரம்பமானது.

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகர நேற்றைய போட்டியில் ஆக்ரோஷ அவதாரம் எடுத்தார். அவரது பந்து வீச்சில் அனல் பறந்தது. குலசேகரவின் வேகத்தில் கியூஸ்(3), கிளார்க்(9), டேவிட் ஹசி(4), பெய்லி(0), ஹென்றிக்கியூஸ்(2) ஆகியோர் சொற்ப ஓட்டங்களோடு வெளியேற ஆஸி அணி தடுமாறத் தொடங்கியது. குலசேகரவின் புயல் ஓய, மலிங்க புயல் மையம் கொண்டது. மலிங்கவின் துல்லியமான பந்தில் மத்தியூ வேட்(8), ஜோன்ஸன்(2), மக்கே(0) வெளியேறினர். ஆஸி. அணி 40 ஓட்டங்களைப் பெறுவதற்குள் 9 இலக்குகளை இழந்து இருந்தது. இதனால் அந்த அணி 50 ஓட்டங்களை கடக்குமா என்பதே சந்தேகமானதாக மாறியது. ஆயினும் இறுதி இலக்குக்காக இணைந்து கொண்ட ஸ்ராக்கும், டோஹார்ட்டியும் ஓரளவுக்கு நிலைத்து நின்று ஆடியதால் 73 ஓட்டங்களை ஆஸ்திரேலியா பெற்றது. ஸ்ராக் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும், டோஹார்ட்டி 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நுவான் குலசேகர 5 இலக்குகளையும், லசித் மலிங்க 3 இலக்குகளையும், மத்தியூஸ், எரங்க ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் வீழ்த்தினர்.

74 என்ற இலகுவான இலக்கை துரத்தத் தொடங்கிய இலங்கை அணியின் தலைவர் ஓர் ஓட்டத்தோடு வெளியேற இலங்கை அணி அதிர்ச்சியில் உறைந்தது. அந்த அதிர்ச்சியில் இருந்து மீள முடியாமல் இலங்கை அணியும் தடுமாற்றமான ஆட்டத்தை வெளிப்படுத்தி இலக்குகளை இழக்கத் தொடங்கியது. டில்ஷான் (22), திரிமன்னே(7), மத்தியூஸ்(0) ஆகியோர் அடுத்தடுத்து வெளியேற இலங்கை அணியால் வெற்றி இலக்கை நோக்கி நகர்வது கடினமானதாக இருந்தது. ஆயினும் உபுல் தரங்கவும், கௌசல்ய பெரேராவும் நம்பிக்கையூட்டினர். இறுதியில் இலங்கை அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 4 இலக்குகள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை பணிய வைத்தது. உபுல் தரங்க 12 ஓட்டங்களையும், ஜீவன்மெண்டிஸ்2ஓட்டங்களையும் பெற்றனர். இறுதி வரை ஆட்டமிழக்காதிருந்த கௌசல்ய பெரேராவும் (22), திஸர பெரேராவும்(4) அணியின் வெற்றியை உறுதி செய்தனர். ஆஸ்திரேலிய அணி சார்பில்ஜோன்சன் 3 இலக்குகளையும், ஸ்ராக் 2இலக்குகளையும், மக்கே ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக 5 இலக்குகளைச் சரித்த இலங்கை அணியின் நுவான் குலசேகர தெரிவானார். தற்போது 2:1 என்ற ரீதியில் இந்தத் தொடரில் இலங்கை அணி முன்னிலை பெற்றுள்ளது. (ந)




# வோர்னுக்கு தடை?

கடந்த வருடம் இலங்கையில் இடம்பெற்ற உலகக்கிண்ண 20/20 தொடரின் அரையிறுதிப் போட்டியில் தந்திரோபாயமாக மஹேல ஜெயவர்த்தன அணித்தலைவராக செயற்படாததைப் போன்று, ஆஸியில் நடைபெறும் பிக்பாஷ் தொடரின் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ், மெல்பேர்ண் ஸ்டார்ஸ் அணிகளுக்கிடையிலான அரையிறுதிப்போட்டியில் ஷேன் வோண் அணித்தலைவராக செயற்படவில்லை. இது பலத்த சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயம் காரணமாக அவருக்கு தடை விதிக்கப்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது

ஆட்டத்தில் குறித்த நேரத்திற்குள் பந்துப்பரிமாற்றங்களை வீசி முடிக்காத குற்றச்சாட்டுக்கு ஏற்கனவே இலக்காகியிருந்த ஷேன் வோண், அரையிறுதிப் போட்டியிலும் அதே குற்றச்சாட்டை எதிர்கொண்டால் இறுதிப்போட்டியில் பங்குபெற முடியாது போகலாம்.இதற்காக அவர் அணித்தலைவர் பதவியில் உத்தியோகபூர்வமாகச் செயற்படாது. இளம் வீரரான ஜேம்ஸ் ஃபோள்க்னரை அணித்தலைவராக செயற்படுமாறு பணித்திருந்தார்.

ஏற்கனவே மஹேல ஜெயவர்த்தன இதேபோன்று செயற்பட்டிருந்த போதிலும், பிக்பாஷ் லீக் தொடர் விதிகளின்படி ஓர் அணித்தலைவர் போட்டித்தடையை தவிர்ப்பதற்காக போட்டியொன்றில் தான் விளையாடிக் கொண்டு, வேறொருவரை உத்தியோகபூர்வ அணித்தலைவராக நியமித்தால் அது விதிகளுக்குப் முரணானதாகக் கருதப்படும்.இதனால் அவருக்கு போட்டித்தடை விதிக்கப்படக் கூடுமென நம்பப்படுகிறது.(ந)



# முன்னேற்றம்

ஆஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்றில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ஸ்பெயின் வீராங்கனை கார்பின் முகுருஜாவை சந்தித்தார்.

இதில் செரினா 6-2, 6-0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் பெலாரசின் விக்டோரியா அஸரன்கா, கிரீசின் எலினி டேனிலிடோயுவை சந்தித்தார்.

இதில் அஸரன்கா 6-1, 6-0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்றில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே, போர்ச்சுகலின் ஜோயோ சவ்சாவை சந்தித்தார்.

இதில் முர்ரே 6-2, 6-2, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார். (ந)

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடித் தொடக்க வீரரான ஷேவாக் மோசமான ஆட்டத்திறன் தவிர்த்து வருகிறார்.

இதனால் அவர் இங்கிலாந்துக்கெதிரான தொடரில் இந்திய அணியில் சேர்க்கப்படவில்லை. இந்நிலையில் முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி, ஷேவாக்குக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

ஒரு தொடரில் இருந்து நீக்கப்பட்டதால் ஷேவாக்கின் கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டதாக சொல்ல முடியாது. அவரிடம் இன்னும் திறமை உள்ளது.இந்திய அணிக்காக அவர் அதிரடியாக ஓட்டங்கள் குவித்ததை நாம் மறந்து விட்டோம்.இப்போதைய நிலை அவருக்கு முற்றுப்புள்ளியாக அமைந்துவிடாது. டெஸ்ட் அணிக்கு டோனி அணித்தலைவராக தொடர்வது தெரிவுக்குழுவினர் கையில்தான் உள்ளது.

தற்போது அணியில் இளம் வீரர்கள் பலர் உள்ளனர். அடுத்த உலகக் கிண்ணத்துக்குள் அவர்கள் தங்களை சிறப்பாக தயார் செய்து கொள்ள வேண்டும் -என்றார். (ந)



# முற்றுப்புள்ளியில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். ஏலம் அடுத்த மாதம்

ஐ.பி.எல். தொடரின் 6ஆவது பருவப் போட்டிகள் இந்த வருடம் ஏப்ரல் 3ஆம் திகதி தொடங்குகின்றன. இந்தப் போட்டியில் 9 அணிகள் பங்கேற்கின்றன.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் டெல்லி டேர்டெவில்ஸ்- கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதவுள்ளன.

6ஆவது ஐ.பி.எல். போட்டிக்கான வீரர்கள் ஏலம் அடுத்த மாதம் பெப்ரவரி 3ஆம் திகதி சென்னையில் நடைபெற உள்ளது.

இந்தத் தகவலை ஐ.பி.எல். தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர்ராமன் தெரிவித்துள்ளார்.

மொத்தம் 37 வீரர்கள் ஏலப்பட்டியலில் இடம் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாகிஸ்தான் வீரர்களை மீண்டும் சேர்ப்பது என்று ஐ.பி.எல். ஆட்சிக்குழுவில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.ஆயினும் தற்போது எல்லையில் நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக பாகிஸ்தான் வீரர்கள் இந்த ஏலத்தில் இடம் பெறாட்டார்கள் என்று அறியவருகிறது.

2008 ஆம் ஆண்டு நடந்த முதலாவது ஐ.பி.எல். போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்கள் விளையாடினார்கள். மும்பையில் நடந்த தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து பாகிஸ்தான் வீரர்கள் ஐ.பி.எல்.லில் விளையாட அனுமதிக்கப்படவில்லை.

சமீபத்தில் பாகிஸ்தான் அணி இந்தியா சென்று விளையாடினாலும் தற்போதுள்ள சூழ்நிலை காரணமாக அந்த அணி வீரர்கள் ஐ.பி.எல்.லில் மீண்டும் விளையாட வாய்ப்பு கிடைக்காது என்றே கூறப்படுகின்றது.

(ந)


## German Swiss மொழிகள்

Goethe institute exam இற்கு ஏற்றவாறு Germany இல் இருந்து வந்த ஆசிரியரால் தமிழ் மொழி பெயர்ப்புடன் பயிற்சிகள் நடைபெறுகின்றன.
10, Palaly Road Jaffna
T.P: 077 1604823 Miss .Kajanthini
(28434)(6.7.4)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS

O/L பரீட்சை எழுதிய மாணவர்களினது நன்மை கருதியும்,
வருகின்ற புத்தாண்டு 2013 ற்காகவும்
விசேட கட்டணக் கழிவில் சர்வதேச தரம் கொண்ட கற்கைநெறிகள்

இன்னும் சில மாதங்களில் நீங்கள் உயர்தரத்திற்குச் செல்லலாம், படித்துப் பட்டதாரி ஆகலாம், வேறு சிலர் தொழிற்சந்தையிலே நல்ல வேலைவாய்ப்பைத் தேடலாம் அல்லது வேறு உயர் கற்கைநெறிகளைக்கற்று நீங்கள் வாழ்க்கையை முன்னேற்ற விரும்பலாம். ஆனால் இக் கனவையெல்லாம் நீங்கள் நனவாக்க வேண்டுமானால் தற்போதைய காலகட்டத்திலே ஆங்கில அறிவு மிக மிக அவசியமானது.

### Spoken English With Grammar - Quick Learning Course

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம். Duration: (1 1/2 Months)
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.

### Diploma In English
Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

### B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

### IELTS Acadamic/General
Duration: (2 Months)

(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

We gurantee success rate 6.5 band and above

### A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

- UK அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்ற முடியும்.
- சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை.
- ஏனைய பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானது.
- 2013 July இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்குமுன் உங்களைப் பதிவு செய்யுங்கள்.

Duration: (2 Months)

Batches Starting on
24-01-2013 @ 9.00 am | 27-01-2013 @ 8.00 am | 15-01-2013 @ 3.30pm | 19-01-2013 @ 4.00pm | 28-01-2013 @ 4.00pm

Head Office: No. 30, 1/5, W.A. De Silva awatha, Colombo - 06. Tel: 011 250 0207
No. 15, 2/1, Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna. Tel: 021 222 4550
Wesley High School Road (Opposite Methodist Church), Kalmunai. Tel: 067 222 6000
No. 3, 6th Lane, Vairavarkovil Road, Vairavapuliyankulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777585913, 0777222422 , 0714299935, 0777730074

## கிளி/ எடிசன் கல்லூரி
வலயக் கல்வி
முன்பாக
கிளிநொச்சி
பட்டப்படிப்புக்கள்
பிரிவு
G.A.Q, B.A புதிய
பிரிவுகள் ஆரம்பம்.
20.01.2013
ஞாயிறு 12.30 p.m
தொடர்பு:
0775483470
(28143)(6.7.4)

## bcs The Chartered Institute for IT
## கலந்துரையாடல்

பிரித்தானிய தகவல் தொழில்நுட்ப பட்டய நிறுவனமான BCS (THE CHARTERED INSTITUTE FOR IT) நிறுவனத்தின் கற்கை நெறிகளை யாழ்நகரில் மேற்கொள்ளும்,மேற்கொள்ள இருக்கும் மாணவர்களுக்கான விஷேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் BCS நிறுவனத்தின் இலங்கைக்கான பிராந்திய உயர் அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

காலம் : 19.01.2013 மாலை 3.30 மணி

இடம் : IIS City Campus
200, சிவன்பண்ணை வீதி.[வைத்தீஸ்வராச் சந்தி]. யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு :- 021 4900900

## மலேசியா நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு
கார் தயாரிக்கும் நிறுவனத்தில் அதிஉயர் சம்பளத்துடன் வேலை வாய்ப்புThree Years Work Permit (இரண்டே வாரத்தில் பயணம்) தங்குமிடம், மருத்துவம் இலவசம்
சம்பளம் 55000/=
மேலதிக விபரம் அறிய Lanka Voice
077 5250224 (27620)(6.7.4)

## Sky Computers (Pvt) Ltd
கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
(பிரத்தியேகமாக/ குழுக்களாக விரும்பிய நேரத்தில் கற்கும் வசதி
Ms Office, DTP, Hardware ,Graphic Designing, Web Designing, Internet & E-mail, Computer Type Setting, Kids Program.
Spoken English With Grammar, சிங்கள வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
162, Main Street, Jaffna.
TP:-021 222 1417

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## வெற்றித்தேர்வு பரீட்சைகள் ஆரம்பமாகின்றன
### வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப் பிரிவு
2013ஆம் ஆண்டிற்கான வெற்றித்தேர்வு
தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.
முதலாவது பரீட்சை 20.01.2013 ஞாயிறு
தரம் 5 விசேட வினாப்பத்திரங்கள் 15 உள்ளடங்கலாக 35 பரீட்சைகள்.
தரம் 4 விசேட வினாப்பத்திரங்கள் 15 உள்ளடங்கலாக 30 பரீட்சைகள்.
தரம் 1 முதல் தரம் 3 வரை பாடரீதியான 10 பரீட்சைகள்.
ஞாயிற்றுக்கிழமைகளில் பின்வரும் நேரப்படி பரீட்சைகள் நடைபெறும்
காலை 6.00, 8.00, 10.00 மணி மாலை 2.00 மணி, 4.00 மணி
விரும்பிய நேரத்திற்கு பரீட்சைகள் எழுதலாம்.
வினாத்தாள்கள் திருத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்.
அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோர்க்கு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.
உடன் பதிவுசெய்து அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
இடம்: சயன்ஸ் அக்கடமி, நல்லூர்
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக)
தொடர்புகளுக்கு: 0775388471, 0773126807

## உடன் தேவை
இல்லத்துக்கு இயக்குநர், பராமரிப்பாளர், ஆங்கில, சிங்கள, பரதநாட்டிய, சங்கீத ஆசிரியர்கள் தேவை. ஊதியம் நேரடியாக பேசித்தீர்மானிக்கப்படும்.
செஞ்சோலை சிறுவர் பராமரிப்பு இல்லம்,
4,5/2 திருவையாறு, கிளிநொச்சி.
பதிவுஎண்:NEP/PCC/CH/134
தொடர்புகளுக்கு:0213734848 email:sencholai1992@gmail.com

## NEW SCIENCE HALL JAFFNA
## COM. MATHS
திரு.A.குணசிங்கம்
(கொழும்பு பிரபல ஆசிரியர்)

### 2014 A/L
✱மட்டுச் சமனிலி ✱ஆள்கூற்று கேத்திரகணிதம்(நேர்கோடு)
✱மூன்று விசைகளின் சமநிலை ✱சார்பு வேகம்
SUN- 9.00-10.30
SUN- 3.30-05.30

### 2015 A/L
✱சார்புகள்
✱திரிகோண கணிதம்
SUN- 07.30-09.00 } பிரிவு I
MON- 03.30-05.30
SUN- 10.30-12.30 } பிரிவு II
MON- 03.30-05.30

### REPEAT BATCH
✱துரித மீட்டல் வினாவிடை வகுப்பு
✱திரிகோணகணிதம்
✱நுண்கணிதம்
SUN- 01.00-03.30
MON- 07.30-9.00, 1.00-03.00
(C/5705)


## மரண அறிவித்தல்

### அமரர் வேலுப்பிள்ளை நாகரத்தினம்



யாழ்ப்பாணம்,மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 142, துர்க்கை அம்மன் வீதி, திருநகர் வடக்கு, கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப் பிள்ளை நாகரத்தினம் 17.01.2013 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ் சென்றவர்களான சதாசிவம்- இராசம்மா தம்பதியரின் மரு மகனும், காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான கந்தையா, செல்வராணி, நாகேந்திரம், நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் தர்மலச்சுமி, ஸ்கந்தராசா, காலஞ்சென்ற இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் , விஜயபாலன் (உருத்திரபுரம்), ஜெய வாகரன் (சுவிஸ்), ஜெயரஞ்சனி (லண்டன்), ஜெயாளன், காலஞ்சென்ற ஜெயாழினி, ஜெயதீபன் (பிரான்ஸ்), ஜெயாஈசன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்திமலர் யசோ (சுவிஸ்), பாக்கியநாதன் (லண்டன்), மாலதி, துர்க்கா (பிரான்ஸ்), பிரியா (இத்தாலி), விக்னேஸ்வரன், ரட்னேஸ்வரி, தங்கேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும், மஞ்சுளா, வித்தியா, மைதிலி, விஜய ரூபன் (உருத்திரபுரம்), ஜெசின்,யசின், யதுசா(சுவிஸ்), கவின், சுயந்தன், கஜன் (லண்டன்), ஜனுசா, ஜாலவி, (கிளி / மகா வித்தியாலய மாணவிகள்) மாதுரி, மாதேவா (பிரான்ஸ்) அபித்தா (இத்தாலி), விஜேந்திரா,நரேஸ்குமார், காலஞ்சென்ற விஜிதா, விஜிமலர் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2013) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் திருநகர் பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜெயபாலன் (மகன்).
இல.142, திருநகர் வடக்கு,கிளிநொச்சி.
(26145)(6.7.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திரு.வே.கார்த்திகேயன் அவர்களின் அன்புத்தாய்

## விசாலாச்சி வேலாயுதம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சோமாஸ்கந்தப் பெருமானை வேண்டுகின்றோம்.

யா/ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி,
புத்தூர்.

ஆசிரியர் கழகம்.

(28447)


# NALIN IT

யாழ்ப்பாண வர்த்தக கண்காட்சியில் நாம்
hp உடன் 96வது காட்சிக்கூடத்தில்...



கண்காட்சியை முன்னிட்டு Laptops, Brandedsystems, Printers, Scanners போன்றவற்றிற்கு விசேட விலைக்குறைப்பு...



MEGA OFFER WITH LAPTOPS BRANDEDSYSTEMS

18,19,20 ஆகிய தினங்களில் எமது கண்காட்சி கூடத்திலும் நேரடியாக எமது காட்சியறையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

NALIN INFORMATION TECHNOLOGIES Pvt.ltd
195/2, Palaly road, Parameswara Junction, Jaffna.
T.P-0212221121/1166 HOTLINE 0777667974/5 facebook/nalinit


## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA.

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts upto 22nd February 2013.

**FACULTY OF ENGINEERING**

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary)** in Civil Engineering/Electrical & Electronic Engineering/Computer Engineering

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Lecturer Gr.I | Rs.45545 – 7x1050 – 52895/-p.m |
| Senior Lecturer Gr.II | Rs.39755 – 11x790 – 48445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27775 – 10x645 – 34225/-p.m |

Note:
In addition to the above salary, the following allowances will also be paid:

i. Academic allowance –
   Senior Lecturer Gr.I/Gr.II – 72% of the basic salary
   from 01.07.2013 - 80% of the basic salary
   Lecturer (Probationary) – 49.875% of the basic salary
   from 01.07.2013 - 60% of the basic salary

ii. Special allowance -15% of the basic salary

iii. Cost of living allowance of Rs.6,600/-p.m

Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff

**Statutory benefits:**

i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
iii) Gratuity payments
iv) Employees' Trust Fund benefits
v) Free Medical Services.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**18.01.2013**

# மரண அறிவித்தல்கள்

## சிவகுமார் விமலசோதி (வசந்தி)



குப்பிளானைப் பிறப்பிடமாவும், ஊரங்குனை வடக்கை வதிவிடமாகவும், தற்போது ஜேர்மனியில் வசித்தவருமாகிய சிவகுமார் விமலசோதி (வசந்தி) கடந்த (15.01.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், சிவகுமாரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், கணேசலிங்கம் (சுவிஸ்), விக்னேஸ்வரன் (ஜேர்மனி), றோஸ்மலர் (வவுனியா), திருச்செல்வராணி (சுவிஸ்), தயாளன் (பின்லாந்து), சசிக்குமார் (பின்லாந்து), ரமேஸ்குமார் (நோர்வே), செல்வரஜணி (நோர்வே), வசந்தகுமார் (நோர்வே), சாந்தகுமார் (நோர்வே), அருட்செல்வம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவசங்கர் (கனடா), சிவரஞ்சினி (அனுசா-கொலன்ட்), நிரோஜன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், கிருஷாலினி, சசிக்குமார் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான சிவபாதம், சந்திராதேவியின் பெறாமகளும், சுமதி (சுவிஸ்), சாந்தநாயகி (ஜேர்மனி), சின்னத்தம்பி (கோபால்- வவுனியா), காலஞ்சென்ற திருச்செல்வகுமார் மற்றும் இராசேந்திரன் (சுவிஸ்), ஞானேஸ்வரி (சுவிஸ்), சாந்தகுமார் (சுவிஸ்), ஆனந்தன் (ஜேர்மனி), சித்திரா (கனடா), இந்திராதேவி (சுவிஸ்), நந்தகுமார் ஆகியோரின் மைத்துனியும், சிநேகா, அனுமிகா, ஹரிகரன் ஆகியோரின் பேர்த்தியும், கரன் (பிரான்ஸ்), மயூரன் (நோர்வே), சுரேந்து (நோர்வே) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (21.01.2013) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ஆம் ஒழுங்கை, நெளுக்குளம்,
வவுனியா.
0244920724, 004915213304308

தகவல்:
சின்னத்தம்பி,
றோஸ்மலர்.

## சீவரத்தினம் சண்முகலிங்கம்



யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பெரிய தம்பி என்று அன்பாக அழைக்கப்படும் சீவரத்தினம் சண்முகலிங்கம் கடந்த (16.01.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - அன்னபூரணம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான பரமசாமி - சேதுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், வித்தியா (நோர்வே), திவ்யா (நோர்வே), ரமேஸ் (நோர்வே), நித்தியா (கிளி/ பூநகரி மகா வித்தியாலயம்), சத்தியா (ஸ்ரான்டட் கிரடிற் லங்கா கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகேஸ்வரன் (நோர்வே), ஜவ்பர் (நோர்வே), சுதர்சினி (நோர்வே), செங்கையாழியன் (யாழ். கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனும், கேசிகா, சுவேகா, டார்விஸ், டன்ஸ்ரன், ஹரிஸ், சுபேஸ், லிதர்சன், கோபிசன், இராகவி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் சாரதாதேவி, காலஞ்சென்றவர்களான குகதாசன், கோசலாதேவி, புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் கோமதி, காலஞ்சென்ற ஸ்ரீ கணேசா மற்றும் குகதாசன், இராசலட்சுமி, கணேசலிங்கம் (இலங்கை மின்சார சபை), ஸ்ரீலட்சுமி, கெங்காதேவி, சொர்ணலிங்கம் (இலங்கை மின்சார சபை), அன்னலிங்கம் (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

[illegible] வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xerox டிஜிற்றல் முறையில் கலர் பிறிண்ட்

யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ்


666, கே.கே.எஸ் வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மிக அருகாமை)

தொ.பே: 0771974875 கல்விச்சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்


# மரண அறிவித்தல்

## ஜோர்ச் கென்றி இராசநாயகம்

(முன்னாள் ஊழியர் மாநகரசபை)



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜோர்ச் கென்றி இராசநாயகம் நேற்று முன்தினம் (17.01.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.01.2013) சனிக்கிழமை மாலை 3 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப் படும்.

இல.75(18),
4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.
0750442209

(28450)

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை சரச்சந்திரன்

(ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சரச்சந்திரன் (17.01.2013) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் நவஜோதியின் (ரவி) அன்புக் கணவரும் வினோதன் (ஆஸ்திரேலியா) விஜிதன் (கனடா) வினோதினி (றாஜி -கொழும்பு), லாலினி (டாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

V.T.S வீதி
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்.
0214909823

(28603)(14.6)

# ராசமாணிக்கத்தின் 100ஆவது பிறந்த தினம்

அம்பாறை,ஜன.19

இலங்கை தமிழரசுக் கட் சியின் முன்னாள் தலைவர் அமரர் சி.மு.ராசமாணிக்கத்தின் 100 ஆவது பிறந்த தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு களுவாஞ்சிக் குடியில் அமைந் துள்ள அவரின் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள அவரின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்தலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா கலந்து கொள் வார்.

இந்த விழாவில் அனைத்து தமிழ்த் தேசிய உணர்வாளர் களும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு விழாக் குழு வினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-30)


உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

கணினி திருத்தம்
(Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா?
உடன் உங்களது வீடுகளுக்கே வந்து
உரிய முறையில் திருத்தித் தருகின்றோம்.

GUNAA BEST PC
52,Hospital Road
Jaffna.


## தவறிவிட்டது

ஜெயராசா தனுசியா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (868073780V) உள்ளடங்கிய பேஸ் கல்வியங்காட்டுச் சந்திக்கும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் இடையில் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்

தொடர்பு: 0770051427

(28601)(14.6)

## வீடு வாடகைக்குத் தேவை

சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. யாழ்.மாநகர சபை எல்லைக்குள் விரும்பத்தக்கது. முற்பணம் தரப்படும்.

தொ.பே: 0776412807, 0776048921


COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane, (off Stanly Rd), Jaffna
Phone - 0212228250

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2013

O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| Courses | Fee | Duration |
|---|---|---|
| Dip.in Microsoft Office -2007 | 1000 | 3Months |
| Dip.In Desktop Publishing | 1000 | 4Months |
| Dip.in Webpage Designing | 1000 | 4Months |
| Dip.in Graphic Designing | 1000 | 4Months |
| Dip.in Hardware | 1000 | 3Months |
| Dip.in Accounting Package | 3000 | 4Months |
| Dip.in Multimedia | 3000 | 4Months |
| Dip.in Video Editing | 3000 | 3Months |

Tally வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

வகுப்புக்கள் ஆரம்பம் 11AM / 03PM
Batch I : 19/01/2013 Batch II : 20/01/2013
Batch III : 23/01/2013 Batch IV : 25/01/2013


## வட இலங்கை ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்ல ஆச்சிரமம் வதிரி, கரவெட்டி

தொலைபேசி இல 0212263136, 0213215156

### பணிநிலை வெற்றிடம்

(1). சிறுவர் மேற்பார்வையாளர்

தகமை

பால்: இரு பாலாரும்

வயது: 35க்கு மேல்

கல்வி: க.பொ.த. (சா/த)

அரச அரசசார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விசேட குறிப்பு: சைவசமய பற்றுடையவராகவும், சிறுவர்களை நன்னெறிப்படுத்தக் கூடியவராகவும், விடுதியில் தங்கியிருக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

(2). சமையலாளர்

தகமை:

பால்: பெண்

வயது: 35க்கு மேல்

விசேட குறிப்பு: சைவ சமயத்தவராகவும், சமையல் வேலை தெரிந்தவராகவும், விடுதியில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

- சம்பளம் பேசித்தீர்மானிக்கப்டும்
- விண்ணப்பம் முடிவுத்திகதி: 31.01.2013
- விண்ண்ப்ப அனுப்பி வைக்கவேண்டிய முகவரி: தலைவர், ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்ல ஆச்சிரமம், வதிரி, கரவெட்டி.


தர்மகர்த்தா சபை.

(C/5730)

# மரண அறிவித்தல்

## கந்தையா சின்னத்துரை

(முன்னாள் உத்தியோகத்தர், சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை)



சாவகச்சேரி கெருடாவிலைப் பிறப்பிடமாகவும், மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்துரை கடந்த (16.01.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா-கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகனும், விசாலாட்சியின் அன்புக் கணவரும், தெய்வானைப்பிள்ளை,அன்னப் பிள்ளை, சுப்பையா, பொன்னம்மா, செல்லத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவகுரு-நல்லம்மா, நல்லையா-யோகம்மா, வீரசிங்கம்-தெய்வானைப் பிள்ளை, ஏகாம்பரம்- செல்லமுத்து, முத்துத்தம்பி-இந்திரபூபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கலாறஜனி(சுவிஸ்), சிறிதரன்(சுவிஸ்), பாஸ்கரதாஸ்(சுவிஸ்) கலைவாணி (நோர்வே), நிமலராணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ,அழகேஸ்வரன்(சுவிஸ்), கணேசமலர் (சுவிஸ்), சிபில்(சுவிஸ்), ஸ்ரீராகவன் (நோர்வே), சிவகாந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், அபினா, கஜன், அதீபா, சிந்துஜன், சுஜீபன், ஆரூஜன், சாமீர், செல்வன், கபின், சகானா, சகீனா, நிச்சன், லச்சன், கஜானா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு மு.ப. 11.00மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| குமார்(மீசாலை)- இலங்கை | +940776702513, |
| கலாறஜனி அழகேஸ்வரன்- சுவிஸ்லாந்து . | +41617514526 |
| சிறிதரன் சின்னத்துரை- சுவிஸ்லாந்து. | +41434118842 |
| பாஸ்கரதாஸ் சின்னத்துரை- சுவிஸ்லாந்து | +41792094338 |
| கலைவாணி ஸ்ரீராகவன்- நோர்வே | +4722108368 |
| நிமலராணி சிவகாந்தன்- பிரித்தானியா | +442089092330 |

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## கணேசநாதன் தில்லைநாதன்

(உப அதிபர், கொ / விவேகானந்தாக் கல்லூரி)

புலோலி மேற்கு தம்பசிட்டியை பிறப்பிடமாகவும் சோளங்கன் கரணவாய் தெற்கை வசிப்பிடமாகவும் வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட க . தில்லைநாதன் கடந்த (17.01.2013) வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசநாதன் - கமலாதேவி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் சோளங்கன் கரணவாய் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தவமணி தம்பதியரின் மருமகனும் பகீரதியின் அன்புக் கணவரும் தேனுசாயினி , குருசாயினி, (2012 A/L இந்துமகளிர் கல்லூரி), சாய்கணேஷ்வரன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலாதேவி, Dr.இரகுநாதன், Dr.கேதீஸ்வரநாதன், கோகுலநாதன் (பொறியியலாளர்), Dr.வைகுந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயகுமார், யசோதா,மங்களேஸ்வரி, நேமிநாதன் (கோபு), தர்மகுலசிங்கம், இரஞ்சனி(பிரதித்திட்டமிடல் பணிப்பாளர், சாவகச்சேரி), கௌரி, இரஞ்சனி, பிரியங்கா ஆகியோரின் மைத்துனரும் Dr.சுவேந்திரன், இந்திரகுமார், கவிதா, மேனகா ஆகியோரின் சகலனும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (19.01.2013) சனிக்கிழமை 8.00am - 8.00pm வரை அஞ்சலிக்கு வைக்கப்பட்டு நாளை (20.01.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்

Baswell
33 4/5,baswell place,co -06
தொடர்பு : 0713724825

தகவல்
மனைவி,
பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி



























Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி -2013
























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி -2013






























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி -2013

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி -2013



























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி -2013





























Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி -2013
































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவக் குணம் உள்ள சீத்தா



மருத்துவ பண்புள்ள சீதாப் பழத்தின் (அன்னமுன்னா) தோல், விதை, இலை, மரப்பட்டை அனைத்துமே அரிய மருத்துவ பண்புகளை கொண்டவை. சீதாப் பழத்தில் நீர்ச்சத்து அதிகமாக உள்ளது. மேலும் மாச்சத்து, புரதம், கொழுப்பு, தாது உப்புக்கள், நார்ச்சத்து, சுண்ணாம்புச்சத்து, பொஸ்பரஸ், இரும்புச் சத்து போன்றவை அடங்கியுள்ளன. இத்தகைய சத்துக்கள் சீத்தாப் பழத்தில் அடங்கியிருப்பதால்தான் இப்பழம் மிகுந்த மருத்துவ பயன்களை கொண்டுள்ளது.

★ சீத்தாப் பழத்தை உண்ண செரிமானம் ஏற்படும்.

★ சீத்தா பழச் சதையோடு உப்பை கலந்து உடையாத பருக்கள் மேல் பூசி வர பரு பழுத்து உடையும்.

★ இலைகளை அரைத்து புண்கள் மேல் போட்டுவர புண்கள் ஆறும்.

★ விதைகளைப் பொடியாக்கி சம அளவு பொடியுடன் சிறு பயிறு மா கலந்து தலையில் தேய்த்து குளித்து வர முடி மிருதுவாகும்.

★ சீத்தாப்பழம் குளிர் மற்றும் காய்ச்சலை குணப்படுத்தும்.

★ சீத்தாப்பழ விதை பொடியோடு கடலை மா கலந்து எலுமிச்சை சாறில் குழைத்து தலையில் தேய்த்து ஊறிய பின்னர் குளித்து வர முடி உதிராது.

★ சீத்தாப்பழ விதைப்பொடியை மட்டும் தலையில் தேய்த்து குளித்து வந்தால் முடி உதிராது.

★ சிறுவர்களுக்கு சீத்தாப்பழம் கொடுத்து வர எலும்பு உறுதியாகும், பல்லும் உறுதியாகும்.

★ சிறிதளவு வெந்தயம், சிறு பயறு இரண்டையும் இரவு ஊறவைத்து பின்னர் காலையில் அரைத்து, இதோடு சீத்தாப்பழ விதைப் பொடியை கலந்து தலையில் தேய்த்து, ஊறிய பின்னர் குளித்து வர தலை குளிர்ச்சி பெறும், முடியும் உதிராது, பொடுகு காணாமல் போகும்.

★ சீத்தாப் பழத்தை தொடர்ந்து உண்டு வந்தால் இதயம் பலப்படும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Sobana

ச. சத்தியசோபனா
சிரேஷ்ட நிதி அதிகாரி
ZOA

CMA — Institute of Certified Management Accountants of Sri Lanka

Incorporated by Parliament Act No. 23 of 2009

"நான் ஒரு CMA தகுதிபெற்ற சிரேஷ்ட நிதி அதிகாரி..."

"CMA தகுதிபெற்ற நான் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். CMA கற்கை நெறியை ஆரம்பிக்கையில் நிதி உதவியாளராக எனது பணியைத் தொடங்கி பல தேசிய மற்றும் சர்வதேச சேவை அமைப்புக்களுடன் சேவையாற்றி தற்போது ZOA எனும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தில் சிரேஷ்ட நிதி அதிகாரியாக சேவையாற்றுகின்றேன். அதில் நான் திட்ட முகாமையாளர்களுக்கு நிதி சம்பந்தமான முடிவுகளை மேற்கொள்ள உதவியும், திட்டங்களை மேம்படுத்தவும், வியாபார திட்டங்களில் நிதி மற்றும் முகாமைத்துவ நடைவடிக்கைகள் சம்பந்தமான அறிவுரைகளை மேற்கொள்ள உதவி வருகின்றேன்.

CMA ஆனது வியாபார நடவடிக்கைகளான நிதி, மனிதவளம், நடவடிக்கைகள், முகாமைத்துவம் போன்ற இன்னும் பல முக்கிய விடயங்களை உள்ளடக்கியுள்ளதால் அது என்னை குறுகிய காலத்தில் இந்தளவிற்கு தொழில்முறையில் மேம்படுத்தி சிறந்த முறையில் சிந்திக்க ஏதுவாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது."

## CMA தனித்துவமானது

தொழில்முறை முகாமைத்துவ கணக்கியல் துறையில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எமது நிறுவனமானது. CMA கனடா இன் தொழில்நுட்ப ஆதரவுடன் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு இல.23 பாராளுமன்ற ஒருங்கிணைந்த சட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கையின் ஒரேயொரு தேசிய தொழில்முறை முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம் CMA ஆகும்.

க.பொ.த. உ/த பரீட்சை பெறுபேறுகளுக்காக காத்திருப்பவர்கள், AAT கற்கைநெறி இடைநிலை செய்தவர்கள், பட்டதாரி பயிலுனர்கள் / பட்டதாரிகள், பகுதி அல்லது முழுமையான தொழில்முறை தகைமை பெற்றவர்களுக்கும் பதிவு செய்தல் ஆரம்பமாகியுள்ளது. பதிவு செய்வதற்கான கடைசி நாள் 2013 ஜனவரி 31 ஆம் திகதி ஆகும்.

- செலவு குறைவு. வெளிநாட்டு முகாமைத்துவ கணக்கியலுக்கான செலவில் பத்தில் ஒரு மடங்கே செலவு.
- பட்டதாரிகள், பட்டதாரி பயிலுனர்கள், வேறு தொழில்முறைத் தகைமை பெற்றவர்கள், மற்றும் பகுதியாக தொழில்முறையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு கவர்ச்சிகரமான விலக்களிக்கப்படும்.
- விரும்பிய மொழியில் கற்கலாம். (ஆங்கிலம் / தமிழ் / சிங்களம்)
- இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் வியாபார முகாமைத்துவ கல்வியின் (BMS) பட்டத்திற்கு விலக்களிப்பு வழங்கப்பட்டு பட்டதாரியாகலாம்.
- பட்ட மேற்படிப்பிற்கு நுழைவுத்தகைமை. (PIM ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)
- கனடாவின் CGA, அவுஸ்திரேலிய CPA மற்றும் ACCA-UK ஆகியவற்றிற்கு விலக்களிப்பு வழங்கப்படும்.


Mel Ads

HOTLINE: 0112 506 391

இலங்கையில் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ காணக்காளர்கள் நிறுவனம்
இல. 29/24, விசாகா ஒழுங்கை, கொழும்பு - 04.
தொ.பே/தொ.நகல்: 011 2506391, 011 2507087 (Fax-Ext.118)
மின்னஞ்சல்: info@cma-srilanka.org இணையதளம்: www.cma-srilanka.org

eLearning CMA DISTANCE LEARNING


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
27.08.1950

மறைவு
21.12.2012

## அமரர் கணபதிப்பிள்ளை குருநாதபிள்ளை

எமது குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் 17.01.2013 வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (19.01.2013) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் காலமான செய்தியறிந்து நேரில் வந்து எமது துயரில் பங்கு கொண்டோருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், வேறு பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும். எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பேச்சியம்மன் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்.

(28412)(2-6-7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## ஜெயக்குமாரி சங்கரப்பிள்ளை

இறப்பு
17.12.2012

பிறப்பு
14.03.1975

திதி: 20.10.2013

அன்போடும் பண்போடும் ஆதரவாய் வாழ்ந்திருந்தீர்
நெஞ்சோடு உம் நினைவு நித்தமும் உறவாட வைத்துச் சென்றீரோ
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கடந்த 17.12.2012 அன்று காலமான ஜெயக்குமாரி சங்கரப்பிள்ளை அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை(20.1.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

'லிங்க பவனம்'
கரணவாய் மத்தி, கரவெட்டி.

குடும்பத்தினர்.
தொ.பே.: 021 226 3943

(28351) (5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dip. in Mobile Phone Repairing Course
**வவுனியாவில் நம்பிக்கையான நிரூபிக்கப்பட்ட கற்கை நெறி**

4 Days

100 % Success

ஆயிரக்கணக்கான கையடக்க தொலைபேசி திருத்துநர்களை உருவாக்கிய முதல் தரவிற்பன்னர்

Ganesh - K

★ வயதெல்லை கிடையாது ★ கல்வித் தகைமை தேவையில்லை.

Sun British Business College

077 6131 358 077 3466 949

(27616) (45.6.7)

## பழைய மாணவர் சங்கம் யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லிக்கல்லூரி)

பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் **எஸ்.விஜயக்காந்** (தலைவர்) அவர்களின் தலைமையில் நாளை (2013.01.20) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்திற்கு அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகமளித்து புதிய செயற்குழு உறுப்பினர்களின் தெரிவிற்கு தங்களின் ஒத்துழைப்பை நல்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர், செயலாளர், பழைய மாணவர் சங்கம்
யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்,
(ஸ்ரான்லிக்கல்லூரி).

(கி/5425) (6.745)

## ஓராண்டு நினைவஞ்சலி



(வரணியைப் பிறப்பிடமாகவும் உடையார்கட்டை வதிவிடமாகவும் கொண்ட)

அமரர்
**கந்தையா கற்பகப்பிள்ளை**

மண்ணில்
09.01.1941

விண்ணில்
31.01.2012

ஆண்டொன்று கழிந்ததம்மா – இன்று
ஆனாலும் உங்கள் நினைவுகள் – அழியவில்லை
அருமையான உமது திருமுகத்தை – மீண்டும்
அன்புடனே காண்பதற்குத் தவிக்கின்றோம்

*என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தனை செய்யும்*

அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
இருட்டுமடு, உடையார்கட்டு.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 1943.09.14

இறப்பு 2012.12.20



**அமரர் எலியாஸ் மரியநாயகம்**

அன்பின் இறைவா!
மண்ணில் இருந்து விண்ணுக்கு அழைத்துக் கொண்ட உமது அடியான் அவர்களின் ஆன்மாவுக்கு
நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும். ஆமென்.

இவரின் பிரிவால் துயருறும்
மைத்துனர்கள்,
குடும்பத்தினர்.

24/5, மத்திய கிழக்கு வீதி,
குருநகர்.

(28347) (2-6-7)

## மூத்த பிரஜைகளுக்கு வடக்கில் சேவை நிலையம்

வடமாகாணத்தில் மூத்த பிரஜைகளுக்கான சேவை நிலையங்கள் 12 இயங்கி வருகின்றன.

புத்தூர் மெதடிஸ் மிஷன் முதியோர் இல்லம், சுழிபுரம் வழக்கம்பரை சிவபூமி முதியோர் இல்லம், கரவெட்டி வதிரி ஸ்ரீ பரமானந்தா முதியோர் இல்லம், கொழும்புத்துறை கடற்கரை வீதி சென் ஜோஸ் முதியோர் இல்லம், திருநெல்வேலி பிறவுண் வீதி அம்மா இல்லம், மருதங்குளம் வவுனியா எல்லப்பர் சிவன் முதியோர் இல்லம், கிளிநொச்சி அறிவியல் நகர் எஸ்.கே. முதியோர் இல்லம், மன்னார் பட்டித்தோட்டம் சாந்தம் முதியோர் இல்லம், மன்னார் திருக்கேதீச்சரம் முதியோர் இல்லம், கோப்பாய் அன்னை திரேசா முதியோர் இல்லம், வவுனியா பம்பைமடு அன்னை திரேசா முதியோர் இல்லம் ஆகியனவையே இந்தச் சேவை நிலையங்களாக உள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம-5)

## 50ஆவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTH DAY

கைதடி வடக்கைச் சேர்ந்த
திருமதி
**கனகலிங்கம் சத்தியவதி (சத்தி)**
தனது 50ஆவது பிறந்தநாளை
இன்று [19.01.2013] சனிக்கிழமை
பி.ப. 4.00மணியளவில்
தனது இல்லத்தில்
வெகு விமரிசையாக
கொண்டாடுகின்றார்.
இவரை கயிற்றசிட்டி கந்தன்
அருளால் சகல
நலன்களும் பெற்று
பல்லாண்டு காலம்
நீடூழி வாழ வாழ்த்துவோர்.





கனகலிங்கம் (கணவர்),
கஜேந்தினி
(கவிதா-மகள்-சுவிஸ்),
லோகநாதன்
(லோகன்-மருமகன்-சுவிஸ்)
அஷ்சயா, அஷ்வினி
(பேரப்பிள்ளைகள்)
வாமதேவன் குடும்பம்,
புகழேந்தி குடும்பம்,
கந்தையா-இந்திராணி குடும்பம் } கைதடி
முருகையா குடும்பம் } கைதடி
தேவதாஸ் குடும்பம் (டென்மார்க்)
கிருபதாஸ் குடும்பம் (டென்மார்க்)
ராஜன் குடும்பம் (டென்மார்க்)
குணலிங்கம் குடும்பம் (டென்மார்க்)
ஸ்ரீதரன் (இத்தாலி)
கனகலிங்கம் சகோதர் குடும்பங்கள்
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

கைதடி வடக்கு, கைதடி.
021 300 6526

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதியில் முன்பக்கம் கடையும் பிற்பகுதியில் வீடும் உள்ள கட்டடம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0770790690

## விற்பனைக்கு

சொந்தப் பாவனையிலுள்ள Scooty pep (NPMD xxxx) மோட்டார் சைக்கிளும், Passion Pro(NPWD xxxx) மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு.(தரகர் தேவையில்லை)

தொடர்பு: 077 3126637

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரிய பெற்றோர் தங்களது 1983 இல் பிறந்த 5.5' உடைய படித்த தற்போது கனடாவில் வசிப்பவருமான (Non- R.C) மகனுக்கு கனடாவிற்கு Sponser செய்யக் கூடிய மெல்லிய சிவந்த அழகிய 28 வயதுக்குட்பட்ட (NON R-C OR R.C) மணமகளைத் தேடுகின்றார்கள்.

தொடர்பு விளம்பர இல. 4431
C/O உதயன் 361 , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## தரம் 5 புலமைப்பரிசில் - 2013 (மாதிரிப் பரீட்சை)

கடந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் அநேக மாணவர்களை சித்தியடைய வைத்த இலங்கையின் முன்னணி ஆசிரியர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட நாவலர் வெளியீடான

**‘புலமைச் சிட்டு’’**

மாதிரி வினாத்தாள் (விடைகளுடன்) ஞாயிறு தோறும் வெளிவரவுள்ளன.

**1ஆவது பரீட்சை - 20.01.2013 ஞாயிறு**

★ பரீட்சைக்கு தோற்ற விரும்பும் வெளிமாணவர்களுக்காக விரும்பிய 6 நேரங்களில் பரீட்சை

**பரீட்சை நடைபெறும் இடம்:**

**புதிய நாவலர் கல்வி நிலையம்**
**ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.**

வினாத்தாள் பெறவிரும்பும் பெற்றோர்கள், பிரத்தியேக வகுப்புகள், கல்வி நிலையங்கள், பாடசாலைகள் 19.01.2013 இக்கு முன் தொடர்புகொள்ளவும்.

**மேலதிக விவரங்களுக்கு**

ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.

## அகில இலங்கை அரச சேவை சித்த ஆயுள் வேத வைத்திய அதிகாரிகள் சங்க பொதுக்கூட்டம்

25.01.2013 வெள்ளிக்கிழமை அன்று முற்பகல் 10.0 0 மணிக்கு கைதடி சித்த போதனா வைத்திய சாலை மண்டபத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும் என்பதை அறியத்தருவதோடு, அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு: 0777774600 செயலாளர்.

## Study in the UK / Canada / Australia / New Zealand

**April/May INTAKES IN PROGRESS**

**SETTLEMENT VISA**

(கணவன்/மனைவி) மூலம் UK, Australia, Canada, U.S.A செல்பவர்களுக்கான வீசா தொடர்பில் ஆவணங்கள் வெற்றிகரமாகச் செய்து தரப்படும்

**TOURIST VISA / FAMILY VISIT VISA**

உட்பட அனைத்து நாடுகளின் வீசாவுக்களுக்குமான ஆலோசனைகளும், ஆவணங்களைத் தயார்படுத்துதல் தொடர்பில் நிபுணத்துவமான சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.

**100% வீசா உத்தரவாதம் Guaranteed**

Eisc **EXPRESS**
**INTERNATIONAL STUDIES & CONSULTANTS**
30-1/14, W.A.De Silva Mawatha Colombo-06
(Above Hotel Green Palace)
Tel: 2500207 E-mail: eisc_2007@yahoo.com
Robin-0777 222 422 Selva-0714 299 935
Web: www.expresslanka.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயிற்றுக்கு நண்பன் தேன்



இயற்கை அளித்த அருங்கொடை தேன். குழந்தைகள் இருக்கும் எல்லா வீடுகளிலும் தேனை வைத்திருப்பது அவசியம். 70 வகையான விற்றமின் சத்துகள் அதில் அடங்கியுள்ளன. தேனில் உள்ள சத்துகள் உடலில் உள்ள ஜீரண பாதையில் சுலபமாக கிரகிக்கும். தேன் ஏழு வகைப்படும். ஆனால் ஒரு தேனீ எந்த செடியில் இருந்து தேனை சேகரிக்கிறதோ, அதன் மருத்துவ குணத்தை பெற்றுவிடுகிறது. கொம்பு தேன், மலைத்தேன், மரப்பொந்து தேன், மலைத் தேன், புற்றுத்தேன், புதிய தேன், பழைய தேன் என ஏழு வகை உள்ளன.

ஆனால், இவற்றில் மலையில் உள்ள மரம் செடிகளில் இருந்து சேரிக்கப்படும் தேனில் மூலிகை மருத்துவ குணம் சேர்ந்து இருப்பதால் மருந்து பொருள்களுடன் சேர்ந்து உண்பதற்கு ஏற்றது. பித்தம், வாந்தி, கபம் சம்பந்தமான நோய்கள் வாயுத் தொல்லை, இரத்தத்தில் கலந்துள்ள விஷ அணுக்களை நீக்கி சுத்தம் செய்யக்கூடிய சக்தி தேனுக்கு உண்டு. பொதுவாக தேனுடன் மருந்துகளை கலந்து கொடுப்பதால் ஜீரண பாதையில் வெகு விரைவில் மருந்து உறிஞ்சப்பட்டு விடும். இரத்த ஓட்டத்தில் மருந்து விரைவில் செயல்படும்.

*தேனுடன் இஞ்சி, விதை நீக்கிய பேரிச்சம் பழம் இரண்டையும் ஊற வைத்து சாப்பிடுவதால் நோய் எதிர்ப்பு சக்தி பெருகுவதுடன், மலச்சிக்கல் ஏற்படுவதும் குறையும். ஒரே டம்ளர் வெந்நீர் அல்லது சூடுபடுத்தப்பட்ட பாலில் மூன்று தேக்கரண்டி தேன் கலந்து இரவு படுக்கைக்கு செல்லும் முன் அருந்தினால் தூக்கம் நன்றாக வரும்.*

மருந்துகளில் வீரியம் அதிகமாக இருந்தால், தேனை கலந்து சாப்பிடும் போது குடல்களுக்கு ஏற்படும் பின் விளைவுகளை தடுத்து நிறுத்திவிடும். தேன் சேர்த்து தயாரிக்கும் உணவுகள் மருந்து, நீண்ட நாள் கெடுவதில்லை. தேனில் சர்க்கரை சத்து அதிகமாக இருப்பதால் கடும் உழைப்பாளிகள், விளையாட்டு போட்டிகளில் ஈடுபடுவோர் அவ்வப்போது தேன் கலந்த பானம் பருகலாம். இதனால், உடலில் ஏற்படும் களைப்பு நீங்கும். தேனில் உள்ள குளுக்கோஸ் சத்து சிறிய இரத்த நாளங்களை சீராக விரிவடைய செய்து, இரத்த ஓட்டத்தை சீராக்கும். இதனால், இதயத்திற்கு ஏற்படும் பாதிப்பு தடுக்கப்படும். கண் நோய், தோல் நோய்களுக்கும் தேனை பயன்படுத்தலாம்.

தேனுடன் இஞ்சி, விதை நீக்கிய பேரிச்சம் பழம் இரண்டையும் ஊற வைத்து சாப்பிடுவதால் நோய் எதிர்ப்பு சக்தி பெருகுவதுடன், மலச்சிக்கல் ஏற்படுவதும் குறையும். ஒரே டம்ளர் வெந்நீர் அல்லது சூடுபடுத்தப்பட்ட பாலில் மூன்று தேக்கரண்டி தேன் கலந்து இரவு படுக்கைக்கு செல்லும் முன் அருந்தினால் தூக்கம் நன்றாக வரும். நோய் எதிர்ப்பு தன்மை பெருகி, உடல் ஆரோக்கியம் ஏற்படும். நாள்தோறும் 100 கிராம் தேன் கலந்த பானம் பருகினால் இரத்த சோகை ஏற்படுவது தடுக்கப்படும்.

தொடர்ந்து ஆறு வாரம் அருந்தினால் இரத்தத்தில் சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை அதிகரித்து இரத்த சோகை முற்றிலும் நீங்கி விடும். உடல் அழகையும், குரல் இனிமையையும் ஏற்படுத்தித் தரும் குணம் தேனுக்கு உண்டு. வயிற்றுக்கு சிறந்த நண்பன் என்றால் அது தேன்தான். தினமும், 3 டீஸ்பூன் தேனை 100 மில்லி லீற்றர் வெந்நீரில் காலை அல்லது இரவு நேரத்தில் வெறும் வயிற்றில் அருந்தினால், வயிற்றுப்புண், இரைப்பை அலர்ஜி, ஈரல், பித்தப்பை நோய்கள் குணமாகும். குறிப்பாக அமிலத் தன்மையை கட்டுப்படுத்தி அல்சர் நோயை குணப்படுத்தும்.

### சுத்தமான தேனை தெரிவு செய்வது எப்படி?

சுத்தமான தேனில் மகரந்தம் கலந்திருக்கும். இடத்துக்கு இடம் இது மாறுபடும். இளம் மஞ்சள் நிறத்தில் இருக்கும். நாளடைவில் மங்கிய நிறத்துக்கு மாறிவிடும். ஆறு மாதத்துக்குத் தேனை வைத்திருந்து சாப்பிடலாம். தேனில் உள்ள சர்க்கரை சத்து, விற்றமின் சத்து, உலோகச்சத்து உடலுக்கு ஏற்றது. சில சமயங்களில் தேனில் கலந்துள்ள மகரந்தம் சிலருக்கு அலர்ஜியை ஏற்படுத்தும்.

தேன் கலப்படம் செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிய சிறிதளவு தேனில், தீக்குச்சியை சில விநாடிகள் ஊற வைத்து துடைத்து தீப்பற்ற வைக்க வேண்டும். குச்சி சீக்கிரம் எரிந்தால் தேனில் சர்க்கரை கலப்படம் இல்லை என்பதை அறியலாம். அல்லது மை உறிஞ்சும் காகிதத்தில், செய்தித் தாளில் சிறிதளவு தேனை ஊற்றி சில நிமிடங்கள் வைத்திருக்க வேண்டும். பேப்பர் தேனை உறிஞ்சாமல் இருந்தால் அது நல்ல தேன் என்பதை அறிந்து கொள்ளலாம். ★


இலங்கையில் அதிக விருதுகளை வென்றெடுத்த கொமர்ஷல் வங்கி

- இம்முறையும் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி - 2013 இல் பங்கேற்கிறது.
- எமது கண்காட்சி கூடத்திற்கு வருகைதந்து விசேட வெகுமதிகளையும், விசேட பரிசில்களையும் வென்றிடுங்கள்.

COMMERCIAL BANK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org